REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூன் 7 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 135 | Friday 07, June, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## தடைசெய்யப்பட்ட விவசாய பொருட்கள் கடற்படையால் மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகை விவசாய இரசாயன பொருட்கள், கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் (05) கடற்படையினரால் 06




## இராஜகிரிய 'ரோயல் பார்க்' கொலை குற்றவாளி ஜூட் சமந்தவுக்கு 02 சந்தர்ப்பங்களில் பொதுமன்னிப்பு

# அரசியலமைப்பை மைத்திரி மிக மோசமாக மீறியுள்ளார்



### உயர் நீதிமன்றம் ஏகமனதாக நேற்று தீர்ப்பு; ஜனாதிபதி பொது மன்னிப்பும் இரத்து

- நாட்டிலிருந்து தப்பியோடிய குற்றவாளியை கைது செய்யவும் உத்தரவு
- பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சொந்த பணத்தில் இழப்பீடு வழங்கவும் மைத்திரிக்கு கட்டளை

இராஜகிரிய 'ரோயல் பார்க்' கொலைச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட டொன் ஜூட் சமந்த அந்தோனி ஜயமஹாவுக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய 'ஜனாதிபதி பொது மன்னிப்பு' செல்லுபடியற்றதாக்கப்படவுள்ளது. உயர் நீதிமன்றம் நேற்று (06) இதுகுறித்து ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

பொது மக்களால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட இறைமை அதிகாரம் பாரிய வகையில் மீறப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கு எதிராக அரசாங்கம் வேண்டுமென்றே செயற்பட்டுள்ளதால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை செல்லுபடியற்றதாக்குவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று (06) ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

கைதி ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எதுவும், இதன் போது பின்பற்றப்படவில்லை. அத்தோடு முன்னாள் ஜனாதிபதி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, சட்ட விதிகளுக்கு மாறாக செயற்பட்டுள்ளதாகவும் 06

## மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் மறு அறிவித்தல் வரை, இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவு நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நேற்று குறைப்பு

லங்கா ச.தொ.ச நிறுவனம் 07 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

உருளைக்கிழங்கு, மா, வெள்ளை கௌபி, சிவப்பு கௌபி, செத்தல் மிளகாய், நெத்தலி, வட்டானா பருப்பு ஆகியவற்றின் விலைகளையே குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைவாக இவ்விலை குறைப்பு நேற்று (06) வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## நவீன உலகத்துக்கு ஏற்ற வகையில் மாணவர்களின் கல்வி உரிமை உறுதி

### 21 வயதில் பட்டப்படிப்பு; 27 வயதில் கலாநிதி பட்டம்



நவீன உலகத்துக்கு ஏற்ற வகையில், 21 வயதில் முதல் பட்டப்படிப்பையும், 23 வயதில் பட்ட பின்படிப்பையும், 27 வயதில் கலாநிதி பட்டத்தையும் பூர்த்தி செய்யும் வகையில், மாணவர்கள் கல்வி உரிமையை உறுதி செய்வதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாலந்தா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த 06

## அரசியல் அலுவலகத்தை திறந்து வைத்தார் ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை நேற்று (06) சுப நேரத்தில் திறந்து வைத்தார்.

புதிய அலுவலகம், கொழும்பு சேர். ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் அமைந்துள்ளது. எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படும்.

நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல் மாகாண பிரதம சங்கநாயக்க, கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கொள்ளுப்பிட்டி 06

## மின்சார கட்டணங்கள் ஜூலையில் குறையும்

### வீட்டுப் பாவனை, குறைந்த வருமானம் பெறுவோருக்கு விசேட நிவாரணம்



லோரன்ஸ் செல்வநாயகம்

மின்சார கட்டணம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் குறைக்கப்படவுள்ள தாகவும் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் வீட்டு மின்பாவனையாளர்களுக்கும் நிவாரணம் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| 00 –30 அலகு | ரூ. 08 லிருந்து 06 ரூபா |
| 30 – 60 அலகு | ரூ. 20 லிருந்து 09 ரூபா |
| 60 – 90 அலகு | ரூ. 30 லிருந்து 18 ரூபா |
| 120 அலகு | ரூ. 50 லிருந்து 30 ரூபா |

ஜூலை முதல் மேற்கொள்ளப்படவுள்ள மின் கட்டண குறைப் பின்படி 0.30 வரையான 06

## பிரதமராக ஞாயிறன்று பதவியேற்கிறார் மோடி



இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்றதையடுத்து, புதிய பாராளுமன்றத்தின் பிரதமராக நரேந்திர மோடி எதிர்வரும் 9 ஆம் திகதி பதவியேற்கவிருக்கின்றார்.

அன்றைய தினம் நடைபெறவிருக்கின்ற பதவியேற்புவிழாவில் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்க உள்ளதாக நேற்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெலுங்குதேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட 06

## இறக்குமதி தடையிருந்த காலத்திலும் சந்தையில் 44,000 வாகனங்கள்



இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியிலும் 44,430 வாகனங்கள் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இவற்றில் 38,144 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 6,286 கார்கள் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் வாகன உற்பத்தியாளர் குழுவுடன் நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும், உதிரிப்பாகங்களை ஒன்றிணைத்து விற்பனை 06

## மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### ஆதரவாக 103, எதிராக 59 வாக்குகள்; 62 எம்பிக்கள் பங்கேற்கவில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்)



எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் 44 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்நிலையில் 44 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 62 எம்பிக்கள் நேற்றைய இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தில் 54 ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் அவற்றில் பெரும்பாலான சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என, உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.மேலும் அரசியலமைப்பின் 12(1) பிரிவின் விதிகளை மீறும் வகையில் ஒருசில ஏற்பாடுகள் காணப்படுவதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 06

## வெள்ள நிலைமையுடன் டெங்கு தொற்றுநோயாக மாறும் அபாயம்



### கட்டுப்படுத்த மக்களின் ஆதரவு அவசியம்; மே, மாதத்தில் 2647 நோயாளிகள் பதிவு

டெங்கு நோய் சுகாதாரப் பிரச்சினை மட்டுமன்றி, இது பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினையாக உள்ளதாகவும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (06) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட விசேட வைத்தியர் கலாநிதி சுதத் சமரவீர இதனைக் குறிப்பிட்டார். இதுபற்றித் தெரிவித்த அவர்:

பொதுமக்களின் பூரண ஆதரவின்றி சுகாதார அமைச்சினால் மட்டும் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாது.

இவ்வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் 25,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில், ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு நிலைமையுடன் 06

## செய்மதி தொழில்நுட்பம் மூலமான இணைய சேவையை வழங்க "Starlink" நிறுவனத்துக்கு அங்கீகாரம்



இலங்கையில் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக இணைய வசதி சேவையை வழங்க "Starlink" நிறுவனத்துக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு ஆரம்ப அங்கீகாரம் 06

## வட மாகாண அபிவிருத்தியில் ஜனாதிபதி அதிவிசேட கவனம்

### அமைச்சர் காதர் மஸ்தான்



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் அபிவிருத்தியில், விசேட கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதற்காக அப்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் கிராமிய பொருளாதார இராஜாங்க 06

## கிழக்கு மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்களில் மாற்றம்

### புதிய வர்த்தமானியூடாக செயலாளர்களும் நியமனம்



கிழக்கு மாகாணத்திலுள்ள 05 அமைச்சுக்களின் கீழுள்ள 40 திணைக்களங்கள் மாற்றப்பட்டுள்ளன.புதிய வர்த்தமானி ஊடாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இத்திணைக்களங்களை மாற்றியுள்ளார். இதன்பிரகாரம், அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜூன் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இந்த வர்த்தமானி அறிவிப்பு ஆளுநரால் 06

# நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மகஜர் கையளிப்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**



நுவரெலியா மாவட்ட மக்களுக்கு கிடைக்கும் அரச சேவைகள் மாவட்ட மக்கள் பூரணமாக பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நுவரெலியா மாவட்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் 25 ஆயிரம் கையொப்பங்களுடன் மகஜர் ஒன்றை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கையளித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை (5) நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கு சென்ற சிவில் அமைப்புகளின் பிரதநிதிகள், நுவரெலியா மாவட்ட உதவி மேலதிக செயலாளர் தினிகா கவிசேகரவின் காரியாலயத்திற்கு சென்று இந்த மகஜரை கையளித்தனர். இது தொடர்பில் அரசாங்கம் அவதானித்து அந்த அலுவலகங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட சிவில் அமைப்பின் இணைப்பாளர் பி.சக்திவேல் கூறியதாவது:

"முன்பு நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, கொத்மலை, அம்பகமுவ, வலப்பனை மற்றும் ஹங்குரான்கெத்த ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளே இருந்தன. மக்கள் தொகை மற்றும் போக்குவரத்து சிரமங்களை கருத்தில் கொண்டு, வரையறுக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் ஆறு புதிய பிரதேச செயலகங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தது.

அதில் தலவாக்கலை மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் கொத்மலை மேற்கு மற்றும் மதுரா பிரதேச செயலகம் உப அலுவலகங்களாக பராமரிக்கப்படுகின்றன. நில்தண்டஹின்ன மற்றும் கொத்மலை கிழக்கு பிரதேச செயலகங்களை ஆரம்பிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்தப் புதிய பிரதேச செயலகங்களினால் மக்கள் முழுமையாக அரச சேவைகளை பெற முடியாமல் இருக்கின்றது. அந்த அலுவலகங்களில் இட வசதி, பணியாளர்கள் பற்றாக்குறை, பௌதீக வளங்கள் இன்மை போன்ற காரணங்களால் அந்த அலுவலகங்களில் சேவைகளைப் பெறச்செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போதுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றை உடனடியாக தீர்க்குமாறு அரசாங்கத்திடம் கோரி 25,000 கையொப்பங்களுடன் கடிதம் ஒன்றை கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்றார்.

## மலைச்சாரல்

# டயகம வெஸ்ட் தோட்டத்தில் சர்வதேச சூற்றுச் சூழல் தினம்



இலங்கையில் மலையக பிரதேசமான அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் டயகம வெஸ்ட் தோட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அத்தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்பட்டது. "பசுமையான சூழலை உருவாக்கி பிள்ளைகளுக்கு கையளிப்போம்" மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்ட இந்த நிகழ்வில் 500 மூங்கில் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 1972ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச சுற்றுச் சூழல் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் ஐந்தாம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது.இந்நிகழ்வில் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட பிராந்திய முகாமையாளர் ரொகான் வீரகோன், தோட்ட முகாமையாளர் வர்ண ரனதுங்க மற்றும் வன பகுதி அதிகாரி பி.நந்தகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். டயகம தமிழ் மகா வித்தியாலய பாடசாலை மாணவர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு மூங்கில் கன்றுகளை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(ஆ.ரமேஸ்)

# கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா





**(லுணுகல நிருபர்)**

நூற்றாண்டு பழமை வாய்ந்த பசறை, கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை (05) நடைபெற்றது.

சித்தர்களின் குரல் அமைப்பின் நிறைவான ஆசியுடன் நடைபெறுகின்ற கும்பாபிஷேக பெருவிழா, ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் குருஜியின் நெறியாள்கையில் சிவாகம சக்கரவர்த்தி வேதாகம வித்தியாபதி சிவஸ்ரீ மஹாதேவ ஸ்ரீவத்சாங்க குருக்கள் தலைமையில் சர்வ சாதகமும், வேத பாராயணம் பிரம்மஸ்ரீ கேதீஸ்வர பவித்ர குருக்களும் சிவாகம கிரியா திலகம் ஜெயராம நிதர்சன குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும் கிரியைகளை ஆற்றினார்கள்.

இளம் இசை வயலின் வித்தகர் இராசரத்தினம் நிரோஜன், வீணை வாத்திய ' சிதம்பரம் இசை மைந்தன் ' பத்மநாதன் சிவமைந்தன், மிருதங்க இளம் இசை வித்தகர் முரளிதரன் சுலக்‌ஷன் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் உலகப் புகழ் நாத சக்கரவர்த்தி ஈழநல்லூர் பி.பாலமுருகன் தலைமையிலான குழுவினரின் மங்கள நாதம் இசை கச்சேரியும் நடைபெற்றது. அத்தோடு தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த சிவயோகி குபேர குருஜியின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.

ஊவா மாகாண ஐயப்பன் சேவா ஒன்றியம் தண்ணீர் பந்தல் அமைத்து மெய்யடியார்களுக்கு இனிய பானம் அருந்தவும் ஆலய அறங்காவலர் சபையினரும் சித்தர்களின் குரல் அமைப்போடு இணைந்து மெய்யடியார்களுக்கு சுவாமியின் இறையருள் விபூதி பிரசாதமும் அன்னதானமும் வழங்கினர்.

கும்பாபிஷேக பெருவிழாவில் ஊவா மாகாண இந்து குருமார்கள், மெய்யடியார்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் அசோக்குமார், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க கல்வி அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமாரின் அலுவலக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### 03ஆவது முறையாக இந்திய பிரதமராக

# வெற்றி பெற்றுள்ள நரேந்திர மோடிக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் வாழ்த்து



இந்திய பிரதமராக மூன்றாவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ள நரேந்திர மோடிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இந்திய பிரதமராக நரேந்திர மோடி ஜனநாயக முறையில் இந்த வெற்றியை பெற்றுக்கொண்டமைக்காகவும் இவரின் வெற்றிக்காக வாக்களித்த இந்திய மக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தியாவை மூன்றாவது முறையாகவும் சிறந்த ஒரு தலைவராக வழி நடத்தி செல்வீர்கள் என்ற நம்பிக்கையுள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்திய பிரதமராக இருந்த நீங்கள் எமது நாட்டிற்கு வழங்கிய ஒத்துழைப்பினை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என்றார்.

அத்துடன் எதிர்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பை பலப்படுத்தி இரு நாடுகளும் உங்கள் ஒத்துழைப்புடன் புரிந்துணர்வோடு செயற்பட எதிர்பார்க்கிறேன் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ.ரமேஸ்)

# நுவரெலியாவில் பெய்த அடை மழையால் 3,641 பேர் இடம்பெயர்வு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



நுவரெலியா மாவட்டத்தில் பெய்த அடை மழை மற்றும் காற்றினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 958 குடும்பங்களைச் சேர்ந்த 3641 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அந்த அதிகாரி,

அண்மைய நாட்களில் இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் காற்று மற்றும் மழையினால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததாலும் கூரைகள் தூக்கி வீசப்பட்டதாலும் 950 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் மேற்படி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்தச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாகவும், இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தங்கி இருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் நான்கு பாதுகாப்பான இடங்கள் அமைக்கப்பட்டு அந்த பாதுகாப்பான இடங்களில் மக்கள் இருந்ததாகவும், தற்போது அந்த மக்களும் அந்த பாதுகாப்பான இடங்களை விட்டு வெளியேறி உள்ளதாகவும், இடம்பெயர்ந்த மக்களின் எதிர்கால தேவைகள் தொடர்பில் உரிய பிரதேச செயலகங்கள் அவதானித்து வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# காற்று மாசுபாட்டால் ஏற்படும் விளைவு; நானுஓயாவில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு காற்று மாசுபாட்டையும் அதன் விளைவுகளையும் குறைக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி அண்மையில் நானுஓயா நகரில் நடத்தப்பட்டது.

நுவரெலியா உள்ளூராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு காற்று மாசுபாடு மற்றும் அதன் விளைவுகளை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் காற்று மாசு அடைவதால் உண்டாகும் தீமைகள் குறித்து விபரமாக எடுத்து கூறினார்கள்.

# ஆபத்துள்ள மரங்களை வெட்டி அகற்ற நலன் விரும்பிகள் வேண்டுகோள்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

ஹட்டன் கோட்ட கல்வி வலயம் கோட்டம் மூன்றில் உள்ள மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய கல்லூரி அருகில் பாரிய இரண்டு மரங்கள் உள்ளன. அம்மரங்களினால் பாரிய அனர்த்தம் ஏற்படும் அபாயம் உள்ளது. அதனால் அம்மரங்களை வெட்டி அகற்றுமாறு நலன்விரும்பிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக இப்பகுதியில் கடுமையான காற்று வீசியது. ஆயினும் தெய்வாதீனமாக எந்த ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை. இருந்த போதிலும் இந்த இரண்டு மரங்களினால் எந்த நேரத்திலும் உயிர் சேதமும் பாடசாலை கட்டட சேதமும் ஏற்படும் அபாயம் உள்ளது.

அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரி, கிராம உத்தியோகத்தர், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதேச சபை செயலாளர், ஹட்டன் கல்வி திணைக்கள அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி இந்த இரண்டு மரங்களை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கூட்டாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள்

# கைவிட்டுச் சென்ற கழிவுப் பொருட்கள்





**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நடந்து முடிந்த 2023/2024 சிவனொளிபாதமலை பருவ காலத்தில் சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் இவ்வாறு சிவனொளி பாத மலையை அண்டிய பகுதிகளிலும் ஏனைய ஒதுக்குப் புறங்களிலும் உக்கும், உக்காத பொருட்களை எறிந்து சென்று உள்ளதாக மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் ஆர்.ராஜவீரன் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரி ரசிக்கா சமநாயக்க தெரிவித்துள்ளனர். அவர் மேலும் கூறுகையில் இவ்வாறு விட்டு சென்ற உக்கும் பொருட்கள் 60,000 கிலோ எனவும் உக்காத பொருட்கள் 36,000 கிலோ எனவும் பிளாஸ்டிக் போத்தல்கள் 4,200 கிலோ எனவும் அவர் கூறினார்.

இவைகள் எல்லாம் மஸ்கெலியா பிரதேச சபையால் தரம் பிரிக்கப்படும். ரக்காடு கிராமத்தில் உள்ள தரம் பிரித்தல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு உள்ளது எனவும் மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் ஆர். ராஜவீரன் தெரிவித்தார்.

# சமாதான நீதவானாக அறநெறி ஆசிரியர்



புதிய மலையக அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.மகேந்திரனின் (ஜேபி) பரிந்துரையின்கீழ் பொகவந்தலாவ டின்சின் தோட்டத்தைச் சேர்ந்தவரும், கொழும்பு பொன்னம்பலவானேஸ்வர அறநெறி பாடசாலை ஆசிரியரும் ஊடகவியலாளருமான மாதவன் விக்னேஸ்வரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். நியமனக் கடிதத்தை இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரிடமிருந்து இவர் பெற்றுக் கொண்டார்.

# றில்ஹேன தோட்டம் மூடல்; தொழிலாளர்கள் எதிர்ப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பெல்மதுளை றில்ஹேன தோட்டம் மூடப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இத்தோட்டத்தின் ஊழியர்கள், தொழிலாளர்கள் இத்தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தோட்டத்தில் சுமார் 400 தொழிலாளர்களும் தொழிற்சாலையில் 100 ஊழியர்களும் பணி புரிந்து வருவதாக இப்பிரதேச தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் முறையான அறிவித்தல்கள் எதுவும் இன்றி தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தாம் பல வழிகளிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். தொழிற்சாலையில் சில பழுது பார்த்தல்களை மேற்கொள்வதற்காகவே தொழிற்சாலை இவ்வாறு மூடப்பட்டுள்ளதாக தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்தாலும், தொழிலாளர்களின் வேலைகளை நிறுத்தி தொழிற்சாலையை பழுது பார்த்தல் செய்யும் அளவுக்கு அங்கு பாதிப்புகள் எதுவும் இல்லை எனவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 7 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.31 |
| லுஹர் | - | 12.11 |
| அஸர் | - | 03.38 |
| மஃரிப் | - | 06.25 |
| இஷா | - | 07.42 |

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 25

ராகுகாலம் : காலை : 10.22 - 11.52வரை
சுபநேரம் : மாலை : 5.52 - 7.22வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# மின்சார சபையின் தனியுரிமையை நீக்கினால் சிலரது வர்த்தகத்துக்கு பாதிப்பு

## சட்டமூலத்தை சிலர் எதிர்க்க இதுவே காரணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தொழிற்சங்கங்களின் தாளத்துக்கு ஆட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. இவ்வாறு செயற்பட்டிருந்தால் இப்போதும் 12 மணித்தியால மின்துண்டிப்பை நாடு எதிர் கொண்டிருக்குமென, அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மின்சார சபையின் தனியுரிமையை நீக்கினால் சிலரது தனிப்பட்ட வர்த்தகத்துக்கு பாதிப்பு ஏற்படும். இதனாலேயே ஒருதரப்பினர் இந்த சட்டமூலத்தை எதிர்ப்பதாக தெரிவித்த அமைச்சர்,

மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் எத்தகைய ஏற்பாடுகளும் இந்த சட்டமூலத்தில் கிடையாது என்றும் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தை அரசாங்கம் அவசரமாக கொண்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அதே வேளை, மின்சாரத் துறையில் காணப்படும் பிரச்சினைகள்,மின்கட்டண அதிகரிப்பு மற்றும் சேவைகள் வழங்கல் தொடர்பில், தொடர்ச்சியாக மக்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

1969 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மின்சாரம் தொடர்பான சட்டம், நவீன உலகுக்கு பொருத்தமான வகையில் இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை. புதிய சட்டத்திருத்தம் இல்லாமல் மின்சாரத் துறையயை சாத்தியமானதாக எதிர்காலத்துக்கு முன்னெடுத்துச் செல்ல முடியாது.

மின்சார சபை போன்று ஏகாதிபத்திய அரச நிறுவனம் எதுவும் நாட்டில் கிடையாது. மின்சார சபையின் முறையற்ற செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கு கடந்த அரசாங்கங்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தன.இருந்த போதும் அவற்றுக்கு மின்சாரத்துறையின் சில தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

இந்த எதிர்ப்பை அரசியல் தேவைகளுக்காக எதிர்க்கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன. இறுதியில் நாட்டின் மின்கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்க் கொண்டது. இதுவே கசப்பான உண்மை.

06

1,500 கி.மீ வீதி புனரமைப்பு திட்டம் 2024

# களுஅக்கல – லபுகம வீதி நிர்மாண பணிகள் அமைச்சர் பந்துல தலைமையில் ஆரம்பம்





சுற்றுலா நகரமான சீதாவக்கவை பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பிரதான வீதியான களுஅக்கல முதல் லபுகம வரையான வீதிகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் யோசனைக்கு அமைய புனரமைக்கப்பட்டன. இந்த வீதியின் பகுதி லபுகம மற்றும் கலடுவாவ உள்ளிட்ட நீர்த்தேக்க பகுதிகளுக்கும் பயணிக்கிறது. இப்பாதை நீண்ட காலமாக திருத்தப்படவில்லை. இதனால், பிரதேசவாசிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சர் அவதானம் செலுத்தினார். இந்த புனரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்தார். இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர்,

"லபுகம மற்றும் கலடுவாவ நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள இப்பகுதி இலங்கையின் தேசிய பாரம்பரியம் மற்றும் வளமாக மாற்றப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் இயற்கையான இருப்பிடம் மற்றும் இயற்கை வளங்களை சரியான முறையில் முகாமைத்துவம் செய்தமையினால் கொழும்பு பிரதேசத்திற்கு இந்த நீர்த்தேக்கங்கள் மூலம் குடிநீர் வழங்க முடிந்தது.

எல்ல உள்ளிட்ட பகுதிகளில் மிகக் குறைவாகத் தொடங்கிய சுற்றுலாத் துறை தற்போது பெரிய

06

## தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன் இன்று 07 ஜூன் 1932



மீன்பிடித்தொழிலுக்கு ஆபத்து

மோட்டார படகிற்கு எதிர்ப்பு

நீர்கொழும்பு ஜூன் 4—

இன்றுமாலை பரி: மேரி கல்லூரி மண்டபத்தில் ஸ்தல அரசாட்சி மந்திரியின் சிபாரிசின்படி அமுலுக்குக் கொண்டுவரவிருக்கும் மோட்டார் படகு உபயோகத்தைத் தடைசெய்யும் பொருட்டு எவ்வழிகள் கையாளப்படல் வேண்டும் என்பதை ஆலோசிப்பதற்காக நீர்கொழும்பு வாசிகளால் ஓர் பெரும் கூட்டம் கூட்டப் பெற்றது.

### மீன்பிடித் தொழிலுக்கு ஆபத்து

### மோட்டார் படகிற்கு எதிர்ப்பு

இன்றுமாலை பரி: மேரி கல்லூரி மண்டபத்தில் ஸ்தல அரசாட்சி மந்திரியின் சிபாரிசின்படி அமுலுக்குக் கொண்டுவரவிருக்கும் மோட்டார் படகு உபயோகத்தைத் தடைசெய்யும் பொருட்டு எவ்வழிகள் கையாளப்படல் வேண்டும் என்பதை ஆலோசிப்பதற்காக நீர்கொழும்பு வாசிகளால் ஓர் பெரும் கூட்டம் கூட்டப் பெற்றது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# பெருந்தோட்ட மக்களின் தொழில் பாதுகாப்புக்கு ILO பங்களிப்பு அவசியம்



மலையக மக்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பில், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) முழுமையான பங்களிப்பு, கவனத்தை செலுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் ஜெனீவாவில் தெரிவித்துள்ளார். ஜெனீவா ஜெனீவா ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறும் 112 ஆவது சர்வதேச தொழிலாளர் மாநாட்டில்,வடிவேல் சுரேஷ் பேசும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். 25 நாடுகள் 33 கூட்டமைப்புக்களின் கீழ் உள்ள 30 மில்லியன் தொழிலாளர்கள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் பேசினார்..

‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு’என்ற குறளோடு உரையை ஆரம்பித்த அவர்: இலங்கையில் மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பெருந்தோட்ட கம்பனிகளின் அடாவடி நிர்வாகத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் என்ற ரீதியிலும் தொழிற்சங்கம் என்ற ரீதியிலும் பல வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இருந்த போதிலும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் தொழில் பாதுகாப்பு தொழில் உரிமைகள் இன்றியமையதாக காணப்படுகிறது. இதனை கருத்திற்கொண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பு என்ற

06

# குடிவரவு, குடியகல்வு திணைக்கள புதிய முத்திரைகள் அறிமுகமாகின







நாட்டிலுள்ள சர்வதேச விமான நிலையங்களூடாக நாட்டுக்கு வரும் மற்றும் வெளியே செல்லும் பயணிகளின் கடவுச்சீட்டுகளில் பதவிடுவதற்கான DEPARTED , ARRIVED என்ற 02 இரப்பர் முத்திரைகளை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவிக்கையில் , ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இப்புதிய முத்திரை இடும் முறை அறிமுகப் படுத்தப்பட்டதாக கூறினார்.

இதேபோன்று நாட்டின் தற்போது ஏனைய சர்வதேச விமான நிலையங்களிலும், புதிய முத்திரை நடைமுறை முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடிவரவு,குடியகல்வு திணைக்களம் உள்நாட்டு வருகைக்காக நீல நிற முத்திரையையும் புறப்படும் போது பச்சை நிற முத்திரையையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

விமான நிலையங்களைத் தவிர, துறைமுகங்கள் மற்றும் பயணிகள் கப்பல்களுக்கும் இதேபோன்ற முத்திரைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு துறைக்கும் மூன்று தனித்தனி முத்திரைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

06

# SLFP உள்ளிட்ட புதிய கூட்டணியின் பொதுக்கூட்டம் ஹம்பாந்தோட்டையில்

## அமைச்சர் அமரவீர, லான்சா MP தலைமை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட புதிய கூட்டணியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொதுக் கூட்டம், நாளை (08) பிற்பகல் 2.00 மணிக்கு அம்பலாந்தோட்டை நகரில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

புதிய கூட்டணியை ஆரம்பத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, புதிய கூட்டணி வேலைத்திட்டம் வலுப்பெறும். எதிர்காலத்தில் மேலும் பல கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளை இணைத்து மாபெரும் பரந்த கூட்டணி உருவாக்கப்படுமென நிமல் லான்சா குறிப்பிடுகின்றார்.

06

# காட்டு யானைகள் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண்பது அவசியம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



வருடாந்தம் கோடிக்கணக்கில் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிவடைந்து பல மனித உயிர்கள் பலியாவதற்கு காரணமாகும், காட்டு யானைகள் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் வன ஜீவ ராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விமலவீர திசாநாயக்க எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

சுற்றாடல் அமைச்சு

சுற்றாடல் அடையாளக் குறியீடும் திட்டங்கள் (Eco labelling schemes) மற்றும் ஏற்புடைத்தன்மை மதிப்பீட்டு அமைப்புக்களிடமிருந்து (Conformity assessment bodies) தகவல்களையும் சுற்றாடல் அடையாளக் குறியீடல் தொடர்பான தேசிய கட்டமைப்பின் தெரிவு நிபந்தனைகளை உருவாக்கும் செயன்முறையில் பங்கேற்பதற்கான ஆர்வ வெளிப்படுத்தலையும் கோருதல்

சுற்றாடல் அமைச்சானது 2022.11.21 அன்று வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியுடன், தேசிய சுற்றாடல் அடையாளக் குறியீடலுக்கான கட்டமைப்பினை வெளியிட்டது. அக் கட்டமைப்பின் விபரங்களை http://www.env.gov.lk/web/images/pdf/policies/NATIONAL_FRAMEWORK_ON_ECO_LABELLING_IN_SRI_LANKA_-_English.pdf என்ற வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜேர்மனி அபிவிருத்திக்கான கூட்டிணைவின் (The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH) “Sustainable Consumption and Production Outreach in Asia – The Next Five” என்ற வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் சுற்றாடல் அமைச்சானது சுற்றாடல் அடையாளக் குறியீடல் தொடர்பான தேசிய கட்டமைப்பின் தெரிவு நிபந்தனைகளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளதுடன், அதற்காகப் பின்வருவனவற்றைக் கோருகின்றது:

- ஏற்புடைத்தன்மை மதிப்பீட்டு அமைப்புக்கள்/ தொழிற்சாலைகள்/ நிறுவனங்களிடம் உள்ள சுற்றாடலியல் உரிமைக் கோரல்கள் (Environmental claims) பற்றிய ஆரம்ப தரவு ஆய்விற்கான பின்வரும் அடிப்படை விபரங்களை உள்ளடக்கிய தகவல்கள்:
  - அ. திட்டத்தின் பெயர்
  - ஆ. திட்டத்தின் தோற்றுவாய் மற்றும் உரிமையாளர்
  - இ. திட்டத்தின் தன்மை (eg. அடையாளக் குறியீடு, சான்றுப்படுத்தல், வழிகாட்டுதல்கள், கூற்றுக்கள் மற்றும் இணையத்தளத்தில் உள்ள விபரங்கள்)
  - ஈ. திட்டத்தின் கீழ் சான்றுப்படுத்தப்பட்ட / அடையாளக் குறியீடப்பட்ட உற்பத்திப்பொருள் அல்லது சேவை வகைகள்
  - உ. உற்பத்திப்பொருளின் வாழ்க்கை வட்டத்தில் கவனத்தில் எடுக்கப்பட்ட கட்டங்கள் (eg. பூரண வாழ்க்கை வட்டம், தனியொரு அல்லது சில கட்டங்கள், விநியோகச் சங்கிலி)
  - ஊ. பயன்படுத்தப்பட்ட தெரிவு நிபந்தனைகளின் /நியமங்களின் சுருக்கம்
  - எ. அடையாளக் குறியீடு அல்லது சான்றிதழை வழங்கும் செயன்முறை
  - ஏ. தொடர்பு விபரங்கள் (eg. தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், வலைத்தளம், சமூக ஊடகம்)
- கட்டமைப்பு தெரிவு நிபந்தனைகளை உருவாக்கும் செயன்முறையில் பங்குபற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (Expression of Interest - EoI).

உங்களது பங்குபற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்த (EoI) மற்றும் மேலதிக தகவலுக்காக கீழே குறிப்பிட்ட முகவரியுடன் / மின்னஞ்சல் முகவரியில் / தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்:

**பணிப்பாளர் (சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்)**
**சுற்றாடல் அமைச்சு, "சொபாதம் பியச"**
**இல. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை.**
**மின்னஞ்சல்: divisionepe@gmail.com**
**தொலைபேசி: 0112034149**

ஆர்வ வெளிப்படுத்தலுக்கான (EoI) இறுதித் திகதி 24.06.2024

செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

THE NEXT FIVE
giz
Supported by:
IKI

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 29

## குறள் தரும் சிந்தனை



இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.

# டெங்கு பரவும் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவது அவசியம்!

நாட்டில் கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நீடித்து வருகிறது. அதிலும் கடந்த வார இறுதியில் நாட்டின் பல பிரதேசங்களிலும் கடும்மழை பெய்தது. இதன் விளைவாக நாட்டின் பல பிரதேசங்களிலும் தாழ்நிலங்களில் வெள்ள நிலை ஏற்பட்டது. 87 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர்.

குளங்களதும் நீர்த்தேக்கங்களதும் மேலதிக நீரை வெளியேற்றவென வான்கதவுகள் திறந்து விடப்பட்டன. இதன் விளைவாக தாழ்நிலங்களில் வெள்ளநிலை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில், மழைநீர் பல இடங்களிலும் தேங்கி இருப்பதை பரவலாக அவதானிக்க முடிகிறது. டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்பு இனம் இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொண்டுள்ளது. இதற்கு நாட்டின் பல பிரதேசங்களிலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவது நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

பொதுவாக டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் பண்பை கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தற்போதைய மழையுடன் கூடிய காலநிலை இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு நல்ல சாதகமாக அமைந்திருக்கின்றது. அதன் விளைவாகவே தற்போது நுளம்புகளின் பெருக்கத்தைப் பரவலாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகள் இன்றி டெங்கு வைரஸ் மனிதனுக்கு பரவாது. இந்த வைரஸை மனிதனுக்கு பரப்பும் பணியையே இவ்வின நுளம்புகள் மேற்கொள்கின்றன. இவ்வைரஸானது மிகவும் பயங்கரமானதும் உயிராபத்து அச்சுறுத்தல் மிக்கதுமாகும்.

ஆனால் இவ்வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினால் இவ்வைரஸ் அச்சுறுத்தலைக் கட்டுத்திக் கொள்ள முடியும். தற்போதைய சூழலில் காய்ச்சலுடன் கூடிய நோய் அறிகுறிகள் காணப்பட்டால் ஆரம்ப கட்டத்திலேயே தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொண்டால் நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

நுளம்புகளின் பெருக்கம் தொடர்பிலும் காய்ச்சலுடன் கூடிய நோய் அறிகுறிகள் குறித்தும் மக்கள் மத்தியில் காணப்படும் கவனயீனம், அசிரத்தை என்பனவே டெங்கு வைரஸ் அச்சுறுத்தல் மிக்கதாக விளங்கக் காரணமாக விளங்குகின்றன.

டெங்கு வைரஸ் நுளம்புகளானது இன, மத, மொழி, வயது, பால் வேறுபாடுகள் இன்றி எவரையும் குத்த முடியும். அதன் ஊடாகவே இவ்வைரஸ் சுகதேகிகளுக்கு பரப்பப்படுகின்றது. மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்துக் கொண்டால் இவ்வைரஸ் ஒரு அச்சுறுத்தலாகவே இராது. அதாவது இவ்வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் பல்கிப் பெருகாவிட்டால் இவ்வைரஸினால் அச்சுறுத்தலாக அமைய முடியாது.

இருந்த போதிலும் தற்போதைய மழையுடன் சேர்த்து நாட்டில் டெங்கு வைரஸ் தலைதூக்கக் கூடியதாக அச்சுறுத்தல் உள்ளது. அந்த வகையில் இவ்வருடம் ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் 25 ஆயிரத்து 417 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 09 பேர் உயிரிழந்துள்ளனர். அதிலும் கடந்த சில தினங்களாக டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் எதிர்வரும் மழைவீழ்ச்சிக் காலப்பகுதியில் மேலும் டெங்கு அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல் நிலவுகிறது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்திருக்கிறார்.

இக்காலப்பகுதியில் இந்நோய்க்கு உள்ளானவர்களில் பெரும்பகுதியினர் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும் இரத்தினபுரி, கண்டி, கேகாலை, குருநாகல் உட்பட நாட்டின் பல மாவட்டங்களிலும் இந்நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனால் டெங்கு வைரஸ் நோயைத் தடுப்பதற்காக நுளம்பின் பெருக்கத்தையும் பரவுதலையும் தடுப்பது மிகவும் அவசியம். அதன் நிமித்தம் வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களிலும் கட்டடங்களிலும் பணியிடங்களிலும் டெங்கு நுளம்பு முட்டையிட்டு பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பது அவசியம். இது பொதுமக்களின் பொறுப்பாகும்.

அதேநேரம் இக்காலப்பகுதியில் கடும் காய்ச்சல், வயிற்றுவலி, வாந்தி, கடுமையான தலைவலி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதை டெங்கு நோயாகக் கருதுவது மிகவும் அவசியம். இந்த அறிகுறிகள் இருந்தால், முதலில் உடல்ரீதியாக ஓய்வெடுப்பதோடு காய்ச்சல் ஏற்பட்ட இரண்டு நாட்களுக்குள் அருகில் உள்ள வைத்தியசாலை அல்லது தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி, உரிய ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக இந்நோய்த் தாக்கத்தை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம்.

editor.tkn@lakehouse.lk

# ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய 3 நூல்கள் சிட்னியில் இன்று வெளியீடு

எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதியுள்ள மூன்று நூல்கள் இன்று வெள்ளிக்கிழமை (ஜூன் 7ம் திகதி) அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வெளியிடப்படுகின்றன. மூன்று நூல்கள் வெளியீடு நிகழ்வுடன், இலக்கிய அரங்கும் நடைபெற உள்ளது.










ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய 'பாலஸ்தீனம் எரியும் தேசம்', 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்', 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' ஆகிய மூன்று நூல்களே சிட்னியில் இன்று வெளியிடப்படுகின்றன.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றுவார். தனபாலசிங்கம், டொக்டர். ஹாரூன் காசிம், சுந்தரதாஸ் ஆகியோர் நூல்களை அறிமுகப்படுத்தி உரை ஆற்றுவர்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்துகிறார். அத்துடன் திருநந்தகுமார் அவர்களும் சிறப்புரை ஆற்றுவார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெறும் நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.



# மலையக மக்களின் வரலாற்றை பதிவு செய்யும் எழுத்தாளர் பீட்டர் மரியதாஸ்

இளம் பருவத்தில் தோட்ட வாழ்க்கையின் இன்பதுன்பங்களை அனுபவித்து, அதன் மாற்றத்திற்கான மார்க்கங்களை தேட ஆரம்பித்தவன் நான். இதனால் இளம்பராயத்திலேயே சமூக அரசியல் தொழிற்சங்கத் துறைகளில் ஆர்வம் ஏற்பட்டது. எனது எழுத்து முயற்சிகள் இவற்றிலிருந்தே சுரந்தன. இதற்கு ஏதுவாக எனது கல்வி பல்கலைக்கழக படிப்புச் சூழல் அமைந்தது.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் படித்த காலத்தில் ஆளுமை நிறைந்த பலருடன் எனது நட்பு வட்டம் விரிவடைந்தது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த போது சகமாணவனாக வந்த மாத்தளை வி.சண்முகம் எங்களோடு ஐக்கியமானார். இங்கு எங்களுக்கு ஆனந்த குணதிலக்க (கம்கரு பத்திரிகை ஆசிரியர்) போன்ற சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களின் தொடர்பு ஏற்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வந்த பின்னரும் பலருடனும் நெருக்கம் ஏற்பட்டது. எனது நட்பு, தோழமை வட்ட விரிவாக்கத்தோடு எனது இயக்க செயற்பாடுகள் விரிவு அடைந்தன.

இந்தக் கட்டத்தில் நான் சந்தித்த இளைஞர்களில் ஒருவர் எச்.எச்.விக்கிரமசிங்க (மாத்தளை செல்வா). கொழும்பில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஓடித்திரியும் துடிதுடிப்பான இளைஞர். அன்று அவரிடம் காணப்பட்ட சமூக வாஞ்சை என்னைக் கவர்ந்தது. அவரே நான் நினைத்துப் பார்க்காத எனது கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் ஒன்றினை வெளியிட வேண்டுமென்று விடாப்பிடியாக என்னை எழுதவைத்து செயற்பட்டார்.

கடந்த ஆண்டின் ஆரம்பகட்டத்தில் மலையகத் தமிழர் இங்கு வந்து 200 வருடங்கள் ஆகிவிட்டன என்ற செய்தி ஊடகங்களில் வெளியானபோது எனக்கு இந்த கால வரையறையைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டது. இதனைப் பற்றிய தேடல்களில் போது பல தகவல்கள் கிடைத்தன.

பின்தள்ளப்பட்ட சமூகம் ஒன்றைப் பற்றிய ஆய்வுச்சுரங்கம் ஆழமும் அகலமுமானது. சேர்த்த குறிப்புக்களைக் கொண்டு சில கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். அவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போது அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமென்று கே.மெய்யநாதன் ஆலோசனைக் கூறியதும் எனக்கு அவ்வாறான ஆர்வம் துளிர்த்தது. அந்த தருணத்தில்தான் எச்.எச்.விக்கிரமசிங்க (விக்கி) என்னுடன் தொடர்புகொண்டு இதனை செய்தே ஆக






வேண்டும் என்று ஊக்கப்படுத்தியதோடு வேகமாக செயற்படவும் வைத்தார்.

அண்மைக்காலத்தில் விக்கியும், லண்டனில் வாழும் நித்தியும் சேர்ந்து பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் 'வாழ்வும் பணியும்' என்ற நூலையும், சி.வி.வேலுப்பிள்ளை 1958, 1959களில் தினகரனில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து மலையக அரசியல் 'தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூலையும் வெளியிட்டனர். இரண்டும் ஆவணமாக பயன்படக்கூடியவை. இவற்றோடு சக்திமிக்க ஆக்க இலக்கியவாதிகளான சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்', மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதை தொகுதியினையும், மாத்தளை மலரன்பனின் தமிழ் மொழிபெயர்ப்பான பிறமொழி சிறுகதைகள் அடங்கிய 'கொலுஷா' என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

நித்தியும் விக்கியும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அன்று மாத்தளை செல்வா என அறியப்பட்ட எச்.எச்.விக்கிரமசிங்க மிக இளமையிலேயே அறுபதுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் முனைப்புக் காட்டி, அப்பொழுதே அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், மாத்தளை பொது வைத்தியசாலை கண்காணிப்புக் குழு உறுப்பினராகவும் கௌரவிக்கப்பட்டவர். 1972களில் தனியார் தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித கொடுப்பனவும் இன்றி தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்டபோது, மலையக இளைஞர் முன்னணி உயர்மட்ட உறுப்பினராக இருந்த இவர், வடக்கு மாத்தளை தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பு அரணாக செயல்பட்டவர்.

வடக்கு மாத்தளை வாழ் தோட்டத் தொழிலாளர்கள் இன சங்காரத்திற்கு ஆளாகியபோது அவர்களுக்கு பல வகைகளில் உதவியவர். மாத்தளையில் ஏற்பட்ட சமூக, இலக்கிய செயற்பாடுகளில் அவரது பங்களிப்பு அளப்பரியது. இன்று மலையக இலக்கிய புலத்தில் வெளியீடுகளைச் செய்யும் தொண்டில் ஈடுபட்டுள்ளார். எனக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் என்றும் ஆர்வம் காட்டும் பத்திரிகை நண்பர்களுக்கு என்றும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பீட்டர் மரியதாஸ்...
petermariadhas@gmail.com

# ஊடகப்பணியில் வெள்ளிவிழா காணும் எம்.ஏ.ஏ.காசிமுக்கு பாராட்டுவிழா



கிண்ணியாவைப் பிறப்பிடமாகவும், புத்தளம் கொத்தாந்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் தேசகீர்த்தி, சமாதான நீதிவான் முகம்மது அனிபா அப்துல் காசிம் ஊடகப் பயணத்தில் 25 வருடத்தை பூர்த்தி செய்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு பிராந்திய செய்தியாளராக ஊடகத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட இவர்,



தற்போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளராகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் 2007 ஆம் ஆண்டு முதல் தொலைக்காட்சியின் புத்தளம் பிராந்திய செய்தியாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

புத்தளம் மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை காணொளியாக ஒளிப்பதிவு செய்து, அறிக்கையிட்டு வருவதுடன், அவரது செய்தி அறிக்கை மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் கிடைத்துள்ளன.

இவரது செய்திப்பணியினால் புத்தளம் மாவட்டத்தில் உள்ள தமிழ்மொழி பாடசாலைகளிலும், தமிழ் பேசும் மக்கள் வாழும் சில கிராமங்களிலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்ட தமிழ் செய்தியாளர் சங்கத்தின் செயலாளராகவும், உறுப்பினராகவும் செயற்பட்ட காலத்தில் புத்தளத்தில் இருந்து வெளியான 'புத்தெழில்' எனும் பத்திரிகை வெளிவருவதற்காக முன்நின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவராவார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஆயுட்கால அங்கத்தவரான இவர், புத்தளம் மாவட்ட இணைப்பாளராகவும் தற்போது பணியாற்றி வருகின்றார்.

அத்துடன், புத்தளம் மாவட்ட சுதந்திர செய்தியாளர் சங்கம், ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் என்பவற்றின் பொருளாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

இவரின் ஊடகத்துறையைப் பராட்டி, கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்தின் 150 ஆவது விழாவிலும், ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயத்தின் வைரவிழாவின் போதும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் தூய தேசத்திற்கான அமைப்பு மற்றும் இலங்கை சமாதான நீதவான்கள் பேரவை, International Human Rights, Global Mission அமைப்பினாலும் இவர் அண்மையில் நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ரஸீன் ரஸ்மின்...
(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

# ஆண்கள் உடல்கட்டழகு போட்டி; கல்முனைக்கு மூன்று பதக்கங்கள்

இவ்வருடத்துக்கான (2024) கிழக்கு மாகாண விளையாட்டு விழா அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றிருந்தது. இதன் போது ஆண்களுக்கான உடல் கட்டழகு போட்டியில் கல்முனை பிரதேசம் மூன்று பதக்கங்களை தம்வசப்படுத்தியுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் 47 பேர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களில் ஆண்களுக்கான உடல் கட்டழகுப் போட்டியில் கல்முனை பிரதேசத்தில் இருந்து பங்குபற்றி இரண்டு தங்க பதக்கங்களையும், ஒரு சில்வர் பதக்கம் அடங்கலாக மூன்று பதக்கங்களை குட்டி ஜிம் பிட்னஸ் வெற்றியீட்டியுள்ளது.







இதில் கல்முனை பிரதேசம் சார்பில் நிமலன் 85 கிலோ எடைப்பிரிவு போட்டியில் பங்குபற்றி தங்கப் பதக்கத்தையும், பாகிம் 80 கிலோ எடைப்பிரிவு போட்டியில் பங்குபற்றி தங்க பதக்கத்தையும், இகாப் 90 கிலோ எடைப்பிரிவு போட்டியில் பங்குபற்றி சில்வர் பதக்கத்தையும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துஜியந்தன்...
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



# ஹஜ் கற்றுத்தரும் சமத்துவம்

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக்கடமையாக கணிக்கப்படக்கூடிய ஹஜ் கடமை பல சிறப்புகளையும் தத்துவங்களையும் சுமந்துள்ள ஒரு கடமையாகும். தியாகம், அர்ப்பணம், இறை திருப்தி பற்றற்றநிலை, மறுமை வாழ்வு பற்றிய உணர்வு போன்ற மிக உயர்ந்த விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள தன்னிகரற்ற கடமையே ஹஜ் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இக்கடமையினை முஹம்மத் (ஸல்) அவர்களது உம்மத்தினர் மாத்திரமன்றி அவருக்கு முன்பு வந்த பல நபிமார்களின் சமூகத்தினரும் நிறைவேற்றி வந்துள்ளனர்.

ஹஜ்ஜுடைய வணக்கம் நிறைவேற்றப்படுகின்ற துல்ஹஜ்ஜா மாதம் பல சிறப்பம்சங்களால் கௌரவிக்கப்பட்டுள்ளது. துல்ஹஜ்ஜா மாதத்தின் முதல் பத்து நாட்களும் பல சிறப்புக்களால் நிரம்பி இருப்பது ஹஜ் உடைய வணக்கத்தின் தனித்துவத்தை பறைசாற்றுகின்றது. அல்லாஹுத்தஆலா துல்ஹஜ்ஜா மாதத்தின் முதல் நாள் காலை பொழுது, அதன் முதல் 10 இரவுகள், ஒன்பதாம் நாள் (அறபா) தினம், பத்தாம் நாள் (ஈதுல் அல்ஹா) பெருநாள் தினம் ஆகியவற்றின் மீது சத்தியம் செய்கிறான்.

ரமழான் மாதத்தின் இறுதி பத்து நாட்களை விட துல்ஹஜ்ஜா மாதத்தின் முதல் 10 நாட்கள் சிறந்தது எனும் கருத்தை பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் அருளியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "அல்லாஹ்வின் பார்வையில் துல்ஹஜ்ஜாவின் முதல் பத்து நாட்களை விட மகத்துவம் பொருந்திய வேறு நாட்கள் இல்லை. இந்த நாட்களில் செய்யப்படுகின்ற அமல்களை விட அல்லாஹ்வுக்கு விருப்பமான வேறு அமல்கள் இல்லை. இவ்வாறு சொன்ன நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து.... இந்த பத்து நாட்களிலே நீங்கள் அதிகமாக லாஇலாஹ இல்லல்லாஹ் சொல்லுங்கள், அதிகமாக அல்லாஹ் அக்பர் சொல்லுங்கள், அதிகமாக அல்ஹம்துலில்லாஹ் சொல்லுங்கள் என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)

மேற்குறிப்பிடப்பட்ட நபிமொழி மூலம் ஹஜ் உடைய வணக்கம் எவ்வளவு சிறப்புகளை உள்ளடக்கியது என்பதை புரிந்து கொள்ளலாம். ஹஜ் உடைய கிரியைகள் மட்டுமன்றி ஹஜ் உடைய மாதம் முழுவதும் பல சிறப்புகளை உள்ளடக்கியுள்ளது. அதனுடைய கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் அல்லாஹ் அற்புதமான பல நன்மைகளையும் வரப்பிரசாதங்களையும் கொடுக்கிறான். ஹஜ் உடைய வணக்கத்தை நிறைவேற்றும் மனிதன் அன்று பிறந்த பாலகன் போல மாறிவிடுகிறான் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தை தவிர கூலி இல்லை என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறி இருப்பதன் ஊடாக ஹஜ்ஜின் மாண்புகளை எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இத்தனை சிறப்புகளையும் மாண்புகளையும் கொண்டிருக்கும் ஹஜ் கடமைக்கு பின்னால் பல தத்துவங்களையும், படிப்பினைகளையும் அல்லாஹ் ஏற்படுத்தி, அதனூடாக சுபீட்சமும் அமைதியும் நிறைந்த, பலம் பொருந்திய ஒரு சமூக கட்டமைப்பை ஏற்படுத்துவதை எதிர்பார்க்கிறான். ஆரோக்கியமான ஒரு சமூகக் கட்டமைப்பை தோற்றுவிப்பதற்கான மிகப் பிரதானமான அடிப்படை சமத்துவமாகும். இதனை ஹஜ் கிரியைகள் ஊடாக அல்லாஹ் மிகவும் அற்புதமாகத் தெளிவுபடுத்துகிறான். உலகளாவிய முஸ்லிம் உம்மத்தின் மிகப் பெரிய வருடாந்த மாநாடான ஹஜ்ஜில் அல்லாஹ்வின் அடியார்களுக்கு மத்தியில் எவ்வித பாகுபாடும் இல்லை, எல்லோரும் தைக்கப்படாத கபன் துணிக்கு ஒப்பான வெண்ணிற ஆடையையே அணிய வேண்டும். அது சமத்துவத்தின் ஆடை. இவ்வாடையை அணிந்த நிலையிலேயே ஹஜ் கிரியைகள் நிறைவேற்றப்படுகின்றன.

அரபா மைதானத்தின் அடையாளமாக அல்லாஹ் சமத்துவத்தை ஆக்கிவைத்துள்ளான். சமத்துவத்தின் அழகையும் அற்புதத்தையும் அங்கு காணலாம். ஆண் பெண், உயர்ந்தவன் தாழ்ந்தவன், அரசன் ஆண்டி, ஏழை பணக்காரன், வெள்ளையன், கருப்பன், அரபி அஜமி, ஆபிரிக்கன் ஐரோப்பியன், என்ற எல்லா வேறுபாடுகளையும் களைந்து, ஒவ்வொருவரும் தனக்காக வரையறுத்து வைத்திருக்கின்ற குல, கோத்திர, இன, அடையாளங்களை எல்லாம் அறுத்தெறிந்து அல்லாஹ்வின் சந்நிதானத்தில் மண்டியிட்டு, நாங்கள் எல்லோரும் உனது அடிமைகள் எனும் சமத்துவ கோட்பாட்டை நடைமுறையில் வெளிப்படுத்தும் மகத்தான தருணமே அது.

இஸ்லாம் கூறும் சமத்துவக் கோட்பாட்டை இறுதி ஹஜ்ஜின் போது நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். 'மக்களே! உங்களது இறைவன் ஒருவனே அறிந்து கொள்ளுங்கள். எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவும், எந்த ஓர் அரபி அல்லாதவர்க்கும் அரபியை விடவும் எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் கறுப்பரை விடவோ, எந்த ஒரு கறுப்பருக்கும் வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் அதிகம் இறையச்சம் உள்ளவர்தான்'. (ஆதாரம்: அல்பைஹகி)

ஹஜ் கிரியைகள் ஊடாக உணர்த்தப்படுகின்ற சமத்துவம் என்ற உயர் கோட்பாட்டின் ஆழ்ந்த அர்த்தத்தை புரிந்து கொண்டவர்கள் வாழ்வின் யதார்த்தத்தையும் எளிதாகப் புரிந்து கொள்வார்கள். பிற மனிதர்களும் என்னைப் போன்றவர்கள் தான். அவர்களது மானம் மரியாதைக்கு எவ்வகையிலும் என்னால் எக்கலங்கமும் ஏற்படக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்கள். மரணத்திற்குப் பின் படைப்புகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்படுகின்ற மஹ்ஷர் வெளிக்கு ஒப்பான அந்த அரஃபா மைதானத்தின் நிகழ்வுகள் மனிதர்களை புடம் போடுகின்றன. மனிதர்களிடம் காணப்படும் சமத்துவ கோட்பாட்டிற்கு புறம்பான அனைத்து ஆணவக் குணங்களையும் அழித்து விடுகின்றன.

இஸ்லாம் என்ற பெயரால் தங்களை ஏனைய சமூகங்களிடமிருந்து முழுமையாக தூரமாக்கிக்கொண்டு சமாதானமும் சகவாழ்வும் மலர வேண்டும் என்று கூச்சலிடுவதில் அர்த்தமில்லை. நபி (ஸல்) அவர்களது மதீனா சாசனம் சமத்துவத்தை, சமாதானத்தை, மனித உரிமைகளை அனைத்து பிரஜைகளுக்கும் உத்தரவாதம் செய்தது. மதீனாவிலும் அதனைச் சூழவுள்ள அனைத்து கோத்திரங்களும், குழுக்களும் தாம் இஸ்லாமிய சமூகத்தில் பிரிக்க முடியாத கூறுகள் என்ற உறுதிப்பாட்டை வழங்கியது. காரணம் அங்கு நபி (ஸல்) அவர்களாலும் சஹாபாத் தோழர்களாலும் பேணப்பட்ட சமத்துவ கோட்பாட்டிற்கு அமைவான உயர் நாகரிகமும், அழகிய விழுமியங்களும் கொண்ட சமூக கட்டமைப்பாகும்.

நபி (ஸல்) அவர்களது 23 ஆண்டு கால நுபுவத்துடைய வாழ்வில் பிற மனிதர்களோடும், சமூகங்களோடும் உறவாடுவதற்கும் தொடர்பு கொள்வதற்கும் கையாண்ட மிகப் பிரதானமான அடிப்படை சமத்துவமாகும். இது இஸ்லாத்தின் தனித்துவ அடையாளமாகும். இதன் ஒளியிலேயே ரோம் தேசத்தைச் சேர்ந்த சுகைப் ரூமி (ரழி) அவர்களும், பாரசீகத்தைச் சேர்ந்த சல்மான் பாரிஸ் (ரழி), அபீசீனியாவை சேர்ந்த பிலால் (ரலி) அவர்களும், அரேபியர்கள், அஜமிகள், அரசர்கள், அடிமைகள், கற்றறிந்தவர்கள், கல்லாதவர்கள் என எல்லோரையும் ஒரே அவையில் ஒன்றாக அமர வைத்தார்கள். இதுவே சுபீட்சமும், பாதுகாப்பும் நிறைந்த ஒரு சமூக உருவாக்கத்தின் ஆணிவேராக அமைந்தது. சமத்துவம் பேணப்படாத சமூகத்தில் மனமுறிவுகளும், முரண்பாடுகளும், யுத்தங்களுமே தலை விரித்தாடுகின்றன. இந்த உலகில் நடைபெறுகின்ற யுத்தங்களில் பெரும்பாலானவைகளின் பின்னணி சமத்துவம் பேணப்படாமையாகும் என்ற உண்மையை தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

எனவே ஹஜ் எமக்கு கற்றுத்தரும் சமத்துவ கோட்பாட்டின் அடிப்படைகளையும், நன்மைகளையும் முறையாகக் கற்று ஒரு சிறந்த சமூக உருவாக்கத்தின் பங்காளர்களாக மாற வல்ல அல்லாஹ்வை பிரார்த்திப்போம்.

கலாநிதி, அல்ஹாபிழ்
**எம்.ஐ.எம். சித்தீக்...**
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

**ஆலமுல் இஸ்லாம்**
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# உழ்ஹிய்யா —ஒரு விளக்கம்



துல்ஹஜ் மாதம் பிறை 10 அன்று பெருநாள் தொழுகையை நிறைவேற்றியது முதல், அய்யாமுத் தஷ்ரீக் பிறை 11, 12, 13 அன்று இறுதி நேரம் வரை உள்ள கால கட்டங்களில் ஒட்டகம், ஆடு, மாடு ஆகிய பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுப்பதையே உழ்ஹிய்யா என்று கூறப்படுகிறது. இதற்கு காலம், நேரம், கொடுக்கப்படும் பிராணி அனைத்துமே வரையறை செய்யப்பட்டுள்ளன.

இப்றாஹீம்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுக்க முன்வந்தார். இஸ்மாயீல் (அலை) அவர்களும் அல்லாஹ்வுக்காக தனது உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். இஸ்மாயீல் நபிக்காக அல்லாஹ் ஒரு ஆட்டை அறுக்குமாறு கட்டளையிட்டான். இந்த மாபெரும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இக்கடமை பேணப்பட்டு வருகின்றது.

உழ்ஹிய்யா என்பது இஸ்லாத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும். இந்த அடிப்படையில் இது வலியுறுத்தப்படுகின்றது.

'இதுவே (அல்லாஹ்வின் போதனை) யாகும். எவர் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களை கண்ணியப்படுத்துகின்றாரோ, நிச்சயமாக அது உள்ளங்களின் பயபக்தியில் உள்ளதாகும்." (அல் குர்ஆன் 22:32)

உழ்ஹிய்யா அல்லாஹ்வின் அடையாளச் சின்னம் என்பதால் அதை கண்ணியப்படுத்துவது உள்ளத்தின் தக்வாவுக்கான அடையாளங்களில் ஒன்றாகும்.

உழ்ஹிய்யாவை கட்டாயக் கடமை என சில அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் ஜுன்தப் இப்னு சுஃப்யான் அல்பஜலீ (ரழி) அவர் 'நான் நபி (ஸல்) அவர்களுடன் நஹ்ருடைய (துல்ஹஜ் 10ஆவது) நாளில் இருந்தேன். அப்போது அவர்கள், '(பெருநாள்) தொழுவதற்கு முன்பே (குர்பானிப் பிராணியை) அறுத்துவிட்டவர் அதனிடத்தில் (அதற்கு பதிலாக) வேறொன்றை (தொழுகைக்குப் பின்) அறுக்கட்டும். அறுக்காமல் இருப்பவர் (தொழுகை முடிந்தவுடன்) அறுக்கட்டும்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழியின் படி தொழுகைக்கு முன்னர் அறுத்தவருக்கு மீண்டும் அதற்குப் பகரமாக நபி(ஸல்) அவர்கள் தொழுகையின் பின்னர் அறுக்குமாறு கூறியுள்ளார்கள். எனவே, இது கட்டாயமான கடமை. கடமை இல்லை என்றால் மீண்டும் அறுக்குமாறு நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டு இருக்க மாட்டார்கள்.

அதேநேரம் உழ்ஹிய்யா கொடுக்கும் எண்ணம் உள்ளவர்கள் பிறை ஒன்றில் இருந்து உழ்ஹிய்யா கொடுக்கும் வரை நகம், முடி போன்றவற்றைக் களையக் கூடாது. அவர் இக்காலகட்டத்தில் இல்லறத்தில் ஈடுபடுவது, மணம் பூசுவது போன்றன ஆகுமானதாகும். உழ்ஹிய்யா கொடுப்பவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள்.

அதாவது, 'துல் ஹஜ் (முதல்) பத்தில் நுழைந்துவிட்டால் உங்களில் உழ்ஹிய்யா கொடுக்க யாரேனும் விரும்பினால் அவர் தனது நகம், முடி, என்பவற்றைக் களைய வேண்டாம்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத், தாரமீ, இப்னுமாஜா)

அதேநேரம் உழ்ஹிய்யாவாக ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பிராணிகளைக் கொடுக்க வேண்டும். ஆனால் உழ்ஹிய்யாவுக்காக தெளிவான நோய், குருடு, நொண்டி போன்ற குறைபாடுகள் அற்ற நல்ல பிராணிகளையே தேர்ந்தெடுப்பது அவசியம்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். 'ஜும்ஆ நாளில் கடமையான குளிப்புப் போல் குளித்துவிட்டுப் (பின்னர்) பள்ளிக்கு வந்தால் ஓர் ஒட்டகத்தை இறைவழியில் குர்பானி கொடுத்தவர் போலாவார். இரண்டாம் நேரத்தில் வந்தால் ஒரு மாட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். மூன்றாம் நேரத்தில் வந்தால் கொம்புடைய ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். நான்காம் நேரத்தில் வந்தால் ஒரு கோழியைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். ஐந்தாம் நேரத்தில் வந்தால் முட்டையைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். இமாம் பள்ளிக்குள் வந்துவிட்டால் வானவர்கள் ஆஜராகி போதனையைக் கேட்கிறார்கள்'. (ஆதாரம்: புஹாரி)

ஜும்ஆ தினத்தில் பள்ளிக்கு முதலாவது சமுகமளித்தவருக்கு ஒட்டகம் குர்பான் கொடுத்த நன்மையும் இரண்டாவது, மாடு மூன்றாவது ஆடு குர்பானி கொடுத்த நன்மையும் கிடைப்பதாக இந்த ஹதீஸ் கூறுகின்றது. எனவே, ஒட்டகம், மாடு, ஆடு என்ற ஒழுங்குகளில்தான் சிறப்பு அமைந்துள்ளது என்று சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அடுத்து, ஒட்டகத்தின் பெறுமதி கூடுதலானதாகும். எனவே, அதிக தர்மம் உள்ளது என்ற வகையில் ஒட்டகம் முதல் இடத்தைப் பெறுகின்றது என்பது இவர்களது அபிப்பிராயமாகும்.

அதேநேரம் அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள், 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கொம்புகள் உள்ள இரண்டு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்கள் பக்கம் சென்று தம் கரத்தால் அவற்றை அறுத்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

நபி(ஸல்) அவர்கள் தொடராக ஆட்டைக் குர்பான் கொடுத்து வந்துள்ளார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பகரமாக அல்லாஹ் ஆட்டைத்தான் ஆக்கினான். இது பற்றி குர்ஆன் குறிப்பிடும் போது 'இவருக்குப் பகரமாக, மகத்தான ஒரு பலிப் பிராணியை ஆக்கினோம். (அல் குர்ஆன் 37:107) என்றுள்ளது.

மேலும் ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டைக் குர்பான் கொடுக்கலாம் என்பதுதான் பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் முடிவாகும்.

நபி(ஸல்) அவர்களுடன் ஹுதைபிய்யா ஆண்டில் ஒட்டகத்தில் ஏழு பேரும், மாட்டில் ஏழுபேரும் இணைந்து அறுத்துப் பலியிட்டோம் என ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம், இப்னு மாஜா, முஅத்தா)

அதேநேரம் ஜாபிர்(ரழி) அவர்கள், நபி(ஸல்) அவர்கள் காலத்தில் தமத்து அடிப்படையில் நாம் ஹஜ் செய்வோம். ஏழு பேருக்காக ஒரு மாட்டை அறுப்போம். அதில் நாம் கூட்டுச் சேர்ந்து கொள்வோம் என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத், இப்னு ஹுஸைமா).

நாம் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். உழ்ஹிய்யா தினம் வந்தது. ஒட்டகத்தில் பத்துப் பேரும் மாட்டில் ஏழு பேரும் கூட்டுச் சேர்ந்தோம்' என இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா, திர்மிதி)

இந்த அறிவிப்பில் ஒரு பயணத்தில் என்று பொதுவாக வந்துள்ளதால் இதை பொதுவான ஹதீஸாகவே எடுக்க வேண்டும். சிலர் இது கூட ஹஜ் காலத்தில் நடந்தது என்கின்றனர். ஹஜ்ஜில் நடந்ததை ஒரு பயணத்தில் இருந்தோம் என்று மறைவாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, ஏழு பேர் சேர்ந்து ஒரு மாடு கொடுப்பது ஆகுமானது என்பதே நெருக்கமான கருத்தாக உள்ளது.

ஆகவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய உழ்ஹிய்யாவை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

**பிந்த் இஸ்மாயீல்...**

# அரபா நோன்பின் சிறப்புகள்



அரபா தினம் என்பது சங்கையான மாதங்களில் ஒன்றான துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் பிறையில் இஸ்லாமிய வரலாற்றில் மிகச்சிறந்த நாள் ஆகும். இத் தினத்தில் ஹாஜிகள் அரபா எனும் இடத்தில் ஒன்று கூடுவார்கள்.

இத்தினத்தில் தான் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு இஸ்லாம் எனும் வாழ்க்கை நெறியை முழுமைப்படுத்தினான்.

இன்று உங்களது மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கி விட்டேன். எனது அருட்கொடைகளை உங்கள் மீது நான் நிறைவு செய்து விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக ஏற்றுக்கொண்டு விட்டேன்.

(அல் குர்ஆன் 5:3)

இந்த அல் குர்ஆன் வசனம் நபி (ஸல்) அவர்களுக்கு துல்ஹஜ் பிறை 09ம் நாள் அரபா தினத்தில் தான் இறக்கியருளப்பட்டது.

இவ்வாறு சிறப்பு மிக்க அரபா தினத்தை விட சிறந்த நாள் வேறு எதுவும் கிடையாது. ஏனைய தினங்களை விட அன்றைய தினத்தில் அதிகமான நரகவாசிகளுக்கு அல்லாஹ் விடுதலை அளிக்கின்றான். அன்று அல்லாஹ் அடியார்களிடம் நெருங்கி வந்து அவர்களின் மாண்பு குறித்து வானவர்களிடம் பெருமை பாராட்டுகிறான்என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

அரபா தான் ஹஜ், ஹஜ் என்பதே அரபாவில் தரிப்பது தான். துல்ஹிஜ்ஜா 10ஆம் நாள் இரவில் அதிகாலைக்கு முன்பு ஒருவர் அரபாவிற்கு வந்து விட்டால் அவர் ஹஜ்ஜை அடைந்து கொள்வார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத், நஸாஈ, திர்மிதி, அஹ்மத்)

அரபா முஸ்லிம்களுக்கு கற்பிக்கும் பாடம் என்னவெனில் இஸ்லாமிய அடிப்படை தவறாது கட்டொழுங்கை மீறாது வாழ வேண்டும். முழுமையாக அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு சகோதரத்துவ உணர்வோடு ஒற்றுமையாக வாழ வேண்டும். ஷைத்தான் அவர்களைப் பார்த்து ஏமாற்றம் அடைய வேண்டும் என்பதேயாகும்.

அரபா தினத்தில் ஹஜ்ஜுக்கு செல்லாதவர்கள் துல்ஹஜ் மாதம் 09 ஆம் பிறையில் நோன்பு நோற்பது சுன்னத்தான காரியமாகும். புனித ஹஜ்ஜில் ஈடுபடுவோர் அரபா தினத்தில் அதிகம் நன்மைகள் புரிவதற்கும் புத்துணர்ச்சியுடன் செயற்படுவதற்கும் ஹாஜிகளுக்கு அரபா நோன்பு சுன்னத் இல்லை. மாறாக ஹாஜிகள் அல்லாத மற்றவர்கள் துல்ஹஜ் மாதம் 09ஆம் நாள் நோன்பு நோற்பது ஸுன்னத் ஆகும்.

அரபா நோன்பு பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள். அது கடந்து போன ஓராண்டு மற்றும் எதிர்வரும் ஓராண்டு நிகழும் சிறு பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்' என்றார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் துல்ஹஜ் மாதம் 09ஆம் தினத்தில் (அரபா தினம்), ஆசூரா தினத்திலும் ஒவ்வொரு மாதமும் மூன்று தினங்களிலும் நோன்பு நோற்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத்)

மேலும், அரபா நோன்பானது கடந்து போன வருடத்தினதும் எதிர்வரும் வருடத்தினதும் பாவங்களுக்கு தண்டப்பிரகாரமாக ஆகிவிடுகின்றது. (ஆதாரம்: புகாரி, ஆபூதாவூத், திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா)

ஆகவே அரபா தினத்தின் மாண்புகளையும் முக்கியத்துவங்களையும் உணர்ந்து துல்ஹஜ் மாதம் பிறை ஒன்பதாவது நாளான அரபா தினத்தில் நோன்பு நோற்று அந்நாளில் பாவங்களுக்கு மன்னிப்பும், நரக விடுதலையும் கிடைக்க வல்ல நாயன் துணைபுரியட்டும்.

**எம்.யூ.எம். வாலிஹ்...**
(அல் அஸ்ஹரி), வெலிகம

# ஹோமாகம மழை வெள்ள பாதிப்புகள் அமைச்சர் பந்துல தலைமையில் ஆராய்வு





மழை மற்றும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஹோமாகம பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஹோமாகம பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், பிரதேச செயலாளர் உள்ளிட்ட கள உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட தரவுகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார். ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 894 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வீடுகள் நீரில் மூழ்கி அல்லது வெள்ளத்தில் சிக்கியுள்ளதாகவும் ஹோமாகம பிரதேச செயலாளர் பி. ஏ. டி.சிந்தக தெரிவித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட வசதிகளை தொடர்ந்தும் வழங்குவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.அங்கு உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,"சமீபத்திய மோசமான காலநிலை மற்றும் வெள்ளம் காரணமாக களனி பள்ளத்தாக்கு மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர். குறிப்பாக அவிசாவளை தேர்தல் தொகுதியின் புவக்பிட்டியை சூழவுள்ள பகுதிகளும் களனி பள்ளத்தாக்கு ஜல்தார உள்ளிட்ட பகுதியும் கடுவெல மற்றும் அதனை சூழவுள்ள பகுதி பகுதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகள் பாதிக்கப்பட்டாலும், தற்போது ரயிலை இயக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.இலங்கை வீதி அபிவிருத்தி அதிகார சபை, ரயில்வே திணைக்களம் மற்றும் பொது போக்குவரத்து துறையில் இயங்கும் நிறுவனங்களுக்கு தேவையான அதிகாரத்தை அந்தந்த மாகாணங்களின் மாகாண பணிப்பாளர்கள் மற்றும் பொறியியலாளர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் இவ்வாறான இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நீண்டகால தீர்வுகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்துவதும் மிகவும் அவசியமாகும்" எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அரசியலமைப்பை மைத்திரி...

உயர் நீதிமன்ற தீர்ப்பபில் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு மன்னிப்பு வழங்குவதற்கான உரிய காரணங்களை, நீதிமன்றத்தில் முன்வைக்கத் தவறிவிட்டாரென்றும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்த குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை ஆராய்ந்த மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள், இந்த தீர்ப்பை ஏகமனதாக அறிவித்துள்ளனர் .

இந்த பொது மன்னிப்பு விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புச் சட்ட விதிகளையும் அதன் ஊடாக உறுதி செய்யப்பட்ட பொது மக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறியுள்ளதாக நீதியரசர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட பணத்திலிருந்து மனுதாரருக்கு பத்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்துக்குள் இப்பணத்தை செலுத்த வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று , பாதிக்கப்பட்ட இவோன் ஜோன்சன், ரோஜர் ஜோன்சனின் தாயாரான ரோஜர் ஜோன்சன் மற்றும் கெரலயின் ஜோன்சன் ஆகியோருக்கு தலா 10 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் மைத்திரி பால சிறிசேனவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று அவர்கள் செலுத்திய வழக்குக்கான தொகையையும் செலுத்தவும் உத்தரவிடப்பட்டது.

மகளை இழந்த பெற்றோருக்கு சட்டத்தின் மூலம் கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காததால் அனுபவித்த மன உளைச்சலை பணத்தால் மதிப்பிட முடியாது. இதனால், இதுகுறித்து நீதிமன்றம் விசேட கவனம் செலுத்தி, அவர்களுக்கு ஓரளவு நீதி வழங்கும் வகையில் இந்த நட்டஈட்டை வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை இவ்வாறான செயல்களுக்கு இழப்பீடாக வழங்குவது ஏற்புடையதல்ல என தெரிவித்த நீதிமன்றம், உரிய அடிப்படை உரிமைகளை மீறியதற்காக மனுதாரர் தரப்புக்கும் கொலையுண்ட இளம் பெண்ணின் பெற்றோருக்கும் தலா நூறு ரூபா இழப்பீடு தொகையும், அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலிருந்து தப்பியோடியுள்ளாரெனக் கூறப்படும் ஜுட் சமந்த அந்தோனி ஜயமஹாவைக் கண்டுபிடித்து, நாடு கடத்தல் சட்டம் மற்றும் சர்வதேச சாசனங்களுக்கு அமைவாக நாட்டுக்கு அழைத்து வருமாறும் அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவுடன் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சட்ட மாஅதிபருக்கும் உத்தரவிடப்பட்டது. அவரைக் கைது செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ள, பொலிஸ் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறும் சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர், சட்டமாஅதிபர் மனு ஒன்றின் மூலம் இதுதொடர்பில் உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் தீர்ப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதியரசர்கள் எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஏகமனதாக இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

இம்மனு மீது, ஏகமனதாக தீர்ப்பை அறிவித்த மூன்று நீதியரசர்களும் இது தொடர்பிலான விடயங்களை விளக்கி முன்னூற்று ஆறு பக்கங்கள் கொண்ட தீர்ப்பை வாசித்தனர்.

மூன்று நீதிபதிகளும் திறந்த நீதிமன்றத்தில் காரணங்களை விளக்கி தீர்ப்பை அறிவித்தனர்.

இராஜகிரி ரோயல் பார்க் குடியிருப்பு வளாகத்தில் வைத்து இவோன் ஜோன்சன் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளியான ஜுட் சமந்த அந்தோனி ஜயமஹாவுக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு சந்தர்ப்பங்களில் பொது மன்னிப்பு வழங்கியுள்ளதாக தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய பொருட்களின்...

1.100 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வெள்ளை கௌபி 110 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 990 ரூபாவாகும்.

425 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 75 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.இதன்பிரகாரம், இதன் புதிய விலை 350 ரூபாவாகியுள்ளது.

995 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சிவப்பு கௌபி, 45 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை 950 ரூபாவாகக் குறைந்துள்ளது.

800 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ செத்தல் மிளகாய் 20 ரூபாவினால் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை ரூபா 780.

950 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ நெத்திலி (தாய்) 20 ரூபாவினால் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை ரூபா 930.

200 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வட்டானா 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை ரூபா 185.

195 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மா 05 ரூபாவினால் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை ரூபா 190 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் அலுவலகத்தை...

வாழுகாராம மகா விகாரை உட்பட ஐந்து மகா விகாரைகளின் விகாராதிபதிகள், ஊவா பிராந்திய பிரதம சங்கநாயக வண, மஹரகம நந்த நாயக்க தேரர் , உள்ளிட்ட மகா சங்கத்தினர் இதன்போது பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர். ஏனைய சமயத் தலைவர்களும் சமய வழிபாடுகளை நடத்தி ஜனாதிபதிக்க ஆசிர்வாதங்களை வழங்கினர். அரசியல் அலுவலகத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தனவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

## மின்சார கட்டணங்கள் ஜுலையில்...

அலகுகளை கொண்ட மின் பாவனையாளர்களுக்கு ஒரு அலகுக்கு அறவிடப்படும் 08 ரூபாவை 06 ரூபாவாக குறைப்பதற்கும், 30 60 அலகு மின் பாவனையில் ஒரு அலகுக்காக அறவிடப்படும் 20 ரூபாவை 09 ரூபாவாக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இறக்குமதி தடையிருந்த காலத்திலும்...

செய்வது தொடர்ந்து நடந்து வருகிறது. இக்கலந்துரையாடலில் பல உள்நாட்டு வாகன உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கும் அதேவேளையில், உள்ளூர் வாகனங்களை கூட்டுச்செய்யும் வணிகங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறக்குமதிக்கு தடை விதிப்பது உள்ளூர் வாகன உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதாகவும், ஒரு நாட்டின் வாகன உற்பத்தியை தொடங்குவது நீண்ட கால செயல்முறை என்றும் அவர்கள் தெரிவித்தனர். உள்ளூர் வர்த்தகங்களை வலுப்படுத்த அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

## வெள்ள நிலைமையுடன் டெங்கு...

டெங்கு, தொற்றுநோய் அதிகரிக்கக் கூடும். நோய்ப் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமானது. டெங்கு வயது மற்றும் அந்தஸ்து பாராமல் தொற்றக்கூடியது. பலர் இந்த நோயிலிருந்து மீண்டாலும், உயிரிழப்பு அபாயம் உள்ள ஒரு நோய் இது. இந்த அபாயம் காரணமாகத்தான் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து மக்களுக்கு எடுத்துரைக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காலப்பகுதியில் பருவமழை வருவதால் டெங்கு பற்றி அதிகம் பேச வேண்டியுள்ளது. இதன்படி, 2023 இன் இறுதியில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2024 ஜனவரி இல் 10,000 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். ஆனால் அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து, ஏப்ரல் மாதமளவில் 2234 நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியுள்ளனர். ஆனால், மே, மாதத்தில் 2647 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

## மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம்...

அந்த வகையில் சட்டமூலத்தை முழுமையாக ஆராய்ந்து முறையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. நேற்றும் காலை முதல் சபையில் இது தொடர்பில் சர்ச்சைகள் எழுந்தன. எனினும், நேற்றைய தினம் மேற்படி சட்ட மூலம் சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சபையில் வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

## தடைசெய்யப்பட்ட விவசாய...

கைப்பற்றப்பட்டன. வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர், ஏத்தாளை எரம்புகொடல்ல கடல் பிரதேசத்தில் விஷேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, இந்தியாவிலிருந்து இயந்திரப் படகு மூலம் ஏத்தாளை கடற்பிரதேசத்திற்கு கொண்டுவரப்பட்ட இரசாயனப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில், இவற்றை எடுத்துச் செல்ல முற்பட்ட போதே,கடற்படையினரால் இவ்விரசாயன பொருட்கள் பறிமுதலாகின.

இதன்போது, 31 மூடைகளில் அடைக்கப்பட்ட இரசாயன மருந்துகள், கிருமிநாசினிகள், களை நாசினிகள் மற்றும் நாட்டில் தடை செய்யப்பட்ட இரசாயன உர வகைகளும் மீட்கப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட விவசாய இரசாயன பொருட்களை, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்திருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## நவீன உலகத்துக்கு ஏற்ற வகையில்...

பிள்ளைகளுக்கான உயர்தரக் கற்கைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அமைச்சர்: ஜுலை மாத இறுதியில், சகல பாடப்பிரிவுகளும் கொண்ட சகல பாடசாலைகளும் இணைக்கப்பட்டு, தகவல் தொழில் நுட்பம் வலையம் அமைக்கப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்படும். தொழிற்சங்க நடவடிக்கைகளால் ஆசிரியர்கள் சுகயீனமுற்றாலும், குழந்தைகள் சுகயீனம் அடைய மாட்டார்கள்.

கல்விப் பொதுத் தரப்பரீட்சை முடிவடைந்தவுடன் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கும் சவாலான பணியை ஆரம்பித்துள்ளோம். பரீட்சை முடிவுகள் காலதாமதமாவதால், கல்வியை இழக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்காகவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண அமைச்சுக்கள்...

வெளியிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வருட காலத்தில் 8,031 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 2,695 வேலைத்திட்டங்கள், ஆளுநர் செந்தில் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் வலுவான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்காக இவ்வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## இணைய சேவையை வழங்க...

வழங்கியுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த இணைய சேவை வசதிக்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னரே தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இந்த இணைய சேவையை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியுமெனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி, ஆராய்ச்சி மற்றும் மீன்பிடித் துறைகளுக்கு வேகமான இணையச் சேவையை இதன் ஊடாக வழங்க முடியும் என்றும், உலகில் எங்கிருந்தும் இந்த இணைய வசதியைப் பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவில் அண்மையில் நடைபெற்ற 10 ஆவது உலக நீர் மாநாட்டின் உயர்மட்ட அமர்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான எலோன் மஸ்கை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது "Starlink" வலையமைப்புடன் இணைப்பதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, செய்மதி தொழில்நுட்பம் மூலம் இணைய வசதி சேவையை வழங்க "Starlink" நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் சுமார் 2000 Starlink (ஸ்டார்லிங்க்) வலையமைப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 32 நாடுகளில் ஏற்கனவே அதிவேக இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் குறிப்பிட்டதாவது:

''இன்று முதல் ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் இணைந்து செய்மதி தொழில்நுட்பம் மூலம் இணைய வசதிகளைப் பெற்று, தொழில்நுட்பத் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த இருக்கிறோம். இதுவரை கோபுரங்கள் ஊடாக வழங்கப்பட்ட குறைந்த அளவிலான இணைய வசதிகளுக்குப் பதிலாக, இந்த செய்மதி தொழில்நுட்ப இணைய வசதி மூலம் எங்கிருந்தும் இணைய வசதியைப் பெற முடியும். இதன் ஊடாக தொழில்நுட்பத் துறையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. மாணவர்கள், ஆய்வாளர்கள், மீனவர்கள் ஆகியோருக்கு இந்த இணையதள வசதி பெரும் வசதியாக உள்ளது என தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(07.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பண வரவும் புகழும் ஒன்றாக வந்தடையும். பங்குச்சந்தையில் நல்ல லாபம் தென்பட்டாலும் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம்.

**ரிஷபம் :**
குடும்பத்தில் குதுகலமான சூழ்நிலை காணப்படும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். உறவினர்களும் நண்பர்களும் உதவிக்கரம் நீட்டுவர்.

**மிதுனம்:**
குடும்பத்தில் உற்சாகத்திற்கு குறைவிருக்காது. உறவினர்களிடம் ஏற்படும் பிரச்சனைகளை சுமூகமாக பேசி தீர்ப்பீர்கள். கலைஞர்கள் வாழ்வில் நல்ல திருப்பும் வந்து சேரும்.

**கடகம்:**
கூட்டாளி ஒருவரின் ஆலோசனைப்படி அதிக லாபம் பெறுவீர்கள். குடும்பத்தில் மனதிற்கு பிடித்த சம்பவங்கள் நடைபெறும்.

**சிம்மம்:**
கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க பெற்று பணியில் சுறுசுறுப்பாக செயல்படுவார்கள். அதே நேரம் எந்த விஷயத்திலும் நிதானம் தேவை.

**கன்னி:**
பிள்ளைகளின் கல்விக்காக தாராளமாக செலவு செய்வீர்கள். கலைஞர்கள் புதிய திருப்பத்தை சந்திப்பீர்கள். எதிர்பாராத அறிமுகம் கிடைக்கும்.

**துலாம்:**
கலைஞர்கள் பணியாற்றும் பொழுது கவனமாக செயல்படுங்கள். இரவு நேர பயணத்தை தவிர்த்திடுங்கள். பதவி உயர்வு சம்பள உயர்வு பற்றி சிந்திக்க வேண்டாம்.

**விருச்சிகம்:**
கடன் சம்மந்தமாக இருந்த தொல்லைகள் மறையும். கலைஞர்கள் நல்ல திருப்பங்களை கண்டு மகிழ்வீர்கள். புதிய ஒப்பந்தங்களில் சிறு மாற்றங்களை செய்வீர்கள்.

**தனுசு:**
தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் பெற்றோரின் அறிவுரையால் சரியா கூடும் கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை பெற பொறுமையாக இருப்பது அவசியம்.

**மகரம்:**
குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகளை சந்திக்க நேரிடும். சுப காரியங்கள் தள்ளிப் போகும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முயற்சிப்பார்.

**கும்பம்:**
மற்றவர் குடும்ப பிரச்சினைகள் தலையிடாதீர்கள். கலைஞர்களுக்கு சக கலைஞர்களால் புதிய வாய்ப்புகள் வந்து சேரலாம்.

**மீனம்:**
இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெற முயற்சி மேற்கொள்வீர்கள். கலை துறையை சேர்ந்தவர்கள் புதிய ஒப்பந்தங்களில் பங்கு பெற வெளியூர் பயணிப்பர் .

## மின்சார சபையின்.... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் அவசரமாக கொண்டு வந்ததல்ல. இதற்கான முதலாவது அமைச்சரவை பத்திரத்தை 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் நான் சமர்ப்பித்தேன்.

## பெருந்தோட்ட மக்களின் ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் முழுமையான பங்களிப்பையும் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்றார். இக்கூட்டத்தில் 168 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உலகளாவிய ரீதியிலுள்ள அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாடு, ஜெனிவாவில் நேற்று முன்தினம் மாலை 08 மணிக்கு நடைபெற்றது.

## குடிவரவு, குடியகல்வு ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்புதிய முத்திரைகள் அறிமுகம் தொடர்பாக கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய குறிப்பிடுகையில், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் இந்த நடைமுறை 1948 ஆம் ஆண்டு முதல் ஆரம்மானது. இது, தற்போது பல்வேறு தரப்பினரால் எளிதில் தவறாகப் பயன்படுத்தப் படுத்தப்பட்டது.

## SLFP உள்ளிட்ட புதிய... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேம்ஜயந்த, நளின் பெர்னாண்டோ, அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்சா, பிரியங்கர ஜயரத்ன, உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிராந்திய சபை உறுப்பினர்கள். பிரதிநிதிகள் மற்றும் சிவில் ஆர்வலர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

## காட்டு யானைகள்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டு யானைகளால் இரவில் நிம்மதியாக உறங்க முடியவில்லை,வெளியில் நடமாட முடியவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பினைப் போன்றே யானைகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

## களுஅக்கல லபுகம வீதி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்தலமாக வளர்ந்துள்ளது. கொழும்பு பதுளை ரயிலின் எல்ல பகுதியின் கவர்ச்சியானது அதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## பிரதமராக ஞாயிறன்று...

கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் பிரதமராக மோடி பதவியேற்க உள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்றக் குழு தலைவராக நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்ட நிலையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆட்சி அமைக்க தனிப்பெரும்பான்மை இல்லாத பா.ஜ.கவுக்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த சந்திரபாபு நாயுடுவும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த நிதிஷ்குமாரும் ஆதரவு தருவதாக உறுதி அளித்தனர்.

இதனையடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைமையில் பிரதமர் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ளார்.

இதனையடுத்து நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க கூட்டணி அரசு எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 6 மணிக்கு பதவி ஏற்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி மக்களவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள்.

## வட மாகாண அபிவிருத்தியில்...

அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இதனைத் தெரிவித்தார்.இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் :

கடந்த காலத்தில் பின்னடைவைச் சந்தித்த பொருளாதாரம் தற்போது ஸ்திரமாகி வருகிறது. இதனூடாக மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேம்படுகிறது.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் அரசாங்கத்தின் பாரிய வேலைத் திட்டங்கள் நடந்து வருகின்றன.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை ஜனாதிபதியே கட்டியெழுப்பினார். இதனால் பொருளாதார ரீதியில் நலிவடைந்த மக்களின் வாழ்வு சீராகி வருகிறது. அத்துடன், மக்களுக்கு காணி உரிமைகளையும் ஜனாதிபதி வழங்கி வருகிறார். 20 இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் “ உறுமய” வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஒரு நூற்றாண்டு காலமாக புனித ஹஜ் கடமையை மிகச் சிறப்பாக வழிநடத்தும் சவூதி அரேபிய அரசு



நெருங்கிவரும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் பற்றியும், அதற்கான ஏற்பாடுகளை வழமைபோன்று மிகச்சிறப்பாக மேற்கொண்டுவரும் சவூதி அரேபிய அரசின் முன்னேற்பாடுகள் சம்பந்தமாகவும் தினகரன் வாசகர்களுக்கு தகவல்களை வழங்கும் நோக்கில் சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராசிக் சென்றவாரம் மக்கா மற்றும் மதீனா மாநகரங்களுக்கு சென்றிருந்த வேளையில் ஹஜ் முன்னேற்பாடுகளைப் பற்றி நேரடியாக அவதானித்து தினகரனுக்கு வழங்கிய பேட்டி.

**கேள்வி: முதலில் புனித ஹஜ் கடமை பற்றிக் கூறுங்கள்.**





பதில்: முதலில் தினகரன் வாசக நெஞ்சங்களுக்கு என் நன்றிகளும் பிரார்த்தனைகளும். புனித ஹஜ் கடமை என்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களில் ஐந்தாவது கடமையாகும். வசதி உள்ளவர்கள் அந்தக்கடமையினை பூரணப்படுத்தாமல் இஸ்லாத்தின் வரையறைகளை முழுமைப்படுத்த முடியாது.

**கேள்வி: பல தசாப்த காலமாக ஹஜ்ஜினை சிறப்பாக நிர்வகிக்கும் சவூதி அரேபிய அரசின் அனுபவங்கள் பற்றிக் கூற முடியுமா?**

பதில்: சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஒருவர் ஹஜ் கடமையினை நிறைவேற்றுவதென்பது பாதுகாப்பற்ற ஒரு பயணமாகவே கருதப்பட்டது. ஆனால் இன்று மிகவும் பாதுகாப்பான சூழலில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக ஹஜ் நிறைவுசெய்யும் பேற்றினை ஹாஜிகள் பெறுகின்றனர்.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1924 (ஹி: 1343) இல் முதன்முதலாக சவூதி அரேபியாவின் ஸ்தாபகர் மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஹஜ் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நிகழ்வினை ஹிஜ்ரி வருட கணக்கீட்டில் நாம் நோக்கினால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் (1443 இல்) நூறு வருடங்கள் நிறைவுற்றன. 1924 முதல் இன்றுவரை தொடராக ஒரு நூற்றாண்டு காலமாக ஹஜ்ஜினை நிர்வகித்து வரும் ஒரு பரந்த அனுபவத்துடனேயே சவூதி அரசும் அதன் நிர்வாகிகளும் தொடர்ந்தும் இக்கிரியைகளை மிகச் சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர்.

**கேள்வி: இம்முறை ஹஜ் கடமைகளை நிறைவேற்றவுள்ள யாத்திரிகர்களின் எண்ணிக்கை இதுவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?**

பதில்: வழமையாக துல்ஹஜ் பிறை 8 வரை ஹஜ் யாத்திரிகர்களின் கணக்கீடு நடைபெறும். அதேவேளை இம்முறை 150 நாடுகளுக்கு மேற்பட்ட சுமார் இரண்டு மில்லியன் யாத்திரிகர்கள் ஹஜ் கடமையினை நிறைவேற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சென்ற முறை (1.8 மில்லியன்)ஐ விட இரண்டு இலட்சத்தினால் அதிகரித்துள்ளது.

**கேள்வி: ஹஜ்ஜுக்காக களமிறக்கப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எவை? அவை ஒவ்வொன்றினதும் முன்னேற்பாடுகள் யாவை?**

பதில்: குறிப்பாக ஹஜ் கிரியைகளுக்கான காலமாகிய ஷவ்வால், துல் கஃதா, துல்ஹஜ் அத்துடன் சேர்த்து முஹர்ரம் ஆகிய இம்மாதங்களில் ஹஜ் யாத்திரிகர்களைக் கவனிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே



மக்கா மற்றும் மதீனா மாநகரங்களில் அரச, அரச சார்பற்ற அனைத்து நிறுவனங்களும் தம் திட்ட வரைவுகள், நகர்வுகளை மேற்கொள்ளும். குறிப்பாக ஹஜ்ஜுடன் மற்றும் மனித சனநெருக்க நிர்வாகத்துடன் நேரடியாகத் தொடர்புடைய அமைச்சுக்கள் நிறுவனங்கள் தமது முன்னேற்பாடுகளை முன்கூட்டியே நிறைவுக்குக் கொண்டுவந்து அவற்றின் தயார்நிலையினை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும். அவ்வனைத்து அறிக்கைகளும் முறையாக மேல்நிலை அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மீளாய்வு செய்யப்படும். குறைகள் முன்கூட்டியே நிர்த்திசெய்யப்பட்டு, ஆயத்தங்கள் தயார்நிலையில் உள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படும். அந்த வகையில் இம்முறையும் நிறைவடைந்த அனைத்து தயார்நிலைகளும் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்களின் மேற்பார்வைக்கும், அமைச்சரவையின் மேற்பார்வைக்கும் உத்தியோகபூர்வமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

உலகிலேயே மிகப்பெரும் சனக்கூட்டம் ஏற்படும் நிகழ்வாகக் கருதப்படும் புனித ஹஜ்ஜுக்காக சவூதி அரேபியா தனது அனைத்து வளங்களையும் களத்திலே இறக்கி நிர்வகிப்பது வழமை. அந்தவகையில் முக்கியமாக: ஹஜ் மற்றும் உம்ராவுக்கான அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, வர்த்தக அமைச்சு, மனிதவள அபிவிருத்தி அமைச்சு, இஸ்லாமிய அலுவல்கள் அமைச்சு, போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு என் ப வ ற் று டன் திணைக்களங்களாகிய மின்சாரம், நீர் மற்றும் வடிகாலமைப்பு, விமானப்போக்குவரத்து, புகையிரதம் போன்ற திணைக்களங்களும் தமதுதயார்நிலையினை அறிவித்துள்ளன.

**கேள்வி: இவ்வமைச்சுகள் திணைக்களங்கள் சிலவற்றின் தயார் நிலைகளை கூற முடியுமா?**

பதில்: குறிப்பாக பாதுகாப்பு அமைச்சு வருடாவருடம் ஹஜ்ஜுக்கான தனது தயார்நிலையினை அறிவிக்கும் நிகழ்வே சவூதி அரேபியாவின் உத்தியோகபூர்வ இராணுவ அணிவகுப்பாகும். இது இன்னும் சில தினங்களில் மக்காவில் வழமைபோன்று பல்லாயிரம் துருப்புக்களின் பங்களிப்புடன் நடைபெறும். அடுத்து குறிப்பாக ஹஜ் அமைச்சகம் தனது அனைத்து மனிதவளங்களையும் பிரயோகிக்கும். அதேபோன்று சுகாதார அமைச்சு தனது சென்றவார அறிக்கையில் புனித மக்கா மற்றும் ஹஜ் கிரியைகள் நடைபெறும் இடங்களுக்காக மாத்திரம் 18 பெரிய மருத்துவமனைகள், 126 சிறிய அளவிலான மருத்துவ நிலையங்கள், 10 மில்லியன் வைத்திய உபகரணங்கள் அடங்கிய 10 ஆயிரம் மருத்துவப்பைகள், மேலும் அதுபோன்று 5 மில்லியன் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய மேலதிக தயார்நிலைப் பைகள், 2540 முதலுதவிக் குழுக்கள், 98 முதலுதவி நிலையங்கள், 694 அம்பியூலன்ஸ் வண்டிகள், 10 பாரிய அம்பியூலன்ஸ் பேருந்துகள் (நடமாடும் வைத்திய நிலையங்கள்), 10 அம்பியூலன்ஸ் விமானங்கள் என்பவற்றுடன் 595 விஷேட அவசர நிலைக்குழுக்கள் மக்காவில் மாத்திரம் தயார்நிலையில் உள்ளன. முன்னெப்போதும் இல்லாத வகையில் ஹஜ்ஜாஜிகள் பயணிக்கும் பாதைகள் சென்ற சில வருடங்களாக சிறந்த பரிபாலனத்துடன் காணப்படுகின்றன. குறிப்பாக மக்கா மதீனாவுக்கிடையேயான 450 கி.மீ பாதையோரங்களில் இருக்கும் அனைத்து வசதிகளும் மிகச் சிறப்பாக கையாளப்படுகின்றன. இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் பிரத்தியேக திட்டத்தின்படி இவ்விரு நகரங்களுக்கிடையேயான பள்ளிவாயல்கள், அடிப்படை வசதிகள் அதிநவீன வசதிகளுடன் காணப்படுகின்றன.

## அதியுச்ச தயார்நிலைகளுடன் ஆரம்பமாகும் இவ்வருட ஹஜ் கடமை



போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சகத்தின் அறிக்கையின்படி இவ்வருடம்: 123 பாலங்கள், 48 வாகனப்போக்குவரத்துக்கான சுரங்கப்பாதைகள், 10 பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதைகள், 4767 பாதையோர மின் விளக்குகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. ஹாஜிகளின் பாவனைக்காக 27000 அதிநவீன சொகுசு பேருந்துகள் தயார்நிலையிலுள்ள.

## சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராசிக் வழங்கிய தகவல்கள்

அதேவேளை புகையிரதத் திணைக்களம் ஹாஜிகளுக்காக மாத்திரம் 13 பெட்டிகளைக் கொண்ட 35 புகையிரதங்களினூடாக 3800 பயணங்களையும், 1.6 மில்லியன் பயணிகளுக்கான இருகைகளையும் தயார்நிலையில் வைத்துள்ளது. மணிக்கு 300 கி. மீ வேகத்தில் பயணிக்கும் சவுதியின் இரு புனிதஸ்தலங்களுக்கான 'சார்' புகையிரதங்கள் உலகிலேயே உள்ள அதிநவீன அதிவேக 10 புகையிரத சேவைகளில் நான்காவது இடத்திலுள்ளன.

பற்பல விமானச் சேவைகளை உள்ளடக்கிய விமனப்போக்குவரத்து அதிகாரசபை 7700 பயங்களினூடாக 3.4 மில்லியன் இருக்கைகளை ஹஜ் யாத்திரிகர்களுக்காக இவ்வருடம் ஒதுக்கியுள்ளது. இவற்றில் 1.2 மில்லியன் இருக்கைகள் சவூதி அரேபிய விமனச் சேவையின் 150 விமானங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

ஹஜ்ஜின் முக்கிய கடமைகள் நான்கில் ஒன்றான அரஃபா பெருவெளியில் தரித்து நிற்பதற்கான ஏற்பாடுகளை சென்ற வாரம் நேரடியாக அவதானிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கூடாரங்கள், பாதைகள், மலசல கூட வசதிகள், நீர், வெப்பத்தினைக் குறைக்கும் நீர் வீச்சுகள், இளைப்பாறும் இடங்கள், உணவு அருந்தும் இடங்கள் என வசதிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அத்துடன் விஷேடமாக நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக தரையில் சுற்றாடலுக்கு உகந்த வெண்மைநிற பூச்சுகள் சுமார் 25 ஆயிரம் மீற்றர் பரப்பளவிற்கு மேலாக பாதைகள் பூராகவும் பூசப்பட்டுள்ளது, இத்தொழில்நுட்பம் சுமார் 15 தொடக்கம் 20 வீதம் வெப்பத்தினைக் குறைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்முறை அரஃபாவில் குத்பாப் பேருரை நிகழ்த்துவதற்காக புனித மக்கா ஹரம் ஷரீபின் இமாம் பேராசிரியர் மாஹிர் முஐகிளீ அவர்கள் மன்னர் சல்மானின் அனுமதியினைப் பெற்றுள்ளார்.

அதேவேளை மனிதவள அமைச்சு இம்முறை; இலவசமாக சேவையினை வழங்குவதற்காக சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சவுதிக் குடிமக்கள் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்துள்ளார் திறமைகள் அனுபவத்திற்கேற்ப பற்பல துறைகளில் வேதனமின்றி சேவைகளை வழங்க அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**கேள்வி: மன்னர் சல்மான் அவர்களின் விருந்தினர்கள் சம்பந்தமாக?**

பதில்: வருடாவருடம் சவூதி அரேபிய மன்னரின் சொந்த அனுசரணையில் பல்லாயிரம் யாத்திரிகர்கள் ஹஜ்ஜுக்காக இலவசமாக அழைக்கப்படுகிறார்கள். இம்முறையும் 88 நாடுகளிலிருந்து 2322 ஹாஜிகள் மன்னரின் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். அதில் முன்பெப்போழுதும் இல்லாதவாறு இலங்கையிலிருந்து 20 யாத்திரிகர்கள் இவ் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**கேள்வி : உண்மையில் இத்தரவுகள் மற்றும் எண்கள் சவூதி அரேபியாவின் ஹஜ்ஜை வழிநடத்தும் அனுபவத்தினையும், பாரிய சேவைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. எதிர்காலம் சம்பந்தமாக என்ன கூறலாம்?**

பதில்: எதிர்காலத்தில் உலகில் என்னென்ன நவீன வசதிவாய்ப்புகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நிகழுமோ அனைத்தையும் நிச்சயம் ஹஜ்ஜுடைய இலகுத்தன்மைக்கும் நேர்த்திக்கும் பாவித்து சிறப்பான ஒரு நிறைவாகத்தினை ஹஜ் கடமைக்கு சவூதி அரேபியா வழங்கும் என்பதனை சவூதி அரேபியாவின் வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. இப்பணிகளை செவ்வனே மேற்கொள்ள பணிப்புரைகளை வழங்கி வழிகாட்டி மேற்பார்வை செய்யும் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்களுக்கும், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களுக்கும் மற்றும் அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

**இக்பால் அலி...**

## எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் பதவியேற்பார்

காங்கிரஸ் எம்.பி ராகுல், லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ஆகக்கூடும் என தகவல் வெளியாகி உள்ளது. அதேநேரத்தில், இது குறித்து அவர் தான் முடிவு செய்ய வேண்டும் என அக்கட்சி கூறியுள்ளது.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், இண்டியா ' கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு தனித்து 99 இடங்கள் கிடைத்துள்ளன. ஆட்சியில் அமர்வதற்கு தேவையான இடங்கள் கிடைக்காததால், எதிர்க்கட்சி வரிசையில் அமர காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. தொடர்ந்து, லோக்சபா எதிர்க்கட்சி தலைவராக யார் பதவியேற்பார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்நிலையில், எதிர்க்கட்சி தலைவராக ராகுலை நியமிக்க வேண்டும் என காங்கிரசில் கோரிக்கை எழுந்துள்ளது. பல எம்.பி.,க்கள் இது குறித்து வெளிப்படையாக பேசி உள்ளனர்.

காங்கிரஸ் கட்சியும், ராகுலே எதிர்க்கட்சி தலைவராக வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளது.

# பிரதமராகப் பதவியேற்கும் மோடிக்கு 75 நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து



ஏழு கட்டங்களாக நடைபெற்ற இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகளின்படி பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை தொகுதிகளில் வெற்றி பெற்றதையடுத்து புதிய பிரதமராக நரேந்திர மோடி நாளை பதவியேற்கிறார். 8 ஆம் திகதியன்று பதவியேற்கவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மறுநாள் 9 ஆம் திகதியன்றே அவர் பதவியேற்பாரென்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்தியாவின் மொத்த 543 மக்களவைத் தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 இடங்களிலும், இந்தியா கூட்டணி 234 இடங்களிலும் வென்றுள்ளன. இதில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பா.ஜ.க தனித்து 240 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியிருந்தது. ஆட்சி அமைக்க தனிப்பெரும்பான்மை இல்லாத பா.ஜ.கவுக்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த சந்திரபாபு நாயுடுவும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த நிதிஷ்குமாரும் ஆதரவு தருவதாக உறுதி அளித்தனர். அதன்படி, தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைமையில் பிரதமர் மோடி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ளார். அவர் நாளை பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

அந்த வகையில், குடியரசுத் தலைவர் திரவெளபதி முர்முவை சந்தித்து தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியின் தலைவர்கள் ஆட்சியமைக்க உரிமை கோரினர். அதன் தொடர்ச்சியாக மீண்டும் பிரதமர் மோடி பதவியேற்க உள்ளார்.

மூன்றாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்கும் மோடிக்கு 75க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அதே போல், நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் உலகத் தலைவர்கள் பங்கேற்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது. அதில், நேபாளப் பிரதமர் புஷ்ப கமல் தஹால், பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவும் பங்கேற்கிறார்.

மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்நாத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.






## பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு விழா



கடந்த ஆண்டு நடைபெற்ற 47 ஆவது தேசிய மாபெரும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு ஊவா மாகாணத்திற்குப் புகழ் சேர்த்த 110 விளையாட்டு வீரர்களை பாராட்டி ஊக்குவிப்புப் பணம் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கும் கிரிடா வர்ண பிரதாப விழா அண்மையில் பதுளை ரிவர்சைட் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன் போது ஹாலி எல நகரிலிருந்து வீரர்கள் அனைவரும் வாகன பேரணியாக பதுளை நகருக்கு அழைத்து வரப்பட்டனர். பிரதான நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஊவா மாகாண விளையாட்டு அமைச்சினால் 30 இலட்சம் ரூபா பணப் பரிசுகள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





தங்கப் பதக்கம் வென்றவருக்கு ஒரு இலட்சம் ரூபாவும், வெள்ளிப் பதக்கம் வென்றவருக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், வெண்கலப் பதக்கம் வென்றவருக்கு இருபத்தையாயிரம் ரூபா ரொக்கமும் பரிசாக வழங்கப்பட்டதுடன், அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஒரு சோடி விளையாட்டு பாதணிகள் வாங்குவதற்கு 8000 ரூபா வவுச்சர்களும் வழங்கப்பட்டன .

ஊவா மாகாண பிரதம செயலாளர் திருமதி தமயந்தி பரணகம, விளையாட்டு அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்ண, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன் தெனிபிட்டிய, மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் தி.மு.க. திஸாநாயக்க ஆகியோரினால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

**எம்.ஏ.எம்.ஹசனார்...**
(ஊவா சுழற்சி நிருபர்)

# கிழக்கின் குரல்



# வாகரையில் சுற்றாடலை பாதுகாக்க புதிய திட்டங்கள்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)





வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் சுற்றாடலை பாதுகாக்க பல்வேறு திட்டங்கள் அமுலாக்கப் படவுள்ளதாக கோறளைப்பற்று வாகரைப் பிரதேச செயலக உதவிச் செயலாளர் அர்ச்சனா புவேந்திரன் தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் வாகரைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சுற்றாடல் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பொது அமர்வு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதேச உதவிச் செயலாளர் அர்ச்சனா,

சுற்றுச் சூழல் தினத்தில் மட்டுமல்லாமல் எப்பொழுதுமே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டும்.

வாகரைப் பிரதேச செயலகப்பிரிவில், நீண்ட காலப் பயன்தரும் மரங்களை நாட்டி அவற்றைப் பராமரித்துப் பாதுகாத்தல், திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம், கிரமமான சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுச் சுழலைப் பாதுகாப்பதென்பது தனிநபர்கள், குடும்பம், சமூகம் என ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய பணிகளைச் செய்வதற்கு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம், அதிக கரிசனை கொண்டு தொடர்ச்சியாகப் பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது என அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் ரீ. திலீப்குமார், சூழலைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், இயற்கைச் சூழலைப் பேணுவதற்கும் மக்கள் போசாக்குள்ள சத்துள்ள உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்வதற்கும், உணவுப் பஞ்சத்தைக் குறைப்பதற்கும் நஞ்சுள்ள உணவுகளைத் தவிர்ப்பதற்கும் உதவும் என அவர் தெரிவித்தார்.

சூழல் சுற்றாடல் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக வாகரை மகா வித்தியாலய வளாகத்தில் கனி தரும் மரங்கள் பாடசாலை மாணவர்களைக் கொண்டு நாட்டுவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வாகரைப் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏ. சுதர்ஷன் வாகரைப் பிரதேச சபை வருமானப் பரிசோதகர் ஏ.எம். நௌபர், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட அதிகாரிகளும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் வெளிக்கள அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



மூதூர் ஜாயாநகர் கிராமசேவகர் பிரிவில் மூத்தனார் குளத்தை மூடியவாறு காணப்படும் நீர்த்தாவரங்களை சிரமதான பணிமூலம் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஜாயா நகர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. (படம்:மூதூர் தினகரன் நிருபர்)

## ஐ.தே.க அமைப்பாளராக பேரின்பராசா மனோ ரஞ்சினி நியமனம்

அம்பாறை மாவட்ட கல்முனை தொகுதி வலய அமைப்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பேரின்பராசா மனோ ரஞ்சினி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் படி பாண்டிருப்பு 6 ஆம் வட்டாரம், பாண்டிருப்பு 10 ஆம் வட்டாரம், நீலாவணை 1 ஆம் வட்டாரம், கல்முனை 11 ஆம் வட்டாரம் ஆகிய 4 வலயத்திற்கான அமைப்பாளராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் வைத்து குறித்த நியமனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை(2) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார குறித்த நியமனக் கடிதத்தை கட்சி தலைமையகத்தில் வைத்து வழங்கி வைத்தனர்.

## நெல்லிக்காடு நரசிங்க வைரவர் வருடாந்த திருச்சடங்கு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

தாந்தாமலை நெல்லிக்காடு அருள்மிகு அரசடி ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவப் பெருவிழா இன்று திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி 10 ஆம் திகதி வரை இடம்பெறும் சர்க்கரை அமுதுடன் நிறைவுபெறவுள்ளது.

ஆலய பிரதம குருமார்களான சிவஸ்ரீ ஏ.கு.தேவராசா குருக்கள், சிவஸ்ரீ தேவ சுகிர்தராஜ் ஐயா தலைமையிலும் மற்றும் உதவிக்குருமார்களான சிவஸ்ரீ தி.தனுஸ்காந், கை. கஜேந்திரன் உதவியுடன் தொடர்ந்து நான்கு நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

## துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம்

(மணல்சேனை நிருபர்)



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 10 நாட்கள் மண்டலாபிஷேகப் பூஜையை தொடர்ந்து அம்மனுடைய திருக்கதவு எதிர்வரும் சனிக்கிழமை திறக்கப்பட்டு உற்சவம் 7 தினங்கள் நடைபெறவுள்ளது. இதில் தீ மிதிப்பு வைபவம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது.

## காத்தான்குடி அல்–ஹிறா மகா வித்தியாலயத்தில் 9 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தகுதி

காத்தான்குடி அல்ஹிறா மகா வித்தியாலயத்தில் இம்முறை க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் முதலாம் அமர்வில் 9 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 9 பேரும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 5 மாணவர்கள் 3A சித்தியைப் பெற்று மருத்துவத்துறைக்கும் 4 மாணவர்கள் விஞ்ஞானப் பிரிவில் ஏனைய துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக விஞ்ஞான துறையில் இப்பாடசாலை 100% சித்தி மற்றும் பல்கலைக்கழக பிரவேசத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(எம்.எம்.ஜெஸ்மின்)

அக்கரைப்பற்றில்

## தேசிய போதை எதிர்ப்பு வாரம் கொடி வழங்கி ஆரம்பித்துவைப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



தேசிய போதை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'நண்பா போதைப்புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசமொன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் கொடி தின அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸார் தலைமையில், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கொடி தினத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் முதலாவது கொடியை அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கொடி அணிவித்து இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சங்கங்களின் அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு தேசிய போதை எதிர்ப்பு கொடி விற்பனை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா, கணக்காளர் அப்துல் றஹ்மான், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள தலைமைப்பீட அதிகாரிகள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## EPL பல்கலைக்கழகத்தின் இலவச பயிற்சிப்பட்டறை

பொறியியல் தொழில்முறை கற்கை பல்கலைக்கழகம் (EPL) சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு இலவச பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது.

மாணவர்களின் எதிர்காலத்தை நவீன உலகுக்கு தயார் படுத்தும் எண்ணக்கருவில், இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

செயற்கை தொழினுட்பம் உள்ளிட்ட பல்வகை நவீன கற்கை நெறிகள் குறித்து வளவாளர்களால் இங்கு விளக்கமளிக்கப்படும். அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் கேட்போர் கூடத்தில்,

சனிக்கிழமை (08) இது நடைபெறும். காலை 9.12 மற்றும் மாலை 4 மணியென இரு அமர்வுகளாக இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது. மாணவர்களுக்கான சிறப்பு சலுகைகளாக 20,000 பெறுமதியான பண வவுச்சர்கள், இலவச பணப்பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கற்றல் உபகரணங்களும் இங்கு வழங்கப்படவுள்ளன.

## இலவச அரிசி வழங்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

(ஒலுவில் விசேட நிருபர்)



பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி விநியோகிக்கும் இரண்டாம் கட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பிரதேச செயலாளர் ஐ.பிர்னாஸ் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்பு திட்டத்திற்கமைய பொத்துவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 27 கிராமசேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 8948 குடும்பங்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி வழங்கி வைக்கப்பட்டதாக தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுக்கமைய நாடு தழுவியரீதியில் இலவசமாக அரிசி விநியோகிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி கொடுப்பனவுக்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்கள், முதியோர் கொடுப்பனவு பெறுவோர், விசேட தேவையுடையோர் ஆகியோருக்கு இலவசமாக அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு 10 கிலோகிராம் நாட்டு அரிசியை இரண்டு மாதத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி

## ஆதார வைத்தியசாலைக்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

லண்டன் வோள்தஸ்ரோ கற்பகவிநாயகர் ஆலய நிதி அனுசரணையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் 14 நோயாளர் விடுதிகளுக்கும் உணவருந்துவதற்கான மேசை, கதிரைகள் அகிலன் பவுண்டேசனால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், தாதி உத்தியோத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரிடம் அகிலன் பவுண்டேசன் இலங்கைக்கான இணைப்பாளர் திடீர் மரண விசாரணை அதிகாரி கலாநிதி வீ. ஆர். மகேந்திரனால் கையளிக்கப்பட்டது.

## வேளாண்மை காவலில் இருந்த நபரை தாக்கிய யானை

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

கிண்ணியா மஜீத் நகர் பகுதியில் வேளாண்மை காவல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் காட்டுயானை தாக்கியதில் கடந்த 4ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பூவரசந்தீவை சேர்ந்த வெல்லாங்குளத்தில் வசித்து வந்த முஹைதீன் பிச்சை முகம்மது அனிபா (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வேளாண்மை காவலில் ஈடுபட்ட ஏனைய மூன்று விவசாயிகளும் யானையின் பிடியிலிருந்து தப்பித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை எனவும், அவரது வீட்டிலிருந்து யானையை துரத்திச் சென்ற போது இரவு 9.00 மணியளவில் யானைத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இப்பகுதியில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை இடம்பெற்று வருவதனால் அங்கு வருகை தரும் யானைகள் அங்குள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கும் நுழைந்து அச்சுறுத்துவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த நபரைத் தாக்கிய யானை அங்குள்ள வீடொன்றையும் சேதப்படுத்திச் சென்றுள்ளது. வீட்டினை யானை தாக்க வருவதை முன்கூட்டியே அறிந்து கொண்ட அவர் பக்கத்து வீட்டில் தஞ்சமடைந்ததாக தெரிவிக்கின்றார்.

ஓலை வீட்டை யானை முற்றாக தாக்கிய பின்னர் அங்கு அமைக்கப்பட்டு வந்த கட்டமொன்றையும் உடைத்து அதனுள் வைக்கப்பட்டிருந்த நெல்லையும் சாப்பிட்டுச்சென்றுள்ளது.

அப்பகுதியில் ஒரு வாரத்திற்குள் 3 பேர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

அத்துடன் கிராமப்புற மக்களில் வாழ்வாதார பயிர்களான தென்னை, வாழை, கரும்பு முதலான பயிர்களையும் துவம்சம் செய்து வருகின்றது.

காட்டு யானைகளை தடை செய்வதற்கு மின்சார வேலிகள் இடப்பட்டு போதிலும் அவற்றை பொருட்படுத்தாது யானைகள் கிராமத்துக்குள் நுழைவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இக்காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள உடல் ரீதியாக பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் நேற்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க நடைபெற்ற மருத்துவ முகாம், கப்பல் துறை ஆயுர்வேத தள வைத்தியசாலையுடன் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் பல வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் வைத்திய சேவைகளும் சிறப்பாக நடைபெற்றன.

இதில் கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஏ.அனஸ்டீன், வைத்தியர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வடமாகாண ஆளுநருடன் ஐ.நா. பிரதிநிதி சந்தித்து கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

வட மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் (காணி), மாகாண காணி ஆணையாளர் மற்றும் யாழ். பிராந்திய பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம், கல்வி, விவசாயம், தொழிற்துறை ஊக்குவிப்பு, காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றும் பணி, மீள்குடியேற்றம், இயற்கை வளங்கள், முதலீட்டு திட்டங்கள், முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள், பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் அதிகம் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். அவர்களுக்கான உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும், நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார் . அத்துடன் புலம்பெயர் உறவுகள், வடக்கிலுள்ள தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புலம்பெயர் உறவுகளால் வடக்கு மாகாண மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ முடியும் என குறிப்பிட்ட ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச், முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சிறந்த பொறிமுறையின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார். வடக்கில் காணப்படும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி பாரிய திட்டங்களை மேற்கொள்ளும் போது பிரதேச மக்களின் நலன்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார். மேலும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் திட்டங்களில் பெற்றுக்கொள்ளும் இலாபத்தில் அந்தந்த கிராம அபிவிருத்திக்கென ஒருதொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

காணி உரித்துகள் வழங்கப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் தேவை எனவும் அவர் இதன்போது வினவினார். மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும், இதற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது அவசியம் எனவும் ஆளுநர் கூறினார். அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் செயற்படும் சர்வதேச அமைப்புகள் வடக்கில் இதுவரையில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், அனைத்து துறைகளுக்குமான அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.





## வடக்கின் உதயம்

# நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா ஓக. 09இல் ஆரம்பம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 09ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நல்லூர்க் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழி செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ்ப்பாண மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்று வியாழக்கிழமை பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப் பெற்றிருந்தது.

# மரக்கன்றுகள் நடுகை திட்டம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேசிய மரக்கன்றுகள் நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தின் குருநகர் பகுதியில் மரக்கன்றுகள் நடுகை திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், குருநகர் திருச்சிலுவை முன்பள்ளி சிறார்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.



# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்

**யாழ். விசேட நிருபர்**



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழா நடைபெற்று அன்றையதினம் மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவ திருவிழா இனிதே நிறைவு பெறுமென, கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் நலன் கருதி இம்முறையும் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இடையில் விசேட பேருந்து சேவைகளும் குறிகாட்டுவான் நயினாதீவுக்கு இடையில் விசேட படகு சேவைகளும் இடம்பெறும்.

அத்துடன் அமுதசுரபி அன்னதான மடத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். ஆலய சூழல்களில் பக்தர்களின் நலன் கருதி சாரணர்கள், சென். ஜோன். அம்புலன்ஸ், செஞ்சிலுவை சங்கம், மக்கள் நலன்புரி சங்கம் உள்ளிட்டவற்றின் தொண்டர்களும் சேவைகளில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையின் பல பிரிவுகள்

# விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடத்துக்கு மாற்றம்

**நாகர்கோவில் விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பல பிரிவுகள் புதிதாக அமைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடத்துக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை (05) முதல் மாற்றப்பட்டுள்ளன.

நெதர்லாந்து நாட்டு அரசாங்கத்தின் இலகு தவணைக் கடன் கொடுப்பனவில் 400 கோடி ரூபா செலவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் அமைக்கப்பட்டு அது இரண்டு மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பழைய கட்டடத்தில் இயங்கி வந்த அவசர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் அனுமதிக்கும் பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, மருந்து கட்டும் பகுதி, ஊசியேற்றும் பிரிவு, மருந்து வழங்கல் பிரிவு, பல் சம்பந்தமான பிரிவு, விடுதி 07 என்பன புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

# கர்நாடக இசைப்பேரரசி நித்யஸ்ரீ மகாதேவனின் இன்னிசை கச்சேரி

யாழ்ப்பாணம், அரியாலை நீர்நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பெருவிழா 2024 நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு தென்னிந்திய கர்நாடக இசைப் பேரரசி கலைமாமணி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவனின் தெய்வீக இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

ஆலய முன்றலில் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.00 மணி முதல் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் போரூர் எம்.ஏ.கிருஷ்ணசாமி, மிருதங்கம் நெய்வேலி சு.ஸ்கந்த சுப்ரமணியன், முகர்சிங் நா.சுந்தர் ஆகியோர் உள்ளனர். இதற்கு பூரண அனுசரணையை அரியாலையூர் நோர்வே வாழ் விநாயகர் அடியார் என்.நேதாஜி வழங்கவுள்ளார்.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை பார்வையிட்ட ஐ.நா. பிரதிநிதிகள்

**மாங்குளம் குறூப் நிருபர்**

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் முல்லைத்தீவுக்கான விஜயம் ஒன்றை நேற்று வியாழக்கிழமை மேற்கொண்ட நிலையில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்துள்ளார்.

அந்த வகையில் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியையும் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தலைவி மரிய சுரேஸ் ஈஸ்வரி மற்றும் சட்டத்தரணி க.கனேஸ்வரன் ஆகியோரிடம் குறித்த மனித புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.



# யாழ். HALO தொண்டு நிறுவன அலுவலகத்துக்கு கனேடிய பிரதி அமைச்சர் விஜயம்

சர்வதேச அபிவிருத்திக்கான கனேடிய பிரதி அமைச்சர் Christopher MacLennan, இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் Eric Walsh மற்றும் உயர்ஸ்தானிகராலய பணியாளர்கள் ஆகியோர் HALO தொண்டு நிறுவனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு அண்மையில் விஜயம் செய்து, அங்குள்ள நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

கனேடிய அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி உதவிகளுக்கான பட்ஜெட்டினூடாக வழங்கப்பட்ட நிதி உதவியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடிகள் அகற்றும் பணி தொடர்பாக கண்காணிக்கும் முகமாகவே அவர்களது இந்த விஜயம் அமைந்திருந்தது.





இதன்போது HALO தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளால் தயாரிக்கப்பட்ட கலைப் படைப்புகள் சிலவற்றை அவர்கள் பார்வையிட்டதுடன், பூவரசன்தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடிகள் அகற்றும் பணியையும் அவர்கள் பார்வையிட்டனர். பெப்ரவரி மாதத்தில் இந்த வேலைத் திட்டம் தொடங்கிய நிலையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதையும் அவர்கள் அவதானித்துள்ளனர்.

அத்துடன் கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பான இலங்கைக்கான HALO தொண்டு நிறுவனத்தின் கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவுக்குரிய முதல் பெண் தலைவியான எஸ்.சுதர்சினி மற்றும் கண்ணிவெடிகள் அகற்றும் குழுவினர், அருட்தந்தை, கடற்றொழிலாளர்கள் சிலரையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

# மன்னார் வைத்தியசாலைக்கு அபிவிருத்திக் குழு தெரிவு

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான அபிவிருத்தி குழு கடந்த பல வருடங்களாக செயற்படாதிருந்த நிலையில் தற்பொழுது புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இருக்கின்ற ஆளணிகளை கொண்டு அதிகாரிகள் தங்கள் கடமைகளை முன்னெடுத்து வருகின்ற போதும் இவ்வைத்தியசாலையில் பல தேவைகளும் ஆளணி பற்றாக்குறைகளும் காணப்படுவதாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தன. இந்த நிலையில் தற்பொழுது இந்த வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இதற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான கூட்டம் கடந்த செவ்வாய்கிழமை மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.முஹமட் ஹனிபாவின் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது இக்கூட்டத்தில் மன்னார் பொது வைத்தியசாலைக்கான புதிய அபிவிருத்திக் குழு தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச். முஹமட் ஹனிபா, செயலாளராக எஸ்.ஜேம்ஸ் ஜேசுதாசன் (முன்னாள் மன்னார் நகர சபை உப தவிசாளர் மற்றும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்), பொருளாளராக ஜனாப் என்.நூர்தீன் நூன் (வர்த்தகர்), உப தலைவராக றெஜினா இராமலிங்கம் (ஓய்வுநிலை முன்னாள் கல்வி உதவிப் பணிப்பாளர்), உப செயலாளராக ஜனாப் எம்.ஐ.ஏ.றசாக் (சமூகப் பணியாளர்) ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக எஸ். பத்திநாதன் (போதகர்), அழகிரி சூரியகுமார் (அதிபர்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்நிர்வாகத்தில் பதவி வழி உறுப்பினர்களாக மனோகரன் பிரதீப் (பிரதேச செயலாளர் மன்னார் நகரம்), ஓ.றெனால்ட் லெம்பேட் (செயலாளர், நகர சபை மன்னார்), சு.நிர்மலன் லெம்பேட் (தொழில்நுட்ப அலுவலர், கட்டிடங்கள் திணைக்களம் மன்னார்), புஸ்பகாந்தன் ஜோண் (விஓஜி மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார்), பி.அனஸ்லி றொகான் (கணக்காளர், மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார்) சீ.வை.குரூஸ் (தாதிய பரிபாலகர், மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# சர்வதேச சுற்று சூழல் தினம்; சிரமதானப்பணி முன்னெடுப்பு



**கோப்பாய் குறூப் நிருபர்**

சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த அவரது ஆரம்ப உரையோடு இப்பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த சிரமதான பணியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர்கள், பலாலி வீதி கோண்டாவில் சந்தி முதல் திருநெல்வேலி சந்தி வரையான பிரதேசத்தில் உக்காத கழிவுப்பொருட்களை அகற்றும் பணியினை மேற்கொண்டனர்.

குறித்த வேலைத்திட்டத்தில் நல்லூர் பிரதேச சபை கழிவகற்றல் வாகன வசதியினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண மோசடி செய்தவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

கனடாவில் தொழில் வாய்ப்பை பெற்று தருவதாக இளைஞர் ஒருவரிடம் 31 இலட்சம் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கனடாவில் தொழில் வாய்ப்பை பெற்று தருவதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞரிடம் இருந்து 31 இலட்சம் ரூபா பணத்தினை பெற்றுள்ளார் .

பணத்தினை பெற்றுக்கொண்டு நீண்ட நாட்களாகியும், கனடா அனுப்பவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாத நிலையில் பாதிக்கப்பட்ட இளைஞர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சாவகச்சேரி பகுதியை சேர்ந்த இச்சந்தேக நபரை கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள்.

**I. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவென கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத் தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர். இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக்காட்சி மனதிற்கு இனிமையானது; மகிழ்ச்சிகரமானது.

01. அடுக்குமொழி ஒன்று எழுதுக. ..........................................................

02. இரட்டைமொழி ஒன்று எழுதுக. ..........................................................

03. உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ................................

04. மனதிற்கு இனிமையளிப்பது எது? ......................................................

05. நிகழ்காலப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. .................................

06. செயற்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ...........................

07. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

i. மழைக் காலங்களில் ................ இருண்டு காணப்படும். (வாணம் / வானம்)

ii. மல்லிகைப் பூவிலிருந்து ......................... வீசியது (மனம் / மணம்)

iii. கிளிகள் மரங்களிலுள்ள ............... களை விரும்பி உண்ணும். (கணி / கனி)

08. பின்வரும் சொற்களை சரியான வடிவத்தில் எழுதுக.

i. அருவாள் - ............................. ii. ஆத்தங்கரை - .........................

iii. ஒண்டு - ............................... iv. சிலவு - ...................................

09. பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

i. கற்ற இளைஞன் விவசாயம் செய்ய முன்வரவேண்டும்.

..........................................................................................

ii. மீன் நீரில் வாழும் - ...............................................................

iii. குரங்கு மரத்திற்கு மரம் தாவித் திரிந்தது.

..........................................................................................

iv. மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது. - ........................................

**II. பின்வரும் சொற்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமையுங்கள்.**

10. வீட்டுக்கு / சந்தையில் / நானும் அப்பாவும் / இருந்து / சேர்ந்தோம் / வந்து

..........................................................................................

11. சேர்ந்தால் / பகுத்தறிவு / நல்லவர்களோடு / நாய்க்கும் / ஏற்பட்டுவிடும்

..........................................................................................

12. கவலைப்பட்டாள் / எண்ணிக் / அவள் / தனது / புத்தியை / அவசர

..........................................................................................

பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக எழுதுக.

13. மயில் அழகாக நடனம் ஆடியது - ................................................

14. அவன் சிறந்த விளையாட்டு வீரன் - ..............................................

15. யானை மரத்தை முறித்தது. - ......................................................

16. சேர்த்தெழுதுக.

i. மா + காய் - ............................ii. ஆறு + கரை - ..........................

iii. அகம் + மகிழ்ந்து - .................... iv. வெம்மை + நீர் - ......................

17. தரப்பட்டுள்ள எழுத்திற்குப் பொருத்தமான இயல்பொலிச் சொல்லைத் தெரிந்து கோடிடுக.

i. க – கம்பி / காகம் / தங்கம்    ii. ச – மஞ்சள் / சட்டி / பஞ்சம்

iii. த – அந்தம் / பதம் / தம்பி

18. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக எழுதுக.

i. விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.
வீரன் மைதானத்தில் விளையாடினான்.

..........................................................................................

ii. பூனை பாலைக் குடித்தது.
பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது.

..........................................................................................

19. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

i. Monkey - ............................ ii. Ship - ..................................

**III.**

20. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

i.





i. .................................    ii. ..................................

ii. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

i. is / father / my / This - ..................................................

ii. book / I / a / am / reading - ...........................................

21. 

| | | |
|---|---|---|
| 648 | 652 | 328 |

அடைப்பிலுள்ள எண்களில் 6 ஆல் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது?

..........................................................................................

22. பின்வருவனவற்றைக் கழித்து வரும் விடையை உரோமன் எண்ணில் எழுதுக.

i. 259 – 247 = .......................    ii. 746 – 730 = .......................

23. 

நிறந்தீட்டப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக.

..........................................................................................

24. கீழ் தரப்பட்டுள்ள தகவலைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.







i. நாய்க்கு பாம்பு எத்திசையில் உள்ளது?

..........................................................

ii. பாம்புக்குப் பூனை எத்திசையில் உள்ளது?

..........................................................

25. 


A, B ஆகிய இரண்டு பாத்திரங்களில் உள்ள திரவத்தை பாத்திரம் C இனுள் ஊற்றினால், பாத்திரம் C ஐ நிரப்ப இன்னும் மேலதிகமாகத் தேவைப்படும் திரவத்தின் அளவு யாது?

..........................................................

26. பாடசாலை ஒன்றில் சமய நிகழ்வொன்று மு.ப. 10.50க்கு ஆரம்பித்து பி.ப. 3.15க்கு முடிவடைந்தது.

i. சமய நிகழ்வு எவ்வளவு நேரம் நடைபெற்றது? ....................................

ii. நிகழ்வு ஆரம்பித்த நேரம், முடிந்த நேரத்தை நியம நேரமாகத் தருக.

ஆரம்பித்த நேரம் - ..................    முடிந்த நேரம் - ..................

27. 

09.30 மணியை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.

28. 

இவ்வுருவில் காணக் கிடைக்கும் செவ்வக வடிவங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................

29. பாடசாலையொன்றில் 5A, 5B, 5C ஆகிய மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|
| 5 A | 17 | 12 |
| 5 B | 16 | 22 |
| 5 C | 18 | 17 |

i. 5B வகுப்பில் இருக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................

ii. பெண் மாணவர்களை விட 5 ஆண் மாணவர்கள் அதிகமாக இருப்பது எவ் வகுப்பிலாகும்?

..........................................................

iii. மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் மொத்த பெண் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

iv. மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. விரைவாக வாடும் பூ
i. கடதாசிப் பூ    ii. பவள மல்லிகை    iii. அந்தூரியம்

31. கிளைகளின் ஓரங்களில் மட்டும் காய்க்கும் தாவரம்
i. விளிம்பிக்காய்    ii. காமரங்காய்    iii. பலா

32. பழ வகைகளை பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறந்த முறை
i. புகையூட்டல்    ii. முற்றிப் பழுக்கவிடல்    iii. மருந்தடித்தல்

33. பாரம்பரிய முறையில் கிருமிநாசினியைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வித்து
i. வேப்பம் வித்து    ii. பூசணி வித்து    iii. ஆமணக்கு வித்து

34. தாவரமொன்றின் வேரையும் தண்டினையும் சேதப்படுத்தும் பிராணி
i. பன்றி    ii. மண்புழு    iii. கறையான்

35. சர்வதேச தரச்சான்றிதழைக் குறிப்பது
i. CFL    ii. ISO    iii. EXP

36. இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் இரட்டை இதழ்கொண்ட பூ
i. அலரிப் பூ    ii. ஓகிட் பூ    iii. பொப்பி மலர்

37. 

படத்தில் காட்டப்பட்டுள்ள தச்சு உபகரணம்
i. கல் சுத்தியல்
ii. சுவர்ச் சுத்தியல்
iii. குறடு

38. தேசிய இலட்சினையில் சூரிய சந்திரனுக்கு இடையில் இருப்பது
i. நிறைக்கலசம்    ii. தர்ம சக்கரம்    iii. பலாப்பெத்தி

39. பின்வருவனவற்றுள் தனிப்பட்ட பாவனைக்குள் அடங்காதது
i. சீப்பு    ii. கைக்குட்டை    iii. நாற்காலி

40. வேப்பம் பூ பூக்கும் மாதம் எது?
i. ஆடி    ii. ஐப்பசி    iii. சித்திரை

41. பிராணிகளால் தாவரங்களுக் கிடைக்கும் நன்மையாக அமைவது எது?
i. நிழல் கிடைத்தல்    ii. வித்துக்களைப் பரப்ப உதவுதல்
iii. பாதுகாப்பு கிடைத்தல்

42. மணலினுள் புதைப்பதன் மூலம் பேணிப் பாதுகாக்கப்படும் உணவு
i. அப்பிள்    ii. பாகற்காய்    iii. எலுமிச்சம் பழம்

43. தலைக்கவசம், கையுறை, காற்காப்பு என்பன அணிந்து விளையாடும் விளையாட்டு எது?
i. காற்பந்தாட்டம்    ii. கரப்பந்தாட்டம்    iii. கிரிக்கெற்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

44. நீராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவு அல்லாதது
i. பிட்டு ii. தோசை iii. இடியப்பம்

45. அசுத்தமான உணவு, நீர் உட்கொள்வதால் பரவும் நோய்கள்
i. கொலரா, சீதபேதி ii. வாந்திபேதி, சின்னமுத்து
iii. கழிச்சல், கொப்பளிப்பான்

46. பேருந்தில் ஆசனம் ஒதுக்கப்படாதோர்
i. அங்கவீனர்கள் ii. சிறுவர்கள் iii. கர்ப்பிணித் தாய்மார்கள்

47. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும் போது நிகழாதது எது?
i. ஒலி எழும் ii. நீர் ஆவியாகும் iii. நீர் குளிர்ச்சியடையும்

48. இலங்கையில் உள்ள பின்வரும் மாகாணங்களில் கரையோர மாகாணம் எது?
i. மத்திய மாகாணம் ii. ஊவா மாகாணம் iii. கிழக்கு மாகாணம்

49. இலங்கையிலே ‘தாமரைக் கோபுரம்’ அமைந்துள்ள நகரம்
i. கொழும்பு ii. அம்பாந்தோட்டை iii. கண்டி

50. கிரிக்கெட் விளையாட்டில் ஓரணியில் எத்தனை பேர் பங்குபற்றுவார்கள்
i. 6 பேர் ii. 5 பேர் iii. 11 பேர்

51. உருவில் காட்டியவாறு எரியும் மெழுகுவர்த்தி ஒன்றினை கண்ணாடிக் குவளையால் மூடியபோது நிகழக்கூடியது
i. மெழுகுவர்த்தி சிறிது நேரத்தில் அணையும்.
ii. மெழுகுதிரி பிரகாசமாக எரியும்.
iii. கண்ணாடிக் குவளை உடையும்.



52. பின்வருவனவற்றுள் எந்தக் கருவி பாக்கை வெட்டப் பயன்படும்

i.  ii.  iii. 

53. மின்னல் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு செய்யக்கூடாதது
i. உயரமான மரத்தின் கீழ் நிற்றல் ii. வீட்டிற்குள் இருத்தல்
iii. காரில் செல்லுதல்

54. 
உருவில் உள்ள நிழலினால் குறிக்கப்படும் பறவை
i. கானாங்கோழி
ii. கொக்கு
iii. மரங்கொத்தி

55. உருவில் மஞ்சள் நிறப் பின்னணியில் கருமை நிறத்தில் உள்ள வீதிக் குறியால் குறிப்பிடப்படுவது



i. வலமிருந்து வரும் வாகனம் முன்னால் இணைகிறது.
ii. இடமிருந்து வரும் வாகனம் முன்னால் இணைகிறது
iii. வீதி முன்னால் ஒடுங்குகிறது.

56. ஒலிம்பிக் கொடியில் உள்ள வர்ண வளையங்களில் ஆசியாவைக் குறிக்கும் வர்ணம்
i. நீலம் ii. சிவப்பு iii. மஞ்சள்

57. இலங்கை தேசப்படத்தில் மலைகள் எந்த நிறத்தினால் குறிக்கப்பட்டிருக்கும்
i. கறுப்பு ii. கபிலம் iii. பச்சை

58. நுளம்பால் ஏற்படக் கூடிய நோய் அல்லாதது
i. சிக்கன் குனியா ii. நெருப்புக் காய்ச்சல் iii. மலேரியா

59. மயங்கி விழுந்த ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி அல்லாதது
i. துப்புரவான காற்றோட்டம் கிடைக்குமாறு செய்தல்
ii. இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தல்
iii. குளிர்பானம் அருந்தக் கொடுத்தல்

60. கீழே கொடுக்கப்பட்ட படக் காட்சியை நன்கு அவதானித்து அதற்குப் பொருத்தமான மூன்று வாக்கியங்களை எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமையுமாறு எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 05 சொற்கள் குறையாமல் இருத்தல் வேண்டும்.



..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## கடந்த வார (31.05.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 2 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 2 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 1 | 40. | 2 |




'தூரிகை வரையும் மின்மினிகள்'

# தேன் பாணியில் குழைத்த கற்கண்டுக் கவிதைகள்

ஒரு கவிதை எனப்படுகின்ற போது அது எவ்வகைமையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதற்கு கருவும் உருவும் இருப்பது மிகவும் அவசியமாகும். அதன்பின்னர்தான் அதற்குரிய அணிகலன்களான எதுகை மோனை உவமான உவமேயங்கள் சந்தம் என்பன தேவைப்பாடு உடையதாகிறது. ஆனால் மேற்சொன்ன அணிகலன்கள் ஹைக்கூக்களுக்குப் பொருந்தாது.

கருவறையில் கருவாகி, உருவாகி, உருவமாகி, முழுமையாகி பிறந்தால்தான் குழந்தை, இல்லையேல் பிண்டமே. உள்ளத்தில் கருவாகி, உருவாகி உட்பொருட்களோடு முழுமை அடைந்து பிறப்பெடுப்பதே கவிக் குழந்தை. இவற்றை செவ்வனே நிறைவு செய்து 786 ஹைக்கூ கவிதைக் குழந்தைகளை தூரிகை வரையும் மின்மினிகளின் அன்னை டாக்டர் ஜலீலா முஸம்மில் பிரசவித்திருக்கின்றார்.

பொதுவாக ஹைக்கூக்கள் என வருகின்ற போது இதன் முன்னோடிகளான ஜப்பானிக் கவிஞர்கள் மொரிடாகே, சோகன், மட்சுவோ பாஷோ ஆகியோர்களைத் தொட்டுச் செல்லாமல் எந்தவொரு இறந்த கால, நிகழ்கால கவிஞர்களும் செல்வதில்லை.

இவ்வாறு தான் தமிழில் ஹைக்கூவை அறிமுகப்படுத்திய எட்டயபுரத்து கவி வேந்தர் பாரதியார் மற்றும் தமிழில் முதன் முதலாக ஹைக்கூ கவிதைகளை வரைந்த கவிக்கோ அப்துல் ரகுமான் ஆகியோரை விழித்தவர்களாக தமிழ்நாட்டினதும் இலங்கையினதும் பல கவிஞர்களும் நூல்களையும் ஹைக்கூப் பாக்கள், நூல் விமர்சனங்களையும் ஹைக்கூ பயிற்சிக் களங்களையும் செய்தும் செயல்படுத்தியும் வருகின்றனர்.

1988ஆம் ஆண்டு முதல் இலங்கையர்கள் நாம் ஹைக்கூ கவிதைத் தொகுப்புகளை வெளியிட்ட போதும் நான்கு பெண் கவிஞர்களைத்தான் தொகுப்பு நூலை வெளியிட்டோராக அடையாளப்படுத்தலாம். அதில் மூவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் நான் பெருமை அடையும் அதேவேளை 786 ஹைக்கூக்களை தொகுத்தளித்த ஹைக்கூ விற்பன்னராக டாக்டர் ஜலீலா முஸம்மில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பது தமிழ் இலக்கிய உலகம் பெற்றுக்கொண்ட பேறாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.



உண்மையிலேயே கவிஞரைப் பார்த்து நான் பிரமித்து வி(ந)யந்த பல விடயங்கள் உள்ளன. சிறந்த மனைவியாக, தாயாக, பிள்ளை பராமரிப்பாளராக, மனிதாபிமான வைத்தியராக எனப் பல்வேறு பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு தினமும் முகநூலில் அழகிய கவிதைகளையும் மகத்துவமிக்க கருத்துக்களையும் பதிவேற்றுவது மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மின்னிதழ்கள் என சுமார் 40 க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்குத் தனது ஆக்கங்களை வழங்குவது இன்னும் 'சிறகு முளைத்த மீன்' என்ற புதுக்கவிதைத் தொகுதியை வெளியிட்டதுடன் நின்று விடாமல் தற்போது 'தூரிகை வரையும் மின்மினிகள்' எனும் 786 கவிதை ஹைக்கூ நூலை வெளியிட்டு பாரிய இலக்கியப் பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பதை புகழத்தான் வேண்டும்.

'தூரிகை வரையும் மின்மினிகள்' என்ற இந்த ஹைக்கூத் தொகுதி என்னிடம் தரப்பட்ட போது ஹைக்கூக்களின் செழுமையைக் கண்டு கொண்டதால் வாசிக்கும் ஆவல் ஆட்கொண்டு அனைத்து ஹைக்கூக்களையும் மூலைத் தாள்களை மடித்து மூடாமல் முழுவதும் வாசித்து முடித்தேன். படிக்கப் படிக்கக் கடிக்கக் கடிக்க சுவைக்கும் பலாச் சுளையாக ஹைக்கூக்கள் இனித்தன. தேன் பாணியில் குழைத்து எடுத்த கற்கண்டுத் துண்டங்களாக ஒவ்வொரு ஹைக்கூக்களும் இனித்தன. பெரும்பாலானவற்றில் ஹைக்கூவின் விதிகள், பண்புகள் கண்டு வியந்தேன். இது மிகை இல்லை. அனைத்து ஹைக்கூக்களையும் நயந்தேன், வியந்தேன். ஹைக்கூக்களில் கரைந்தேன், கவிழ்ந்தேன், கற்றுணர்ந்தேன். நயந்துரை தர விளைந்தேன். அவற்றுள் சிலவற்றை இரசித்துச் சுவைப்போம்.

**தொடரும் மழை**
**சிந்திக் கொண்டிருக்கும்**
**ஏழைகளின் கண்ணீர் (பக்கம் 39)**

கவிஞரின் மையக்கரு இங்கே வறுமை. வறுமையில் வாழ்வோர் வாழுமிடம் குடிசை. அங்கே ஓட்டைகளும் ஒடிசல்களும் வழமைதானே. அங்கே மழைத் துளிகளும் சிந்திக் கொண்டிருக்கும். தினக் கூலிகளும் தொடரும் மழை காரணமாக தொழிலுக்கு செல்ல முடியாத நிலை. அன்றாடங்காய்ச்சிகளான இவர்களின் மழைத் துளிகளாலும் அடுப்பெரிக்க முடிவதில்லை தொழிலின்மையாலும் அடுப்பெரிவதில்லை. ஆதலால் அவர்களின் உணவிற்கு வழி இல்லை. அதையே தான் கவிஞர் தொடரும் மழையால் ஏழைகளின் கண்ணீர்தானே சிந்திக் கொண்டிருக்கும் என்று குறிப்பிடுகிறார்.

**பள்ளிச் சீருடை**
**புதிதாகத் தைக்கிறாள் அம்மா**
**தீபாவளி பண்டிகைக்காக**
**(பக்கம் 48)**

இந்த ஹைக்கூவில் ஏழ்மை எடுத்துக் காட்டப்படுகிறது. பண்டிகையைக் கொண்டாட வழியில்லை. பள்ளியில் வழங்கப்பட்ட இலவச சீருடையை வைத்திருந்து, தீபாவளிப் பண்டிகைக்காக அம்மா தைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வறுமையை நமக்கு எடுத்துச் சொல்வதாக இருக்கிறது. அந்தத் தாய் வறுமையை நிர்வாகம் பண்ணும் அழகும் பண்டிகையைக் கொண்டாடும் விதமும் நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரி நமக்கு ஒரு வேதனையைத் தந்து செல்வதைக் காணலாம்.

தூரிகை வரையும் மின்மினிகளை எமக்குத் தந்த கவிதாயினி ஹைக்கூ கவிதைகளில் விதிமுறைகளையும் வரம்புகளையும் மீறாமல் மின்மினிகளின் காட்டில் அழகாகப் பயணம் செய்திருக்கிறார்.

**இழுத்தும் வராமல்**
**படுத்துக் கிடக்கிறது**
**நதியோர நாணல் (பக்கம் 50)**

நாணல் ஒரு புல்லினம், சாதாரணமான ஒரு பிள்ளை தன் கைகளால் பிடித்து இழுத்தால் அது கையோடு வந்து விடும். ஆனால் நாணலுக்கு ஒரு சிறப்பியல்பு உண்டு எவ்வளவுதான் நீரோட்டமாக இருந்தாலும் எவ்வளவு அது வேகமாகச் சென்றாலும் அது நதியோடு அப்படியே படிந்து கிடக்கும். உடையாது வளைந்து கொடுக்கும். நதி நீர் வற்றியதும் நிமிர்ந்து நிற்கும். அப்படியான ஒரு பண்பு இந்த நாணலுக்கு உண்டு. இந்த ஹைக்கூ மூலம் நம் மூத்தோர் சொன்ன ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைக் கருத்துத் தெளிவோடு எடுத்துச் சொல்கிறார் கவிஞர்.

வாழ்க்கையில் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு விடயம் அதாவது எல்லோருடனும் ஒத்து வாழ வேண்டும், சகிப்புத் தன்மையோடு வாழ வேண்டும் என்பதை நமக்குச் சொல்கிறது. மூன்றாவது வரியை வாசிக்கும் வரைக்கும் கவிதையின் வரிகள் சாதாரணமாக ஒரு ஆட்டையோ மாட்டையோ இழுத்தும் வராமல் படுத்துக் கிடக்கிறது என்று வாசகர்கள் யோசிக்கலாம். ஆனால் ஈற்றடியிலேயே அந்த தத்துவத்தின் முழுமையான கருத்தை அறிவிக்கிறார்.

**பள்ளிச் சிறுமி**
**அடுக்கிக் கொண்டிருக்கிறாள்**
**ஆலையில் தீப்பெட்டிகள் (பக்கம் 55)**

மூன்றாவது வரியை விடுத்து கவிதையை நாம் பார்ப்போமாயின் என்ன யோசிப்போம், ஒரு பாடசாலை சிறுமி புத்தகங்களையோ, வண்ணப் பென்சில்களையோ, எழுதிய காகிதங்களையோ அடுக்குவதாகத்தான் நம் பார்வை இருக்கும். ஆனால் கடைசி வரியில் எங்களைக் கடும் வேதனைக்கு உள்ளாக்கிச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

குழந்தைத் தொழிலாளர்களை உருவாக்க வேண்டாம் என்னும் கருத்தை அவர் இதன் மூலம் நமக்கு சொல்ல வருகிறார் என்பது கண் கூடு.பல கவிதைகளில் மானிட வாழ்வுக்கான பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹைக்கூ நுட்பங்கள் வரிகளுக்குள் நுழைக்கப்பட்டுள்ளன. ஹைக்கூக்கள் தமிழ் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியாக, உயர்ச்சியாக இலக்கிய உலகால் ஓம்பப்படும் என்று நம்புகிறேன். கவிஞரின் ஆளுமை, ஆற்றல், திறமை, கடின உழைப்பின் மூலம் வெளியிடப்பட்ட 'தூரிகை வரையும் மின்மினிகள்' மூலம் ஏறாவூர் பிரதேசத்தை இமயமாய் உயர்த்தி நிற்கிறது என்பது எனது எண்ணம்.

*கவிமணி எஸ்.ஏ. றஸாக் (கனல் கவி)*
*ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி*
*ஏறாவூர்.*

# வீட்டுவேலை செய்வது எப்படி? ஆண்களுக்கு கற்றுத்தரும் பாடசாலை



பொதுவாக, பாடசாலைகளில் கணிதம், அறிவியல், வரலாறு ஆகிய பாடங்கள் கற்றுத்தரப்படும். அங்கு குழந்தைகள் சென்று கற்பார்கள்.

ஆனால் தென்னமெரிக்காவில் உள்ள கொலம்பியாவில், வளர்ந்து பெரிதான ஆண்களுக்கென ஒரு பாடசாலை நடத்தப்படுகிறது.

அதுவும் புதிதல்ல தான். ஆனால் அங்கு கற்றுத்தரப்படும் பாடம்தான் ஆச்சரியமானது.

அப்படியென்ன பாடங்கள்?

'நல்ல கணவராக இருப்பது எப்படி?'

'நல்ல தந்தையாக இருப்பது எப்படி?' கொலம்பியாவில் பாலின சமத்துவமின்மை மிகத்தீவிரமாக இருக்கிறது.

பெண்கள் மீது வீட்டு வேலைக்கான பணிச்சுமை பெருமளவில் சுமத்தப்படுகிறது.

இந்த நிலையை மாற்றுவதற்காக, அந்நாட்டின் தலைநகர் பொகொதாவின் மேயர் இந்தப் பள்ளியைத் துவங்கினார்.

இப்பள்ளியில், மனைவியருடன் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது, குழந்தைகளைப் பராமரிப்பது ஆகியவை ஆண்களுக்குக் கற்றுத்தரப்படுகின்றன.

# நகர்வலம்






சீரற்ற காலநிலை

## வடமேல் மாகாணத்தில் பல வீடுகள் சேதம்

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக வடமேல் மாகாணத்தில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் பன்னல பிரதேச செயலகப் பிரிவில் அண்மையில் பெய்த கடுமையான புயல் காற்றுடன் கூடிய மழை காரணமாக 35 வீடுகள், இரண்டு அரச பாடசாலை கட்டடங்களுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பன்னல பிரதேச செயலாளர் சட்டத்தரணி சமந்த விக்கிரமரத்ன பண்டார தெரிவித்தார்.

வீடுகள் மற்றும் அரச பாடசாலைகளின் மீது மரங்கள் முறிந்து விழுந்துள்ளமையால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பன்னல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தாரளுவ, தௌமுகம்மன, மாஹரகம, மும்மானய மற்றும் சந்தலங்காவ ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள வீடுகள் மற்றும் அரச பாடசாலைகளின் கட்டடங்கள் மீதும் இவ்வாறு பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

குறித்த கிராமசேவகர் பிரிவுகளில் மழையுடன் கூடிய கடும் காற்று காரணமாக இவை சேதமடைந்துள்ளன.

கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் விபரங்களை உடனடியாக பன்னல பிரதேச செயலக அலுவலகத்துக்கு சமர்ப்பிக்குமாறு பன்னல பிரதேச செயலாளர் சட்டத்தரணி சமந்த விக்கிரமரத்ன பண்டார பணிப்புரை வழங்கியுள்ளார்.

பன்னல பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மேற்படி தகவல்களை பரிசீலனை செய்து பாதிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீல. ஐ. மு. கட்சி வடமேல் மாகாண ஆளுநருடன் பேச்சு

வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் அஹமத் நசீருக்கு ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) மற்றும் ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் பிரதித் தலைவரும் RinTv தொலைக்காட்சியின் அமைப்பாளரும் பணிப்பாளருமாகிய Deshmani, மற்றும் vishva Kirti, Lanka putra, GGI ஜபீன் முஹம்மத் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் குருநாகல் மாவட்டத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் புதிய ஆசிரியர் நியமனம்



தொடர்பாகவும் ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன் குருநாகல் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன .

இதுதொடர்பில் விரைவில் தகுந்த தீர்வை பெற்றுத் தருவதாக ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் இன மத பேதமின்றி அனைவருடனும் சகோதரத்துவமாக பேசிப் பழகி அவர்களின் தேவைகளை சிறந்த முறையில் செயற்படுத்துகின்ற ஆளுநர் ஹாபீஸ் அஹமட் நசீருக்கு ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## பேருவளை சீனன்கோட்டை கிரவுன் ஆங்கிலப்பாடசாலை கைப்பணி கண்காட்சி

(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன் கோட்டை கிரவுன் ஆங்கிலப்பாடசாலை மற்றும் கிரவுன் குர்ஆன் மதரஸா மாணவர்களின் கைப்பணி கண்காட்சி பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் ஹிசாம் கரீம் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை - சீனா நட்புறவு கலாசார சங்கத்தின் தேசிய அமைப்பாளர் (பெண்கள் பிரிவு) அரோசா பக்தி சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேற்படி சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் எம்.இபாம் ஹனபி, சமூக சேவையாளர் இஸ்மத் ராஸிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்குபற்றினர்.



கிரவுன் ஆங்கிலப் பாடசாலை மற்றும் குர்ஆன் மத்ரஸாவில் கல்வி பயிலும் சுமார் 300 சிறார்கள் அன்றாட கல்வி பொருட்களை கொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டி கைப்பணிக் கண்காட்சியை அழகுப்படுத்தியிருந்தனர்.

வீடுகளில் அன்றாடம் அகற்றப்படும் பிளாஸ்டிக், காட்போட், பொலித்தீன், இரும்பு உட்பட பல கழிவுப் பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளமை விசேட அம்சமாகும்.

அதிதிகள் ஒவ்வொரு கண்காட்சி கூட்டத்திற்கு சென்று பார்வையிட்டதோடு சிறார்களின் ஆற்றல்களையும் பாராட்டினர். சிறார்களிடம் பல்வேறு திறமைகள் உண்டு. அவர்களை ஊக்கப்படுத்தி பாராட்டுவதன் மூலம் மேலும் அவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டுவார் என பிரதம அதிதி குறிப்பிட்டார்.

இலங்கை - சீனா நட்புறவு கலாசார சங்கத்தின் மூலம் இந்த சிறார்களின் திறமைகளை வெளிக்காட்ட வேண்டி முடியுமான உதவி ஒத்தாசைகளை எதிர்காலத்தில் பெற்றுத் தர முயற்சி செய்வதாக சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் இபாம் ஹனபி தெரிவித்தார்.

கலாவெவ

## முஸ்லிம் ம. ம. வித்தியாலயத்தில் நால்வர் மருத்துவபீடத்துக்கு தகுதி

( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி கெக்கிராவ கல்வி வலயத்தில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் ஜே.ஆப்தீன் தெரிவித்தார்.

இவர்களில் எம்.ஆர்.எம். ருஷ்தி 3 ஏ,எச்.கே.எம்.சம்ரி 3 ஏ என்ற சிறப்பான பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

அத்தோடு 2 ஏ, 1பி சித்தியை ஏ.ஏ.ஹயறுன்நிஸா பெற்றுள்ளார்.

2 ஏ, 1 சீ சித்தியை எம்.எஸ். சம்னா பானு பெற்றுள்ளனர். இந்த நான்கு மாணவர்களும் மருத்துவ பீடத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்தோடு பௌதீக விஞ்ஞானப் பிரிவில் எம்.பீ.ஹதீல் 1 ஏ,2 பி சித்தியை பெற்று பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 26 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் ஆகிய பிரிவுகளில் சிறந்த பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

## முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(உடப்பு குறூப் நிருபர்)

முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வெளிக்கொடியேற்றம் நேற்று நடைபெற்றது.

இதன்போது பக்தர்களினால் கொடிக் கம்பத்திற்கு மஞ்சள் தேய்த்தல் நடைபெற்ற பின்னர் 'அரோஹரா' கோஷத்துடன் கொடித்தம்பம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் 18 நாட்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் தீ மிதிப்பாகிய பூ மிதிப்பு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும்.

## கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி மாணவர்கள் 100 சதவீத சித்தி

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியிலிருந்து இம்முறை பரீட்சைக்காக தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தி பெற்று தமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக கல்லூரி பதில் அதிபரும், முன்னாள் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ஏ.சி. எம்.சுபைர் தெரிவித்தார். நாட்டின் நாலா பாகங்களிலும் இருந்து வருகை தரும் மாணவர்கள் இக்கல்லூரியில் வதிவிட முழு நேரமாக மார்க்கக் கல்வியை பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கு பகுதி நேரமாக பாடசாலைக் கல்வியும் போதிக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக, கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களும் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்று 100 சதவீத அடைவை பெற்றுள்ளனர். இதன்மூலம் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இப்பரீட்சையில் எம்.என்.சனீஜ் அஹமட், எம்.ஹிஜாஸ் அஹமட், எம்.எப்.அப்றி அஹமட், எஸ்.எம். சர்பான் ஆகியோர் 2 ஏ,பி சித்திகளையும், கே.எம்.ஹம்தி அஹமட் ஏ.பி.சி சித்தியையும், ஆர்.எம்.பாசில் 2 ஏ,எஸ் சித்தியையும், எம்.பி.அப்துல் பாசித் ஏ,2பி சித்தியையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, கே.எம்.ஹம்தான் அஹமட் மற்றும் ஜே.சபான் அஹமட் ஆகியோர் ஏ,2சீ சித்திகளையும், ஏ.ஏ. அப்துல்லாஹ், எம்.எம்.முசாஹிர் ஆகியோர் ஏ,பி.எஸ் சித்திகளையும், ஆர்.ஹுஸ்னி அஹமட் ஏ.சி.எஸ் சித்தியினையும், எம்.ஆர்.எம்.அர்ஷத் மற்றும் எம்.ஆர்.எம்.றிசாத் ஆகியோர் பி.சி.எஸ். சித்தியினையும், ஐ.எச். எம்.அசீம் 2சீ.எஸ்.சித்தியினையும் பெற்றுள்ளனர்.

## மதுபான சாலைகளுக்கு பூட்டு

( திறப்பனை தினகரன் ,அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள் )

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மதுபான சாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் சுமார் ஏழு நாட்களுக்கு இவைகள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பொசன் பண்டிகையை முன்னிட்டு அநுராதபுரத்தில் மிஹிந்தலை உட்பட பல பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் குறிப்பிட்ட காலப்பகுதியில் மூடப்பட்டிருக்கும் என இலங்கை காலால் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை ஜூன் 18 தொடக்கம் 24 வரை பொசன் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு, அநுராதபுரம் மிஹிந்தலை, தந்திரிமலை ஆகிய பிரதேசங்களை கேந்திரமாகக் கொண்டு பொசன் உற்சவத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## ராபிததுந் நளீமிய்யீனுன் 10ஆவது வருடாந்த ஒன்றுகூடல்

ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் பழைய மாணவர் அமைப்பான ராபிததுந் நளீமிய்யீனுன் 10 வது வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 30 ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை நளீமிய்யா கலாபீட கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது.

அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரி.எம் லாபிர் மதனி தலைமையில் நடைபெறும் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக ஜாமிஆ நளீமிய்யாவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் வங்காளதேசத்தைச் சேர்ந்த மௌலானா ஷஹீதுல்லாஹ் கவ்ஸர் கலந்து கொள்ள உள்ளார்.

அத்தோடு நிகழ்வின் கௌரவ அதிதியாக ஜாமிஆ நளீமிய்யா பரிபாலன சபைத் தலைவர் யாகூத் நளீம், விஷேட அதிதியாக ஜாமிஆ நளீமிய்யாவின் முதல்வர் உஸ்தாத் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர்.

இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்நிகழ்வு காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

RABITHA AN-NALEEMIYYEEN Estd. 1997

முதல் அமர்வான அங்குரார்ப்பன நிகழ்வின் போது மௌலானா ஷஹீதுல்லாஹ் கவ்ஸருக்கான கௌரவிப்பு நிகழ்வும் ராபிதாவின் செய்தி மடல் வெளியீடும் இடம்பெறும்.

இரண்டாவது அமர்வில் பழைய மாணவர் சந்திப்பும் வருடாந்த அறிக்கைகள் உள்ளிட்ட அடுத்த வருடத்திற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும். இந்த முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த ஒன்று கூடலில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றும் நளீமியாவின் பழைய மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



ஜனாதிபதி சாரணர் தலைவர்களாக வெற்றி பெற்ற சாரணர் சிறுவர் சிறுமிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் காலி நகர மண்டபத்தில் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்றது. 225 சாரணர் சிறுவர், சிறுமியர் சான்றிதழ் பெற்றுக்கொண்டனர். இலங்கை சாரணர் சங்கத்தின் தலைவர் பிரிகேடியர் ஜே.பி. ஏ.ஜயவர்த்தன, பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனாபிரித் பெர்னாண்டோ, பதில் தலைமை ஆணையாளர் எம்.எப்.எஸ்.முஹீட், தொழில்நுட்ப பயிற்சி ஆணையாளர் கேணல் பத்மலால் பெரேரா, உதவி தலைமை ஆணையாளர் டொக்டர் மஞ்சுள சகபந்து, இலங்கை சாரணர் சங்கத்தின் பொருளாளர் தினேஷ் மானவவடு, உபுல் கலன்சூரிய, இலங்கை சாரணர் சங்கத்தின் உதவி பிரதான ஆணையாளர்கள், சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

## வெலிகம அறபா மத்திய கல்லூரி 33 பேர் பல்கலைக்கு தகுதி

(வெலிகம தினகரன் நிருபர்)

க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேற்றின் படி வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் எம். டி.எம்.முதஹ்ஹர் தெரிவித்தார். கலைப் பிரிவில் தோற்றிய மாணவர்களுக்குள் 17 பேர் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஸாரா ஸைனப் 2ஏ 1பீ மற்றும் எம்.எஸ்.எப். அஸ்மா 2ஏ 1பீ என்ற அடிப்படையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

மேலும் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 7 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 9 மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுள் எம்.எப். எம். பைதான் 3ஏ , எப்.ஆர், ஹாஷிம் 2ஏ 1பீ என்ற பெறுபேற்றை பெற்றுள்ளனர்.



ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் ரூ.667 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பலுகஸ்வெவ புதிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அண்மையில் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

( படம் ;கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

## பஸ்ஸில் நட்பாக பழகி திருட்டு

வாத்துவ, மெலேகம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வசித்து வந்த கணவன் மனைவியின் தங்க நகைகளை பெண்ணொருவர் திருடிச் சென்றுள்ளார். பஸ்ஸில் தற்செயலாக சந்தித்த ஒரு பெண்ணே இவ்வாறு திருட்டில் ஈடுபட்டுள்ளதாக தம்பதியினர் தெரிவித்தனர்.

கதிர்காமம் கொழும்பு பஸ்ஸில் அண்மையில் தம்பதியினர் அந்த பெண்ணை தற்செயலாக சந்தித்து நட்பாக பழகியுள்ளனர்.

பின்னர் நட்பாக பழகிய பெண், வாத்துவ, மெலேகமவிலுள்ள அந்த தம்பதியின் வீட்டிற்கு சென்று, மகனுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறியுள்ளார்.

வீட்டிற்கு வந்த பெண் , சாப்பிடுவதற்காக ஏதேனும் தருமாறு கோரியுள்ளார்.

இதனையடுத்தே இத்திருட்டு சம்பவம் நடைபெற்றுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில், தம்பதியினர் தெரிவிக்கையில்.

திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராக தர்மலிங்கம் பிரபாசங்கர் நியமனம்

(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகராக காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டொக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று (6) வியாழக்கிழமை தமது கடமையை பொறுப்பேற்றுள்ளார். பதில் வைத்திய அத்தியட்சகராகவிருந்த மகப்பேறு வைத்திய நிபுணர் டொக்டர் ரொகானிடமிருந்து



ஆவணங்களை பெற்றுக் கொண்டார். வைத்தியசாலை அபிவிருத்திக் குழு அவரை வாழ்த்தி வரவேற்றது. இவர் கடந்த இரண்டு வருட காலமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் நிர்வாக முதுவிஞ்ஞான மாணி பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்தார் .

இவ்விதம் இரு வருடகால பயிற்சியை முடித்த 23 பேருக்கு நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் வைத்து நாட்டிலுள்ள பெரும் வைத்தியசாலைகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டொக்டர் பிரபாசங்கர் முன்னதாக ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றியிருந்தார்.

இருவருட வைத்திய நிர்வாக துறை பட்டப்பின் பயிற்சி முடித்து வைத்திய அத்தியட்சகராக தெரிவாகிய முதல் காரைதீவு வைத்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.இவர் பிரபல பல் வைத்திய அதிகாரி டொக்டர் தர்மலிங்கம் உமாசங்கரின் சகோதரராவார்.

SUNDAY OBSERVER ADZ It's what you want | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**

(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Badulla & Nuwaraeliya District**

**Hatton - 051 22 225 63**
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

**Hatton - 052 22 773 47**
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

**Nuwaraeliya - 052 22 341 34**
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

**Thalawakele - 071 7 236 799**
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

**Kotagala - 051 4 924 447**
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

**Haputale - 077 7 278 899**
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

**Bandarawela - 071 0 796 060**
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

**Kandy - 055 22 571 30**
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

**Haputale - 057 22 443 92**
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

**Lunugala - 055 22 639 84**
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

**Bandarawela - 057 22 301 60**
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha,' 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

**Badulla - 055 22 256 16**
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

**Passara - 055 22 888 89**
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

**Badulla - 072 7 998 533**
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

**Diyatalawa - 057 22 290 24**
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

**Colombo City Area**

**Borella - 0112268251**
1040 - Gunasiri Book Shop - No. 685, Maradana Road, Punchi Borella.

**Dematagoda - 075 7 222 878**
1044 - No. 166/17, Kolonnawa Road, Dematagoda.

**Colombo 02 - 078 5 200 648**
1046 - R. P. C. Jayawardana - Chiththampalam A Gardiner Mawatha, Colombo 02.

**Kirulapane - 071 5 439 396**
1051 - Ramani Book Shop - 27/A, High Level Road, Kirulapane.

**Mattakuliya - 011 2 521 160**
1060 - M. N. E. Ratnayake - No. 89, Church Road, Mattakuliya.

**Colombo 14 - 011 2 434 711**
1071 - A. L. F. D. Managama - No. 331, Leyards Broadway, Colombo 14.

**Wellawatta - 071 7 182 900**
1107 - No. 288, Vijaya Enterprise, Wellawatta.

**Colombo 15 - 077 7 510 139**
1226 - No. 45, Eli House Road, Colombo 15.

**Borella - 077 7 649 801**
1292 - No. 151/22, Cotta Road, Borella.

**Thimbirigasyaya - 0714414285**
2818 - Jayasinghe - No. P-06, Thimbirigasyaya Market, Thimbirigasyaya.

**Colombo 8 - 071 2 005 787**
2822 - Punchi Borella, Colombo 8.

**Delkanda - 070 777 99 99**
2622 - No. 4, High Level Plaza, Delkanda, Nugegoda.

**Galle District**

**Galle - 075 9 699 402**
3222 - J. A. S. Jayakodi - 28, P&J City, Gamini Mawatha.

**Ambalangoda - 091 22 557 44**
3132 - H. D. Mendis - 264, Cooperative Building, Main Street, Ambalangoda.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### TENDER FOR SUPPLY, INSTALLATION & MAINTAIN OF POINT OF CARE ANALYZER FOR TROPONIN REAGENT & CONSUMABLE BASIS

1. பின்வரும் அனலைசரின் (Analyser) வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி மனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

3. முன்னைய அனுபவமுள்ள நிகரான உபகரணத்தை வழங்கும் விலைமனுதாரர்கள் உற்பத்தியாளர்கள்/ முகவர்கள்/ கம்பனிகள் ஆக இருக்கலாம்.

| Q No. | Item | Qty | Tender Deposit |
|---|---|---|---|
| Q 239/24 | Point of Care analyzer for Troponin Reagent & Consumable basis | 01 | Rs.3500.00 |

4. **2024.06.07 ஆம் திகதியிலிருந்து 2024.06.26 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், **நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல்** அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

5.. விலைமனுக்கள் 2024.06.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளிப்பதற்கு ஆர்வமுள்ள விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாநகர சபை – அநுராதபுரம்

## பொது நூலகக் கட்டிடத்தை மறுசீரமைத்தல்

**AMC/2/1/6/1/5/2024**

1. பின்வருமாறு விபரிக்கப்படுவதும் மற்றும் 6 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான பொது நூலகக் கட்டிடத்தின் மறுசீரமைப்பு வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அநுராதபுரம் மாநகர சபையின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்.

2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் இடம்பெறும். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) இந்தப் பெறுகையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளாக CIDA நிறுவனத்தின் C7 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் (கட்டிட நிர்மாணம்)

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகளில் உள்ளடக்கமாக கடந்த 5 வருடங்களில் 3.5 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட இதனையொத்த பழைய கட்டிடங்களை மறுசீரமைத்தலை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் கடந்த ஐந்து வருடங்களில் இதனையொத்த மூன்று திட்டங்களில் பொறியியலாளர் (IESL அங்கத்துவம்) மற்றும் தொழில்நுட்ப அதிகாரி (NCT Civil/NVQ5) போன்றோரை பணியாளர்களாக ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அநுராதபுரம் மாநகர சபை, மாநகர ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் அநுராதபுரம் மாநகர சபையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 1000.00 இல. ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-06-09ஆம் திகதி முதல் 2024-07-08ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் அநுராதபுரம் மாநகர ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-07-09ஆம் திகதி 13.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரியிலுள்ள மாநகர சபைக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 89 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (2024-10-08)

9. சகல விலைமனுக்களுடனும் 50,000.00 இல. ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2024-11-11ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

மேற்கூறிய முகவரி(கள்) ஆனது,

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

**0252222275**
**மின்னஞ்சல்: planning2020@gmail.com**

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகள் மற்றும் கொள்வனவுகளுக்காக தகைமை வாய்ந்த தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாத இது தொடர்பில் ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து கண்டி மாவட்டச் செயலாளர் மற்றும் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-06-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இது தொடர்பான விபரங்களை கண்டி மாவட்டச் செயலகத்தின் இணையதளத்தின் (www.kandy.dist.gov.lk) பெறுகையின் கீழ் அல்லது மாவட்டச் செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**01. ஒப்பந்தம்**

| தொ. இல. | செயற்றிட்டம் | தேவையான ஆகக் குறைந்த CIDA பதிவு | மதிப்பீடு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 01 | உலப்பனை பெல்லேபிட்டிய வீதியை அபிவிருத்தி செய்தல் | C5, C6, C7, C8, C9 | 8.5 |

**02. வழங்கல்**

| தொ. இல. | செயற்றிட்டம் |
|---|---|
| 01. | டிஜிட்டல் ஸ்மார்ட்போர்ட் (Digital Smart Board) |
| 02. | மேசைக் கணனி, UPS, ஸ்கெனர் இயந்திரம் மற்றும் மடிக்கணனி |

**சந்தன தென்னக்கோன்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்டச் செயலாள் / அரச அதிபர்,**
**மாவட்டச் செயலகம், கண்டி.**

### இலங்கை துறைமுக அதிகாரசபை

## வெற்றிடங்கள்

இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பிக்கப்படுவது எந்த துறைமுகத்தின் வெற்றிடத்திற்கென விண்ணப்பப்படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு துறைமுகம் தொடர்பிலும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும்.

**பதவி : கடற் கல இணைப்பு அலுவலர் (காலி / திருகோணமலை) (Sea Traffic Cordinator)**

**(அ) சம்பளம் :**

சம்பள வகையீடு : 6:3 (SG3)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 53,425/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,150/=
(மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 145,000/= அளவினதாக இருக்கும்)

**(ஆ) தகுதித்திறன் :**

க.பொ.த (உ/தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கரையோர கடற் பயணங்களில் (N.C.V) ஈடுபடும் ST 3000 இற்குக் குறையாத கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையில் ஈடுபடும் பொருட்டு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் / அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ்.

அல்லது

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

உலகளாவிய கடல் சார் இடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைமை (Global Maritime Disaster Safety System) (GMDSS) சான்றிதழ் அல்லது அதற்கு சமனான வேறு சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ரேடார் கண்காணிப்பு சான்றிதழ் அல்லது அதற்கு சமனான சான்றிதழ்.

அத்துடன்

**அனுபவம் :**

கப்பலொன்றில் கடமைப் பொறுப்பு அலுவலரொருவராக ஒரு (01) வருட சேவைக் கால அனுபவம்.

**(இ) ஏனைய கட்டாய தேவைப்பாடுகள் :**

1. அதி உயர் எண்ணலை தகவல் பரிமாற்ற சாதனம் (ஏ.ர்.கு) உபயோகித்து சமிக்ஞை வழங்கும் அறிவு மற்றும் ஆற்றல்.
11. ஆங்கில மொழியில் சிறப்பாக பேசும் ஆற்றல்.

**(உ) வயதெல்லை :**

18 - 45 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல)

**(ஊ) குறிப்பு :**

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய நேர்முக மற்றும் / அல்லது செயன்முறை பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**கவனிக்க :**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப அதிகாரசபையின் எந்தவொரு பகுதி / பிரிவில் அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியில் சேவை புரிய உட்படுத்தப்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்), மனித வள மற்றும் நிருவாகப் பகுதி, “இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13” என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2024 ஜூன் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “கடற்கல இணைப்பு அலுவலர்” பதவிக்கு என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின்

# சுகாதார அமைச்சு

## மருத்துவ வழங்கல் பிரிவு

**மருத்துவ வழங்கல் பிரிவு மூலம் கீழ்க்காணும் செயற்றிட்டங்களுக்காக திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.**

| தொடர் இல | வேலை விடயத்தின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை தொகை |
|---|---|---|
| 01 | Medical supplies Management Information system (Pronto) Application Software, Database and server Hardware related all service | ரூ. 60,000.00 |
| 02 | MSD web site, Mail Server, DNS Proxy Server and Firewall related all services. | ரூ. 50,000.00 |
| 03 | Local Area Network of MSD and related services | ரூ. 40,000.00 |
| 04 | Data Centre UPS and Internal Power System | ரூ 15,000.00 |
| 05 | AC System of the Data Centre | ரூ 10,000.00 |

02. இதற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாக அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்கள் 2024.06.10 முதல் 2024.06.28 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் வேண்டுதல் கடிதமொன்றை நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொண்டு, மீளளிக்கப்படாத ரூபா. 2,000.00 தொகையை மருத்துவ வழங்கல் பணிப்பாளரின் பெயரில் காசாளர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அதன் பிறகு ஒரு உறையில் இட்டு அங்கு கேள்வின் பெயர், திறக்கப்படும் தினம் மற்றும் நேரத்தை குறிப்பிட்டு 2024.07.02 பி.ப. 2.00 இற்கு முன்பு பணிப்பாளர், மருத்துவ வழங்கல் பிரிவு, இல. 357, வனபத்தேகம விமலவங்ஷ ஹிமிமாவத்த, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து மருத்துவ வழங்கல் பிரிவில் அமைந்துள்ள கணக்காளர் (வழங்கல்கள்) அலுவலகத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் நேரில் பரீட்சித்துப்பார்க்கலாம்.

06. தாமதமான கேள்வி பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகோரல் முடிவடைந்தவுடன் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

07. இதற்கான மேலதிக தகவல்களை தொ.பே. இல. : 011-2694114 ஊடாக மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாக அதிகாரியிடம் விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**பெறுகைகுழு, மருத்துவ வழங்கல் பிரிவு,**
**இல. 357, வனபத்தேகம விமலவங்ஷ ஹிமிமாவத்த, கொழும்பு - 10**

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## பொது அறிவித்தல்

### ஸ்டார்லிங்க் லங்கா (பிரைவேட்) லிமிடட் உரிமம் வழங்குதல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் அலைக்கற்றையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

இலங்கையில் செய்மதியூடாக இணைய சேவையை வழங்குவதற்கு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **ஸ்டார்லிங்க் லங்கா (பிரைவேட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க **ஸ்டார்லிங்க் லங்கா (பிரைவேட்) லிமிடட்டிற்கு** சட்டத்தின் 22 பிரிவின் கீழ் உரிமம் வழங்குவதற்கு ஆணையம் பரிசீலித்து வருகின்றது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஸ்டார்லிங்க் லங்கா (பிரைவேட்) லிமிடட்டிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2024.06.24** திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு

பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி : 011-2689345 பெக்ஸ் : 011-2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**BID No.: 076/T/2024**

### கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பேப்பர் துவாய் விநியோகிக்கும் சாதனத்திற்கான ( டிஸ்பென்சர்) (230 MM X 230 MM) அளவுள்ள பல்மடிப்புள்ள 84,000 பெக்கட்டுக்களை வழங்கல்

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பாவிப்பதற்காக பேப்பர் துவாய் விநியோகிக்கும் சாதனத்திற்காக (டிஸ்பென்சர்) 230 MM X 230 MM அளவுள்ள பல்மடிப்புள்ள 84,000 பெக்கட்டுக்களின் வழங்கலுக்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக எட்டாயிரம் ரூபாவை (8,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.06.10 ஆம் திகதியிலிருந்து 2024.07.02 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 ஜூலை 03 ஆம் திகதி புதன்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஐந்து இலட்சத்து எண்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு (580,000 இ. ரூபா) நிகரான விலைமனு உத்தரவாதமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து **011-2264103/011-2264104** ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் **head.scm@airport.lk** என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது **www.airport.lk** என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை இராணுவம்

### 2024ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

2024ஆம் வருடத்தினுள் இலங்கை இராணுவத்தின் தேவைப்பாடுகளுக்காக பின்வரும் பொருட்களை தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | அளவு | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | 75th Army Anniversary Medal Standard with Ribbon | 10000 எண்ணிக்கைகள் | 2024-06-07 முதல் 2024-07-07 வரை | 2024-07-08ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| 2. | 75th Army Anniversary Medal Miniature with Ribbon | 5000 எண்ணிக்கைகள் | | |

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் இணைய தளத்தின் ஊடாக அல்லது 0112-987531, 0112-987537 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
   - அ. www.promise.lk
   - ஆ. www.army.lk

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

# கேள்வி கோரல்

## சுகாதார அமைச்சு

## மருத்துவ வழங்கல் பிரிவு

மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவையான கீழ்க்காணும் உருப்படிகளை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி | அளவு | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணைமுறி |
|---|---|---|---|
| 1. Cloud E-mail Services | 01 | ரூ.1,500.00 | ரூ.15,000.00 |

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறையில் (NCB) நடைபெறும்.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கீழ்க்காணும் ஆவணங்களை வழங்கிய பின்னர், ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை, 2024.06.07 முதல் 2024.06.20 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மருத்துவ வழங்கல் பிரிவின் வழங்கல் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
   - (a) பணிப்பாளர், மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்படும் எழுத்துமூல விண்ணப்பமொன்று
   - (b) வியாபார பதிவுச் செய்தலை உறுதி செய்யும் கடிதம்
   - (c) மேலே குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை காசாக மருத்துவ வழங்கல் பிரிவின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
3. முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பொறியிடப்பட்ட கடித உறைகள் இரண்டில் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என வேறுவேறாக இட்டு அக்கடித உறைகள் இரண்டையும் மேலும் கடித உறையொன்றில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் 'Cloud Email Services' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
4. மேற்படி இல.03 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.06.19 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதம கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தில் கேள்விப் பெட்டியில் கையோடு கொணடுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது. கேள்விகள் திறத்தல் பிரதம கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் நடைபெறும்.
5. கேள்வி ஆவணங்களை அனுப்ப வேண்டிய முகவரி "பிரதம கணக்காளர் (வழங்கல்கள்), மருத்துவ வழங்கல்கள் பிரிவு, இல. 357, வணபத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்த, கொழும்பு - 10" ஆகும்.
6. சகல கேள்விகளும் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் எந்த வர்த்தக வங்கியினாலும் விநியோகிக்கப்படும் கேள்விப் பிணையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அக்கேள்விப் பிணை, கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் இருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
8. இது பற்றிய ஆர்வமுள்ள தகைமையான கேள்விதாரர்களுக்கு கொழும்பு - 10 மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதம கணக்காளர் (வழங்கல்கள்) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(தொ.பே.இல. - 011 - 2692468)

**பணிப்பாளர்,**
**மருத்துவ வழங்கல் பிரிவு,**
**இல. 357, வண பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்த,**
**கொழும்பு - 10**



# சிறு விளம்பரம்





மோட்டார் வாகனங்கள்



106
கார்கள்
விற்பனைக்கு

CAR-7678 RENAULT KIWID 2016 CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 037624

111
ஹொண்டா கார்கள்
விற்பனைக்கு

302-088 6 HONDA CORSA 1 997, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542 958 . 037618



117
வேன்கள்
விற்பனைக்கு

NW - PD -5631 MI-CRO - MPV JUNIOR 111 - V AN - 2012 - CHAMPAGNE கூடிய விலைக் கோரிக்கைக்கு. C BC பினான்ஸ் லி மிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 037808



119
பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

DAD-4579 CAKY - 2015, MINI TRUCK கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலி ப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 . தொ.பே 07 14542958 . 037606



122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

BG H-5146 YAMAHA RAY ZR 2017, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0 7 1 1 2 1 0 8 1 0 . 037612

BIZ-8797 TVS NTORQ - 2020, MOTOR CYCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 037614

NW - AAP-7820 - BA-JAJ - R E - THREE WHEELER - 2014 - JET B LACK கூடிய விலைக் கோரிக்கைக்கு. C BC பினான்ஸ் லி மிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 037800


Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with.




Green Light for Online Transfer Lake House Branch Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343


## கூட்டிணைவு அறிவித்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் கீழ் பாகொம பூட் மோல் (பிறைவெட்) லிமிடெட் (PV11975) உடன் கூட்டிணைவதற்கு பாகொட சுப்பர் சிட்டி (PVT) LTD (PV128544) முன்மொழியப்பட்டதோடு அதன்படி பாகொம பாகொட சுப்பர் சிட்டி (PVT) LTD ஆனது பாகொம பூட் மோல் (பிறைவெட்) லிமிடெட் இன் ஏக உரிமையாளர் என இத்தால் அறியத்தரப்படுகிறது. கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட கூட்டிணைவு சான்றிதழில் தரப்பட்டுள்ள திகதியில் இருந்து இந்த முன்மொழியப்பட்ட கூட்டிணைவு நடைமுறைக்கு வரும்.

**சபை பணிப்பாளர்கள்**

## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+ 94 112429342
+ 94 112429343

## பெயர் மாற்றம்

46, Yahalathenna Kandy எனும் முகவரியில் வசித்து வரும் நான் அறியத் தருவதாவது எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் எனது பெயர் **Mohammed Mubassir** என்பதற்குப் பதிலாக தவறுதலக **Mohammed Mubafassir** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை திருத்தம் செய்யுமுகமாக எனது பெயரை **Mohammed Mubassir** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்

**M.M.M. Mubassir**

## கூட்டிணைவு அறிவித்தல்

2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் கீழ் பாகொட சுப்பர் சிட்டி (PVT) LTD (PV128544) உடன் கூட்டிணைவதற்கு பாகொம பூட் மோல் (பிறைவெட்) லிமிடெட் (PV11975) முன்மொழியப்பட்டதோடு அதன்படி பாகொம பூட் மோல் (பிறைவெட்) லிமிடெட் ஆனது பாகொட சுப்பர் சிட்டி (PVT) LTD இன் ஏக உரிமையாளர் என இத்தால் அறியத் தரப்படுகிறது. கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட கூட்டிணைவு சான்றிதழில் தரப்பட்டுள்ள திகதியில் இருந்து இந்த முன்மொழியப்பட்ட கூட்டிணைவு நடைமுறைக்கு வரும்.

**சபை பணிப்பாளர்கள்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

## மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு (மேல் மாகாணம்)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் பட்டியலில் உள்வாங்காதவர்களாகவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 011-2321980/நீடிப்பு-264) என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2024 ஜுன் 06 ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஜுன் 06 ஆம் திகதி முதல் 2024 ஜுன் 19 ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் PE/2024/AV/12, KI/13, HO/14, HO/15, NE/16 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு 2024 ஜுன் மாதம் 20 ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். PE/2024/AV/12, KI/13, HO/14, HO/15, NE/16 and 1030 hrs on 28th June 2024 PE/2024/KA/17. பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. சுய விருப்பத்தின் பேரில் நேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் PE/2024/AV/12, KI/13, HO/15, NE/16 இற்கு 2024 ஒக்டோபர் 16 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையிலும் PE/2024/KA/17 இற்கு கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை / ரொக்கப் பணத்தில் முறியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எவ்விதமான செலவுகளுக்கும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்புக்கூற மாட்டாது.
10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்நேரத்திலும் செயற்பாடுகளை இரத்துச் செய்வதற்கும் மேற்கொள்ளாத மற்றும் பொருத்தமான எண்ணிக்கையாகக் கருதப்படும் எந்தவொரு எண்ணிக்கைக்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலை கட்டுப்படுத்தும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

### விலைமனுக்கூறல் அட்டவணை - 2024

| தொ. இல | நிதி வளம் | நி.பொ. பிரிவு | கேள்வி இல. | செயற்றிட்டப் பெயர் | செயற்றிட்ட விபரங்கள் | பெசேவ நீங்கலாக கேள்வியிடக்கூடிய தொகை (மில்.ரூ) | CIDA தரம் | செயற்றிட்ட காலம் (மாதங்கள்) | தக்கவைக்கும் காலம் (மாதங்கள்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம். பெசேவ 18% மற்றும் SSCL 2.5% (ரூ) | பிணை முறியின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | ரொக்கப் பணம் | வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதிப் பிணை |
| 1. | PSDG | அவிசாவளை (ஹோமாகம) | PE/2024/AV/12 | மீகொட தம்பே பேருகெட்டிய வீதி | மதகை அகலப்படுத்தல் (CH 1+000) | 2.60 | சி-07 அல்லது சி-08 (வீதிகள்/ பாலங்கள்) | 2 | 12 | 2419.00 | 19,500.00 | 39,000.00 |
| 2. | PSDG | கிரிந்திவல (மஹர) | PE/2024/KI/13 | நாரங்வள ஹலும்பஹர வீதி | மதகை அகலப்படுத்தல் (CH 1+500-1+600) | 0.98 | சி-08 அல்லது சி-09 (வீதிகள்/ பாலங்கள்) | 2 | 12 | 2419.00 | 7385.00 | 14,770.00 |
| 3 | PDG-DCC | ஹொரண (ஹொரண) | PE/2024/HO/14 | பாதுக்க குருகொட வீதி | மதகை அகலப்படுத்துதல் மற்றும் பரிசீலனை செய்தல் (10/1) | 4.47 | சி-07 அல்லது சி-08 (வீதிகள்/ பாலங்கள்) | 2 | 12 | 2419.00 | 33500.00 | 67,000.00 |
| 4. | PDG-DCC | ஹொரண (ஹொரண) | PE/2024/HO/15 | ஓலபொடுவ தளகள வீதி | மதகை அகலப்படுத்துதல் (1/7) | 7.94 | சி-06 அல்லது சி-07 (பாலங்கள்) | 2 | 12 | 3628.50 | 58800.00 | 117,600.00 |
| 5. | PDG-DCC | நீர்கொழும்பு (கட்டான) | PE/2024/NE/16 | தண்டுகம ரத்தொலுவ வீதி | பெட்டி மதகின் மீளநிர்மாணம் (3/1) | 6.86 | சி-06 அல்லது சி-07 (வீதிகள்/ பாலங்கள்) | 2 | 12 | 3628.50 | 51425.00 | 102,850.00 |
| 6. | PDG/PRPTA | களுத்துறை (அளுத்கம) | PE/2024/KA/17 | அளுத்கம பஸ் நிலைய அபிவிருத்தி - III கட்டத்தின் 1 ஆம் படிமுறை | கழிவறை தொகுதி மற்றும் ஓய்வு அறையின் நிர்மாணம் | 24.51 | சி-05 அல்லது சி-06 (கட்டிடங்கள்) | 3 | 12 | 7257.00 | - | 367,800.00 |

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு
## இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

### 2024 ஆம் ஆண்டிற்காக பொலித்தீன் பைகளை வழங்குவதற்காக விலைமனுக்களுக்கான அழைத்தல்

**கேள்வி ஆவண இல.: P/08/02/2024/01**

1. பின்வரும் பொலித்தீன் பைகளின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (கீழ் மட்டம்) தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| அம்ச இல. | பொலித்தீன் பைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 3.5”x 3.5” x 18” Gauge 500 (7” x 18” – Gauge 500) | 600,000 |

2. கேள்வி ஆவணக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்வி ஆவணக் கோரல் முறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, காணஹேன, 465 ஆம் இலக்கத்திலுள்ள இறப்பர் அபிவிருத்தி திணைக்கள நிருவாகத்திற்காக பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. இந்த அழைத்தலில் பொலித்தீன் பைகளின் உற்பத்தியாளர்கள்/வழங்குநர் அனைவரும் பங்கு பற்றலாம்.
5. 2024.06.07 ஆம் திகதியிலிருந்து 2024.06.28 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணிக்கு முன்னராக 2024.07.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. கேள்வி ஆவணங்கள் கீழேயுள்ள முகவரியில் 2024.07.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும். 2024.07.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் உரித்தான விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்கள் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 200,000 ரூபா பெறுமதியானதுமான விலைமனு பாதுகாப்பொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பாதுகாப்பானது 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய மட்டம்),**
**இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 465, காணஹேன, கடுவெல வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2889446/011-2889447**
**தொலைநகல் இலக்கம்.: 011- 2889484**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

## கல்வி அமைச்சு

## திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சிக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு

## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் (CGTII)

# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைக்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவக பணிப்பாளர்/அதிபர் கோருகின்றார்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | இடைநிகழ்வுகள் மற்றும் பெசேவ நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு (மில்லியன் இ.ரூபாவில்) | CIDA தரம் | விலைமனுப்பிணை முறி (இ.ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|---|---|
| CGTTI/TB/01/02/CIVIL/2024 | மர யன்னல்களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல் | 3.00 | சி-8 மற்றும் சி-7 அல்லது எஸ்பி-4 மற்றும் மேற்பட்டது | 20,000.00 | (60 நாட்கள்) |
| CGTTI/TB/01/38/2024 | 110 Kw on Grid solar power முறையை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | 200,000.00 | (90 நாட்கள்) |

2. வேலையானது மேலே கூறப்பட்டுள்ள விளக்கத்தை அடக்கியுள்ளது.
3. ''விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலானது) 50 மில்லியனுக்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iv)'' என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் கட்டிட நிர்மாணம், பராமரிப்பு அல்லது தச்சுவேலை மற்றும் மூட்டுவேலை ஆகியவற்றில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் தற்போது பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிருத்தல் வேண்டும். (CGTII/TB/01/02/CIVIL/2024 இற்கு மாத்திரம்)
5. விலைக்கூறல்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என குறிப்பிடப்பட்டு 2024.06.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், 582, காலி வீதி, கல்கிசை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைக்கூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கூறல்கள் சமுகமளிக்க ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் அவற்றை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
6. நிறுவகத்தின் மாநாட்டு அறையில் 2024.06.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
7. 2024.06.07 ஆம் திகதியிலிருந்து 2024.06.27 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2,000 இலங்கை ரூபாவை ஒவ்வொரு ஆவணத்திற்கும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,**
**582, காலி வீதி**
**கல்கிசை.**

# இந்தியா-பாக். போட்டி நடைபெறும் நியூயோர்க் ஆடுகளம் மீது அதிருப்தி

## போட்டியை தொடரும் ஐ.சி.சி. நிலைப்பாட்டில் உறுதி

நியூயோர்க்கின் தரமற்ற ஆடுகளம் பற்றிய கவலை அதிகரித்திருக்கும் நிலையில் டி20 உலகக் கிண்ண போட்டி அட்டவணையில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது என்று சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) தெரிவித்துள்ளது.

நசவு கௌண்டி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் வைக்கப்பட்ட ஆடுகளத்தில் எதிர்வுகூற முடியாத தன்மை குறித்தே கவலை அதிகரித்துள்ளது.

இங்கு நடைபெற்ற முதலாவது போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இலங்கை அணி 77 ஓட்டங்களுக்கு சுருண்டது. இது டி20 சர்வதேச கிரிக்கெட்டில் இலங்கையின் மிகக் குறைந்த ஓட்டங்களாக இருந்தது. இதேநேரம் கடந்த புதன்கிழமை நடந்த போட்டியில் இந்தியாவுக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 96 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இந்நிலையில் ஆடுகளத்தில் எதிர்வுகூற முடியாத வகையில் ஏற்படும் பௌன்ஸர் பந்துகளால் வீரர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபாயம் குறித்து இந்திய அணி அதிருப்தியை வெளியிட்டிருப்பதாக தெரியவருகிறது.



ஐசன்ஹோவர் பூங்காவில் உள்ள இந்த மைதானத்திலேயே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09) தொடரின் முக்கியமான போட்டியான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நடைபெறவுள்ளது. இங்கு 32,000 ரசிகர்கள் பார்வையிடக்கூடிய வசதி உள்ளது.

முன்னர் கைவிடப்பட்ட போட்டிகளை பகுப்பாய்வு செய்து இது தொடர்பில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் ஆய்வு செய்வதாக தெரியவருகிறது.

எவ்வாறாயினும், இயற்கை ஆடுகளங்கலான புளோரிடா அல்லது டெக்சாஸுக்கு நியூயோர்க் போட்டியை மாற்றும் எந்த ஒரு திட்டமும் இல்லை என்ற நிலைப்பாட்டில் ஐ.சி.சி. அதிகாரிகள் தொடர்ந்தும் உள்ளனர்.

# பரி தோமையருக்கு FONDRE அனுசரணை






பிரமிட் வில்மார் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் சந்தைப்படுத்தப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்ற FONDRE தயாரிப்பு, எதிர்வரும் பாடசாலைகள் ரக்பி பருவகாலத்தில் கல்கிசை பரி தோமையர் கல்லூரியின் ரக்பி அணிகளுக்கு பிரதான அனுசரணையாளராக செயற்படவுள்ளது.

பாடசாலைகள் ரக்பி பருவகாலம் எதிர்வரும் ஜுன் 15 அன்று ஆரம்பமாகவுள்ளது. இதில் ஏனைய பிரபலமான பாடசாலைகளுடன் பரி தோமையர் கல்லூரி மோதவுள்ளது.

# ரோயல் ரக்பி பருவம் ஜூன் 15இல் ஆரம்பம்



கொழும்பு ரோயல் கல்லூரி எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி நடைபெறும் கண்டி, கிங்ஸ்வுட் கல்லூரியுடனான போட்டியுடன் பாடசாலைகளுக்கு இடையிலான ரக்பி தொடரை ஆரம்பிக்கவுள்ளது.

இதில் ரோயல் கல்லூரி, கண்டி திருத்துவ கல்லூரிக்கு எதிரான 78ஆவது பிரம்பி ஷீல்ட் பலப்பரீட்சையின் முதல் கட்ட போட்டி உட்பட நான்கு போட்டிகளை நடத்தவுள்ளது. தவிர, புனித தோமஸ் மற்றும் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக்கு எதிரான மற்ற பாரம்பரிய போட்டிகளும் இதில் அடங்கும்.

திவைன் பெரேரான ரோயல் கல்லூரியின் தலைவராக செயற்படுவதோடு புவனேக சேனநாயக்க மற்றும் யெஹான் வீரசூரிய உப தலைவர்களாக செயற்படுகின்றனர்.

இதில் ரோயல் கல்லூரிக்கான பிரதான அனுசரணையாளர் மற்றும் பிரதான நிகழ்ச்சி அனுசரணையாளராக தேசிய அபிவிருத்தி வங்கி இடம்பெறுவதோடு அணிக்கான பிரதான அனுசரணையாளராக பிரண்டிக்ஸ் லங்கா லிமிடட் நிறுவனம் முன்வந்துள்ளது. ஊபர் ஈட்ஸ் நிகழ்ச்சி இணை அனுசரணையாளராக உள்ளது.

# ஆஸி. வெற்றி ஆரம்பம்




டி20 உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் போட்டியில் ஓமானை வீழ்த்தியதோடு முதல் முறை உலகக் கிண்ணத்தில் களமிறங்கிய உகண்டா, பப்புவா நியூ கினிக்கு எதிராக 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இலங்கை நேரப்படி பிரிட்ஜ்டவுனில் நேற்று (06) நடைபெற்ற பி குழுவுக்கான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னரின் அரைச்சதத்தின் உதவியோடு 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஓமான் அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களையே பெற்றது.

இதேவேளை புரவிடன்ஸில் நடைபெற்ற போட்டியில் பப்புவா நியு கினியை 77 ஓட்டங்களுக்கு சுருட்டிய உகண்டா அணி அந்த வெற்றி இலக்கை 7 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

முன்னதாக இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு இந்திய அணி தனது முதல் உலகக் கிண்ணப் போட்டியில் அயர்லாந்தை எதிர்கொண்டது. அயர்லாந்தை 96 ஓட்டங்களுக்கு சுருட்டிய இந்தியா அந்த வெற்றி இலக்கை 2 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

# ஞாயிறன்று சிட்டி லீக் தேர்தல்

**பிரின்ஸ் குணசேகர**



இலங்கையின் பிரதான கால்பந்து அமைப்பான சிட்டி கால்பந்து லீக்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலில் 12 பதவிகளுக்காக 28 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இதன்படி 20 வருடங்களில் முதல் முறையாக சிட்டி கால்பந்து லீக் தேர்தலில் கடும் போட்டி நிலவி வருகிறது. கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரன் இம்முறை தனிப்பட்ட காரணங்களுக்காக எந்த ஒரு பதவிக்கும் போட்டியிடவில்லை.

இம்முறை தலைமை பதவிக்கு விக்டர் விளையாட்டுக் கழகத்தின் சபீர் ரஹீம் மற்றும் ஜாவா லேன் விளையாட்டுக் கழகத்தின் மெக்சி லேடர்ன் ஆகியோர் போட்டியிடுகின்றபோதும் மெக்சி கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகுவதற்கு தயாராகி வருகிறார். செயலாளர் பதவியை குரே விளையாட்டு கழகத்தின் அன்டன் ஜோய்க்கு வழங்கும் நோக்கில் மொரகஸ்முல்ல விளையாட்டு கழகத்தின் சட்டத்தரணி சமன் ஜே பீரிஸ் போட்டியில் இருந்து விலகுவதாக கூறப்படுகிறது.

சிட்டி கால்பந்து லீக் தேர்தலை வாக்களிப்பு இன்றி நடத்துவது சிறந்தது என்று இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் தலைவர் ஆர். புவனேந்திரன் 20 ஆண்டுகள் தலைவராக பதவி வகித்தார்.

# எச்5என்2 வைரஸால் முதல் மரணம் பதிவு



எச்5என்2 வகை பறவைக் காய்ச்சல் காரணமாக மெக்சிகோவில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வகை காய்ச்சலால் மனிதர் ஒருவர் இறந்திருப்பது இதுவே முதல்முறை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

காய்ச்சல் ஏற்பட்டதுடன் மூச்சுத் திணறல், வயிற்றுப்போக்கு, வாந்தி ஆகியவற்றால் கடுமையாக அவதியுற்ற அந்த 59 வயது மெக்சிகோ நாட்டவர் ஏப்ரல் 24ஆம் திகதியன்று உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. அவர் பறவைகள் அல்லது விலங்குகளுடன் தொடர்பில் இருக்கவில்லை என்றும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் உலக சுகாதார நிறுவனம் கூறியது.

மெக்சிகோ சிட்டியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அதே நாளில் அவர் உயிர் பிரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மெக்சிகோவில் உள்ள சில பறவைகள் எச்5என்2 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சுவிஸ் அமைதி மாநாடு: செலன்ஸ்கி அழைப்பு



உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவற்காக சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறவிருக்கும் அமைதி மாநாட்டில் பங்குபற்ற ஆசிய பசுபிக் பிராந்தியம் முன்வர வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி விளடிமிர் செலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத் தலைவர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் உள்ளிட்டவர்கள் பங்குபற்றிய இம்மாநாட்டில் நாடுகள், பிராந்தியங்கள் மத்தியில் கூட்டுறவை வளர்ப்பது குறித்தும் பிராந்திய பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. சர்வதேச அமைதி மாநாடு எதிர்வரும் ஜூன் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் ஐ.நா. புகலிடம் மீது இஸ்ரேல் தாக்குதல்: 40க்கும் மேற்பட்டவர்கள் பலி

## 9 மாதங்களை தொட்ட போரில் 36,654 பலஸ்தீனர்கள் பலி



மத்திய காசாவில் இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் நிரம்பி வழியும் ஐ.நா. பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் 40க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

நுஸைரத் அகதி முகாமில் உள்ள பாடசாலையின் மேல் மாடி வகுப்புகள் மீது இரு ஏவுகணைகள் கொண்டு இஸ்ரேல் போர் விமானம் தாக்குதல் நடத்தியதாக உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஹமாஸ் நிலை ஒன்றை இலக்கு வைத்தே துல்லியமாக தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் இஸ்ரேல் கொடிய படுகொலை ஒன்றை செய்ததாக ஹமாஸ் ஊடக அலுவலகம் குற்றம்சாட்டியது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அம்புலன்ஸ் மற்றும் மீட்புக்குழுவினர்கள் காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துமனைக்கு அழைத்துச் சென்றனர். வகுப்பறைகள் தகர்க்கப்பட்டு உயிரிழந்தவர்களின் உடல்கள் போர்வைகளால் போர்த்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

'இந்தப் போர் போதும்! நாம் பல தடவைகள் இடம்பெயர்ந்து விட்டோம். எமது குழந்தைகளை அவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும்போது கொலை செய்கிறார்கள்' என்று இந்த தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் தெரிவித்தார்.

இந்த பாடசாலை ஹமாஸ் கட்டளையகமாக இருந்தது என்ற இஸ்ரேலின் குற்றச்சாட்டை ஹமாஸ் ஊடக அலுவலகத்தின் பணிப்பாளர் இஸ்மைல் அல் தவப்தா மறுத்துள்ளார். 'பல டஜன் இடம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடிய குற்றத்தை நியாயப்படுத்துவதற்கு ஆக்கிரமிப்பாளர்கள் இட்டுக்கட்டப்பட்ட கதைகளை குறிப்பிடுகின்றனர்' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

மத்திய காசாவில் இஸ்ரேல் புதிய படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இங்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இஸ்ரேல் நடத்தும் சரமாரி தாக்குதல்களில் 100 க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று சூரியோதயத்திற்கு முன்னர் நுஸைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனை வட்டாரம் குறிப்பிட்டுள்ளது. அந்தப் பகுதியில் புரைஜ் மற்றும் அல் பகாஸி முகாம்களிலும் இஸ்ரேல் உக்கிர செல் தாக்குதல்களை நடத்தி வருவதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மறுபுறம் தெற்கு நகரான ரபாவிலும் இஸ்ரேலின் தாக்குதல் நீடிப்பதோடு அங்கு கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசியதாக உள்ளூர் தரப்பினரை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலுடன் ஆரம்பமான இந்தப் போர் இன்றுடன் எட்டு மாதங்களை பூர்த்தி செய்யும் நிலையில் காசா பகுதி முழுவதும் பேரழிவு நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 68 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 235 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த எட்டு மாதங்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 36,654 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 83,309 பேர் காயமடைந்துள்ளனர்.

### ஹமாஸ் உத்தியில் மாற்றம்

எனினும் ஹமாஸ் அமைப்பு தாக்கிவிட்டு மறைந்து செல்லும் உத்தியை கையாண்டு வரும் நிலையில் அங்கு தமது நிலையை தக்கவைப்பதில் இஸ்ரேல் இராணுவம் சிரமத்தை சந்தித்து வருவதாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

காசா போருக்கு முன்னர் 20,000 தொடக்கம் 25,000 இருந்த ஹமாஸ் போராளிகளின் எண்ணிக்கை தற்போது 9,000 மற்றும் 12,000 இற்கு இடையே குறைந்திருப்பதாக அமெரிக்க தரப்புகள் குறிப்பிட்டுள்ளன. இந்நிலையில் அந்தப் போராளிகள் தற்போது இஸ்ரேலிய படைகள் மீது திடீர் தாக்குதல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட குண்டுகளை வீசி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான உத்தி சுரங்கப்பாதைகள் வழியாக காசாவுக்கு வரும் ஆயுதங்கள் மற்றும் வெடிக்காத ஆயுதங்களை மீள பயன்படுத்தல் அல்லது இஸ்ரேலிய படைகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களைக் கொண்டு ஹமாஸுக்கு தமது போர் நடவடிக்கையை மேலும் பல மாதங்களுக்கு நீடிக்க உதவுகிறது என பெயர் குறிப்பிடாத அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு பின்னர் அந்த இடத்தில் இருந்து உடன் பின்வாங்குவது, மறைந்து கொள்வது, மீண்டும் ஒருங்கிணைவது மற்றும் குறித்த பகுதியில் இருந்து போராளிகளை அகற்றியதாக இஸ்ரேல் நம்பும் பகுதியில் மீண்டும் ஒன்று திரளும் திறனை பலஸ்தீன போராளிகள் வெளியிட்டு வருவதாக அமெரிக்க நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காசா குடியிருப்பாளரான வசாம் இப்ராஹிமும் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் இதனை உறுதி செய்தார். 'தமது எல்லைக்குள் வரும் இஸ்ரேல் துருப்புகள் மீது உடன் தாக்குதல் தொடுக்கும் உத்தியில் இருந்து ஹமாஸ் விலகியுள்ளது' என்று அவர் குறிப்பிட்டார்.

'அவர்களின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது. அவர்கள் படைகளை நிலைநிறுத்தும் வரை காத்திருந்துவிட்டு பின்னர் திடீர் தாக்குதல்களை நடத்துகின்றனர்' என்றும் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் வெளியிட்டபோதும் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிடம் இருந்து இன்னும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்நிலையில் போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்று தொடர்பில் கட்டார் தலைநகர் டோஹாவில் அந்நாட்டு பிரதமர் மற்றும் எகிப்து உளவுப் பிரிவுத் தலைவர் ஆகியோர் ஹமாஸுடன் கடந்த புதனன்று பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாக அது தொடர்பில் தெரிந்த வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இஸ்ரேல் முடிவற்ற பேச்சுவார்த்தைகளை விரும்புவதாக பெய்ரூட்டில் உள்ள ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் குற்றம்சாட்டி இருப்பதோடு தமது முக்கிய கோரிக்கையை நிறைவேற்றாத எந்த ஒரு திட்டத்தையும் சாதகமாகவும் தீவிரமாகவும் எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்று ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

காசா போர் பிராந்தியத்திலும் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் லெபனானில் இருந்து இரு ஆளில்லா விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். காசா போர் தொடக்கம் இஸ்ரேல் மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையே பரஸ்பரம் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் லெபனான் எல்லையில் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தப் போவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ R/03/2024 | யால தேசிய பூங்காவின் அரங்கமுவ பந்துவெவ வீதியைப் பழுது பார்த்தல் | 16.0 | C7/C6/C5 (வீதி) | 4,850.00 | 240,500.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 02 | WL/02/20/ R/04/2024 | யால தேசிய பூங்காவின் அரங்கமுவ குருலுகம வீதியைப் பழுது பார்த்தல் | 18.0 | C7/C6/C5 (வீதி) | 5,500.00 | 275,000.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 03 | WL/02/20/ R/05/2024 | யால தேசிய பூங்காவின் அரங்கமுவ கட்டகமுவ வீதியைப் பழுது பார்த்தல் | 25.0 | C7/C6/C5 (வீதி) | 7,000.00 | 378,000.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்.

03. கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரராக இருத்தல் வேண்டும்.

04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2024.07.10 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்டத்தைப் பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஒப்பந்தம் வழங்குவதற்காக கீழ்க்காணும் தகைமைகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- கடந்த 05 வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் வருடாந்த பரிமாணம் குறைந்த பட்சம் ரூபா 53.0 மில்லியன் ஆக இருத்தல் வேண்டும்.
- ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த முற்பண கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய உடன்பாட்டு இணைக்கப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட பின்பு குறைந்தபட்சம் திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் அளவு ரூ. 8 மில்லியனுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

07. கேள்விகளை சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களாலும் கடந்த 06 மாதங்களின் வங்கிக் கூற்று மற்றும் 05 வருடங்களுக்குள் முடிவுறுத்தப்பட்ட அதற்குச் சமமான 02 வேலைகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் 10 மில்லியனுக்கு மேற்படும் வேலைக்காக கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கக்கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2024.07.10ம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

09. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2024.07.11 பி.ப. 2.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2024.07.11) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

11. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

12. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகுசெலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/03/2024 | யால தேசிய பூங்காவின் டெம்பவ பீட்டு அலுவலகத்தை பழுதுபார்த்தல் | 6.4 | C6/C7/C8 (கட்டிட) | 2500.00 | 97,500/- 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2024.07.09 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04 கேள்விகளை சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களாலும் கடந்த 06 மாதங்களின் வங்கிக் கூற்று மற்றும் 05 வருடங்களுக்குள் முடிவுறுத்தப்பட்ட அதற்குச் சமமான 02 வேலைகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் 10 மில்லியனுக்கு மேற்படும் வேலைக்காக கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கக் கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2024.07.09ம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்டங்களை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2024.09.10 பி.ப. 2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2024.07.10) பி.ப. 3.00 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

09. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

10. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகுசெலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/04/2024 | தந்திரிமலை வன பாதுகாப்பு அலுவலகத்தில் கராஜை நிர்மாணித்தல் | 5.6 | C6/C7/C8 (கட்டிடம்) | 2150.00 | 85,000.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 02 | WL/02/20/ B/05/2024 | விலச்சிய வன பாதுகாப்பு அலுவலகத்தில் கராஜை நிர்மாணித்தல் | 5.6 | C6/C7/C8 (கட்டிடம்) | 2150.00 | 85,000.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2024.07.11 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களாலும் கடந்த 06 மாதங்களின் வங்கிக் கூற்று மற்றும் 05 வருடங்களுக்குள் முடிவுறுத்தப்பட்ட அதற்குச் சமமான 02 வேலைகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் 10 மில்லியனுக்கு மேற்படும் வேலைக்காக கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கக்கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2024.07.11ம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்டங்களை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. கேள்விதாரர்களுக்கு மேற்படி இரு கேள்விகளுக்கும் அல்லது ஒரு கேள்விக்காக கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.

09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2024.07.12 பி.ப. 2.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2024.07.12) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

10. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி) ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

11. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகுசெலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

---

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/02/2024 | புத்தளம் உதவி பணிப்பாளர் பணிமனையின் முற்றத்தை Interlock செய்தல் கராஜை தயாரித்தல் மற்றும் நீர் தாங்கியின் மேல் அறையை நிர்மாணித்தல் | 15.9 | C5/C6/C7 (கட்டிடம்) | 4,850.00 | 240,000.00 2024.09.20 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

